கிரஹலக்ஷ்மி

(௨)

Y15m 211
N37 GR
N37·1·6
184248

027
M-3660

# க்ருஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

1st JUNE
1937



Y15M211
N37GR
N3..6.
1842-48

# GRIHALAKSHMI

ILLUSTRATED LADIES' MAGAZINE

No. 6




## ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கபஜுரம் முதலிய எல்லா வித ஜுரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்திசெய்வதில் முதன்மையானது

## அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த 25 வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணநிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளுவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இதன் விலை | 6 | அவுன்ஸ் புட்டி | ரூ. | 2 | 8 | 0 |
| ,, | 3 | ,, | ,, | 1 | 8 | 0 |
| ,, | 1 | ,, | ,, | 0 | 8 | 0 |

கேசரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்




# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

7-JUN 1937 MADRAS

பிரசுரிப்பவர்

டாக்டர் கே. என். கேசரி

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] ஜுன் 1937 [இதழ் 6

PRINTED AT THE LODHRA PRESS, EGMORE, MADRAS.



184 248



## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணா 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணா போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிறிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனாவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே.என். கேசரி, பிரசுரிப்பவர், தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.





போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்

இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்,

பம்பாய், மதராஸ், கல்கத்தா.




சிறந்த கெடியாரங்கள்! மலிவான விலை!!

நாங்கள் எல்லாவிதமான கைகெடியாரம், டைம்பீஸ்கள், பெரிய சுவர் கடியாரங்கள் நேரே தருவித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்று வருகிறோம். கவர்மெண்டுக்கும் சப்ளை செய்து வருகிறோம். ரோல்டுகோல்டு கைவளையல் எங்களிடம் கிடைக்கும். கெடியார சில்லரை சாமான்களும் கிடைக்கும்.

| | |
|---|---|
| நெப்போலியன் பெரியசைஸ் ரவுண்டு லீவர் கைவாச் | ரூ. 4 12 0 |
| நாக்டேவி லீவர் மீடியம் ரவுண்டுசைஸ் கைகெடியாரம் | ரூ. 5 12 0 |
| நாக்டேவி லீவர் சதுரசைஸ் கெடியாரம் | ரூ. 10 0 0 |

எங்களிடத்தில் எல்லாவிதமான கடியாரங்களும் கிடைக்கும். இன்றே எழுதுங்கள்.

ஸ்டார் வாட்ச் கம்பெனி, மூர்மார்கட், மதராஸ்.

# பொருளடக்கம்


1. தாம்பத்ய வாழ்க்கை .... .... .... 369
2. தாமரை — ஸ்ரீமதி எஸ். கமலா .... .... 373
3. எலுமிச்சம்பழம் — ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி .... .... 378
4. என் பாரதமே! — திரு. ச. முனி .... .... 380
5. விடுகதை விநோ — திரு. வி. எஸ். ஜகதீசசுந்தரம் .... .... 381
6. ஜாமூன் — ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி .... .... 382
7. கதம்பம் .... .... .... 383
8. ரமாமணி — திரு. ஆர். எஸ். வாஸன் .... .... 385
9. சங்கீதம் — ஸ்ரீமதி அன்னபூரணி .... .... 389
10. ஜோதிபாய் — திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... .... 393
11. தாய்ப்பால் — திரு. எஸ். எஸ். ஆனந்தம் .... .... 398
12. ஸ்ரீமதி ராமாபாய் ரானடே — "கண்ணன்" .... .... 401
13. கற்பு — ஸ்ரீமதி பத்மாஸனி .... .... 407
14. உமாசங்கர் — "ஜயம்" .... .... 410
15. கண்ணன் தோழி — "மைதிலி" .... .... 414
16. மதி விடு தூது — ஸ்ரீமதி அம்புஜு .... .... 418
17. வேடனும் யோகியும் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகியம்மாள் .... 421
18. ஸெக்கோஸலவக்கியா — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 425
19. திருக்கழுக்குன்றம் — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... 430
20. செய்தித்திரட்டு .... .... .... 432
21. விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... 434
22. சினிமா குறிப்புகள் .... .... .... 436
23. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 437
24. பஞ்சாங்கம் .... .... .... 439
25. பிரசவ அட்டவணை .... .... .... 440


மூவர்ணப்படங்கள்


1. பில்ஹணு





# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

ங்களூர் : மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மெண்ட்.
சாஸ்திரி ஹோட்டல் அண்டு ரெஸ்டாரண்ட், 89, சிக்பெட், சிடி.

ருப்பதி : மிஸ்டர். அப்துல் அஸீஸ், நியூஸ் ஏஜண்ட்.
மெஸர்ஸ். ஓய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்சென்ட். (தெரு.)

சலம் : எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத்

பாள்ளாச்சி : திரு. கே. ஆறுமுகம், நியூஸ் ஏஜண்ட்.

தனபள்ளி : என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜண்ட்.

ண்டிவனம் : திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

டலூர் : மெஸர்ஸ். கமலா அன் கோ., புதுப்பாளையம், நியூடவுன்.

வலூர் : திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

ருச்சிக்கோட்டை : திரு. எஸ். அஜீபா சாஹிப், நியூஸ் ஏஜண்டு, வைரவன் கோவில் தெருவு.

துரை : திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.

ிருநெல்வேலி டவுன் : திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.

ூத்துக்குடி : மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

ிமாவரம் : திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

ிடதவோல் : திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

ஹனுமகொண்டா : திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

சென்னை : மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

கொழும்பு : திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.

பாழ்பாணம் : திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.

ரங்கூன் : திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.

கோலாலம்பூர் : திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
தபால் பெட்டி நெ. 752,
**எழும்பூர், சென்னை.**



## தாம்பத்ய வாழ்க்கை

“இல்லற மல்லது நல்லற மன்று,” என்று ஔவையார் வெகு காலத்துக்கு முன்னரே கூறியிருக்கிறார். இல்லறமாவது என்ன? இல்லானும், இல்லாளும் மனமொத்து குடும்பத்தை நடத்தி கிரஹ தர்மங்களைச் சரிவரச் செய்து வருவதே. மனையாளும், மணாளனும் ஒற்றுமையுடன் எல்லாக்காரியங்களிலும் ஒரு மனப்பட்டு வாழ்க்கை நடத்துவதே கிரஹ தர்மமாகும். இல்லறம் இனிது நடைபெற வேண்டுமாயின் அதற்கு அடிப்படையானதும், இன்றியமையாததும் என்ன? தம்பதிகளுக்குள் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் அன்புவேண்டும். அந்த அன்பு இல்லாத வாழ்க்கை கணவன், மனைவி இருவருக்கும் இன்பம் கொடுக்காதது மட்டுமின்றி துன்பத்தையே விளைவிக்கும். பரஸ்பரக்காதலால் கட்டுப்படாத தம்பதிகள் வேறு சமுதாயக்கட்டுகளாலும் சட்டதிட்டங்களாலும் பிணைக்கப்பட்டு இருவரும் ஓரில்லத்தில் வாழ்க்கை நடத்துவதென்பது இயற்கைக்கு நேர்விரோதமானது. அதில் இன்பமிருக்க முடியுமா? தானாகக்கனியாத பழத்தை தடிகொண்டு கனியவைத்தால் அது ருசிக்குமா? ருசிக்காது.

சமீபத்தில் நடந்த வழக்கிலிருந்து ஹிந்து ஸ்திரீகள் தற்பொழுது இருந்துவரும் ஹிந்து சட்டத்தினால் எவ்வளவு இயற்கைக்கும் மனித சுபாவத்துக்கும் விரோதமாக நடந்து கொள்ளுமாறு வற்புறுத்தப்படுகிறார்கள் என்பது தெரிகிறது. அனந்தபூர் ஜில்லாவைச் சேர்ந்த திரு. ஈஸ்வர ராவுக்கு ஸ்ரீமதி சாந்தம்மாள் மணமுடிக்கப் பெற்று சுமார் ஏழு அல்லது எட்டு வருஷங்கள் இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஆனால் 1920-ம் வருஷம் திரு. ஈஸ்வர ராவ் மற்றொரு பெண்ணை மணந்து கொண்டார். இது குடும்ப அமைதிக்குப் பங்கம் விளைக்கும் விதையாயிற்று. இருமனைவியர்

களுடைய தெய்வங்களும், தேவர்களுமே எவ்வளவோ இடைஞ்சல்களுக்கு ஆளானார்கள் என்று நாம் கதைகளில் வாசித்திருக்கிறோம். அப்படியிருக்க, சாதாரண நரர்களிடை இவ்விருதாரமணமுறை எவ்வளவு கெடுதல்களை விளைவிக்கும் என்று நாம் விவரித்துக்கூற வேண்டியதில்லை. இருந்தாலும் இப்பொது விதிக்கு விலக்குகள் இல்லையென்றும் நாம் ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. ஒரு சில குடும்பங்களில் இது இனிமையாகவே இருந்து வரலாம். ஆனால் அப்பேர்பட்டவர்கள் சிறந்தவர்களே. அது எல்லாராலும் இயலாதகாரியம். இரண்டாவது கல்யாணம் நடைபெற்ற சில மாதங்களிலேயே ஈஸ்வரராவுக்கும், சாந்தம்மாளுக்குமிடையில் மனக்கசப்பு ஏற்பட்டு விட்டது. சாந்தம்மாள் பலவித கஷ்டங்களுக்குட்படுத்தப்பட்டாள். புகை கடைசியில் நெருப்பாக பற்றியது. ஈஸ்வரராவ் சாந்தம்மாளை வீட்டைவிட்டுத் துறத்திவிட்டார். அம்மாளும் பலவருஷங்கள் தனிவாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

திடீரென திரு. ராவுக்குத் தன் முதல் மனைவியை அழைத்துக் குடித்தனம் செய்ய வேண்டுமென்று எண்ணமுண்டாயிற்றும். ஆனால் சாந்தம்மாளுக்கு இப்பொழுது குடும்பத்தில் இருந்து வரும் நிலைமையில் தன்கணவனுடன் வாழ்க்கை நடத்துவதில் இஷ்டமில்லை. அவரது எண்ணம் தூய்மையானது என்று அவளுக்கு நம்பமுடியவில்லை. எனவே தான் தனியேயிருந்து தன்பாக்கி காலத்தைக் கழித்துவிடவே உத்தேசித்திருப்பதாகத் தன் கணவருக்குத் தெரிவித்துவிட்டாள். ஆனால் கணவன் சும்மாவிடுவதாயில்லை.

ஹிந்து சட்டம் இது மாதிரியான சமயங்களில் ஸ்திரீகளின் நன்மைக்கு ஹானியாகவே இருந்து வருகிறது. அதில் இது போன்ற சந்தர்ப்பங்களுக்கு மாதர்க்கு உற்ற பரிகாரம் கிடைக்கும்படியில்லாமல் அவர்களுக்கு விரோதமான அம்சங்களே இருக்கின்றன. திரு. ராவ் தன் மனைவி தன்னுடன் வந்து வாழவேண்டும் என்று உத்திரவிடுமாறு ஜில்லா முன்சீப்பிடம் வழக்குத் தொடர்ந்தார். ஜில்லா முன்சீப்பிடம் சாந்தம்மாள் தனக்கு அங்கு மனநிம்மதியான வாழ்வுகிடைக்காது என்றும், தனக்கு அவமரியாதைக[illegible] அல்லல்களும் வருமென்றும் வாதாடி[illegible]. ஆனால் முன்சீப் என்ன செய்வார்? சட்டப்படி அவர் செய்ய வேண்டியவர் தானே! சட்டப்படி ஹிந்து கணவன் எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம். கேள்வி கேட்பார் யாருமில்லை. அது சட்டத்துக்குட்பட்டது. மற்ற மனைவிகள் அதற்குச் சம்மதித்து அவனுடன் வாழவேண்டும். தங்களுக்கு மனம் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் அவன் தன்னுடன் இருக்கும்படி சொன்னால் இவர்கள் இருந்துதான் ஆகவேண்டும். தனியாக ஜீவனாம்சம் பெற்று வாழ முடியாது. ஜீவனாம்சம் கோருவதற்கு எண்ணற்ற நிபந்தனைகள். அவைகள் ஆடவர்களுக்குச் சாதகமானவைகளும், மாதர்கட்குப் பாதகமானவைகளுமாக இருக்கின்றன வென்பதை எந்த சுயநலமற்ற ஆடவரும் நிச்சயமாய் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். தன் கணவன் தன்னுடன் வாழும்படி கூறும்போது அவனுடன் வாழ மனைவி விரும்பாவிடில் அவளுக்கு ஜீவனாம்ச உரிமை கிடையாது. இது ஹிந்து சட்ட நீதி. ஜீவனாம்சம் வழங்குவதைத்





தடை செய்யப் புருஷர் தன் மனைவி ஒழுக்கக் குறைவு என்று ஏதாவது வழியில் நிரூபித்தால் ஜன்மம் பூராவும் ஜீவனாம்சம் கிடையாது. இது போன்ற நிபந்தனைகளால் எவ்வளவோ தூய நங்கையர்கள் சூழ்ச்சிகளுக்குட்பட்டு அல்லல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பது உலக வாழ்க்கையை நன்கு உணர்ந்தவர்கள் அறிந்ததே. வழக்குகளில் 'ஜெயம்' பெற சில சமயங்களில் சிலர் எவ்வளவு காரியங்கள் செய்கிறார்கள் என்பதும் நாம் அறிந்த விஷயம் தான்.

எனவே ஜில்லா முன்சீப் சட்டம் ஹிந்து மனைவி தன் கணவன் தன்னை துன்புறுத்தவில்லையென்று தன்னுடன் வாழவேண்டுமென்று கூறினால் அவனுடன் தான் வாழவேண்டுமென்று கூறுகிறதென்றும், ஆகையால் சாந்தம்மாள் திரு. ஈஸ்வரராவுடன் எப்படியும் குடியிருக்கவேண்டியது தான் என்று உத்தரவு பிறப்பித்துவிட்டார். சாந்தம்மாள் ஜில்லா ஜட்ஜுக்கு அப்பீல் செய்து கொண்டார். ஜில்லா ஜட்ஜும் ஹிந்து சட்டம் ராவுக்கு தாம்பத்ய உரிமை கொடுக்கிறதாகவும் ஆகையினால் சாந்தம்மா அவருடன் வாழ இசையாவிடில் ஜீவனாம்ச உரிமையை அடியோடு இழக்க நேரிடும் என்பதாகத் தெரிவித்து ஜில்லா முன்சீப்பின் உத்தரவை ஊர்ஜிதம் செய்தார்.

வியாஜ்ஜியம் ஹைக்கோர்ட் நீதிபதி திரு. வாட்ஸ் வொர்த் முன்னர் வந்தது. அவர் வழக்கைப் பரிசீலனை செய்து திரும்பவும் ஜில்லா ஜட்ஜுக்கே திருப்பி அனுப்பினார். அதில் ஹிந்து சட்டம் சொல்வதின்னது என்று கீழ்கோர்ட்டு நீதிபதிகள் கூறியிருப்பது ஒப்புக்கொள்ளவேண்டியது தானென்றும், ஆனால் சாந்தம்மாளை ராவுடன் தாம்பத்யம் நடத்தும்படி கட்டாயப்படுத்தப்படுவதால் சாந்தம்மாளுடைய உடலுக்கோ உயிருக்கோ ஹானிநேருமென்று சிறிதளவாவது ஜில்லா ஜட்ஜுக்குச் சந்தேகமிருக்குமேனும், அல்லது அவ்வாறு திரும்பச் செய்வதால் அவளை ஈஸ்வரராவ் துன்புறுத்துவார், அல்லது அவள் சரியானபடி நடத்தப்படமாட்டாள் என்று தோன்றினால் அதற்குத் தக்கபடி தனக்கு யுக்தம் என்று தோன்றும் உத்திரவைப் போடும்படியும் உத்திரவிட்டார்.

இது மறு பரிசீலனைக்கு ராவ்பகதூர் ஸி. சத்யநாராயண சௌதிரி அவர்களிடம் வந்தது. அவர்கள் இவ்வழக்கில் தீர்ப்புக் கூறுங்கால் ஹிந்து சட்டத்தின் வியாக்கியானம் மற்ற நீதிபதிகள் செய்தது போலவே இருப்பதாக ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது என்று கூறினார். ஆனால் இக்குறிப்பிட்ட வழக்கில் கணவன் மனைவியைத்திரும்பக் கூப்பிட்டு தாம்பத்ய பாத்யதை கொண்டாடுவது தனக்கு நம்பிக்கையளிக்கவில்லையென்றும், சாந்தம்மாளுக்குச் சரியான ஆதரவு கணவன் கொடுப்பான் என்று தனக்குத் தோன்றாததாலும், மேலும் அவள் தேகநிலை தாம்பத்ய வாழ்க்கைக்கு தற்சமயம் உகந்ததாக இருக்கவில்லை என்றும் கூறி வழக்கை சாந்தம்மாளுக்குச் சாதகமாகவும், ஈஸ்வரராவுக்குப் பாதகமாகவும் முடிவு செய்தார்.

இந்தத் தீர்ப்பில் சில ரஸமான வார்த்தைகள் திரு. சத்யநாராயணா கூறியிருப்பது எல்லோரும் ஊர்ந்து கவனித்துச் சிந்திக்க வேண்டியவைகளாகும். ஹிந்து சட்டம்

ஹிந்து தர்ம சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டு கோர்க்கப்பட்டவைகளென்றும், ஆனால் அதில் உள்ள பல அம்சங்கள் தர்மத்துக்கும், நியாயத்துக்கும் விரோதமாக இருக்கின்றனவென்றும், இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட மங்கையரை சாதாரண ஸ்தாவர சங்கம சொத்துக்களைப்போல் மதித்து அவைகளுக்குத் தக்க சட்ட நிபந்தனைகளால் ஆள்வது உண்மை நீதியாகாதென்றும் கூறியிருக்கிறார்.

ஸ்திரீகளின் நன்மையை மட்டும் கவனத்தில் வைத்து ஹிந்து சட்டத்தை ஆராயப் புகுவோமானால் அதன் பாலுள்ள குறைபாடுகள் அனந்தமென்பதை பல வருஷங்களுக்கு முன்னரே சிறந்த சட்ட நிபுணர்களும், சீர்திருத்த வாதிகளுமாகிய திரு. எச். எஸ். கௌர், ஹரிவிலாச சாரதா, பால் அப்பாசாமி முதலியவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். தர்மசாஸ்திரங்கள் வெகுகாலத்துக்கு முன்னர் ஏற்பட்டவைகள். சில ஆயிர வருஷங்களுக்குமுன் பல சட்ட நிபுணர்களால் பலவித உத்தேசங்களையொட்டி இயற்றப்பட்டவைகள் அவைகள். ஆடவர்களுக்குச் சாதகமாகவே வியாக்யானம் செய்யப்பட்டு அந்த வியாக்யானங்களை ஹிந்து சட்டத்தில் புகுத்தியிருக்கிறார்கள் என்பது ஒரு சாராரின் துணிபு. பொதுவாக ஹிந்து சட்டம் இப்பொழுது அமுலிலிருந்து வருவதில் ஸ்திரீகள் சுதந்திரங்களும், உரிமைகளும் ரொம்ப அதிகமாகக் கட்டுப்பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது தான்.

தர்ம சாஸ்திரங்கள் ஏற்பட்டகாலத்திற்கும் இப்பொழுது இருந்து வரும் நிலைமைக்கும் எவ்வளவோ வித்தியாசங்களிருக்கின்றன. வாழ்க்கையில் எத்தனையோ அம்சங்களில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அடிப்படையான கொள்கைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் அந்த தர்ம சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்ட ஹிந்து சட்டம் இக்காலத்துக்கு எல்லாவிதத்திலும் எப்படிப் பொருந்தும்? தர்ம நியாய முரண்பாடுகள் இருப்பது நியாயமே.

எனவே அவைகளை அகற்றி நங்கையரும் தர்ம நீதி அடைந்தின்புற்றிருக்குமாறு செய்யவேண்டியது நம் கடமை. ஹிந்து சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்று வெகுகாலமாகவே ஒரு கிளர்ச்சி இருந்து வருகிறது. பரோடா, மைசூர் முதலிய சமஸ்தானங்களில் இது பற்றி ஆராய்ச்சி செய்யத் தனிக்கமிட்டிகள் நியமிக்கப்பட்டு, அவைகளும் இதைப் பற்றித் தீவிர விசாரணைகள் நடத்தித் தங்கள் சிபார்சுகள் அடங்கிய யாதாஸ்துகளையும் சமர்ப்பித்தன. அவைகளின் சிபார்சுகள் அனேகம் பரோடா சமஸ்தான சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கான அனேக சட்டங்கள் பரோடா சமஸ்தானத்தில் நிறைவேறி அமுலிலிருக்கின்றன. அதே போல் பிரிட்டிஷ் இந்தியாவிலும் சர்க்கார் ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்து இப்பிரச்சினையை சரிவரப்பரிசீலனை செய்து மாதர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளை வழங்கி அவர்களின் தாம்பத்ய வாழ்வை உண்மையிலேயே இன்பமுடையதாய்ச் செய்ய வேண்டுமென்று கோருகிறோம்.



# தாமரை

ஸ்ரீமதி எஸ். கமலா

இயற்கையின் வனப்பையும், மாட்சியையும், மகிமையையும் ஆதிநாள் தொட்டு இன்றுவரை எல்லா தேசத்தினரும், எல்லாவித நாகரிக நிலையிலிருந்தவர்களும் அறிந்து அனுபவித்துப் போற்றி வந்திருக்கிறார்கள். இயற்கை அழகை மக்கள் உணரும்படி செய்து, அவ்வழகில் தங்களிடத்தில் ஈடுபட்டுப் புளகாங்கிதம் ஆகும்படி செய்வதில் மலரினங்கள் தலை சிறந்து விளங்குகின்றன. அவ்வித மலர்களில் தெய்வீகத்தன்மையாலும், அழகிய தோற்றத்தினாலும், அதனால் ஏற்படும் உபயோகத்தாலும் முதன்மைஸ்தானம் வகிப்பது தாமரை புஷ்பம். இந்திய புஷ்ப ரகங்களில் தாமரை புனிதத்தன்மையிலும், கௌரவத்திலும் தனிப்பெருமை படைத்துளது. அது பார்ப்பவருள்ளத்தில் ஓர்வித மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. குதூஹலம் ஏற்படுகிறது. அதைப்புகழ்ந்து மகிழ்ந்து பாடாத புலவர்கள் இல்லை. அதன் புனிதத்தன்மையை போற்றாத மதம் இல்லை. தேவ ஒளி அதனின்றும் வீசுகிறது. மானிடரை மயக்குகிறது. மங்கையருள்ளத்தைத் தன் வயப்படுத்துகிறது. பார்ப்பவர்களுக்கு ஆத்ம சாந்தியளிக்கிறது. அதன் மணம் மனதுக்கு இன்பத்தை ஊட்டுகிறது.

இத்தாமரை மலருக்கு பல பெயர்கள் வழங்கி வருகின்றன. ஆதியில் பங்கஜம் என்ற பெயரிருந்ததாகக் கூறப்படுகிறது. பங்கஜம் என்ற பதத்துக்கு "சேற்றில் ஆழமாய் அழுந்திக்கிடப்பது" என்பது பொருள். "சேற்றில் பிறந்த செந்தாமரை" என்றும் ஒரு சொல் வழங்கிவருகிறது.

அதாவது ஒரு மனிதன் மகிமையை அவன் பிறப்பினால் மட்டும் நிர்ணயிப்பது நியாயமானதல்லவென்பதை நிரூபிப்பதற்கொப்பாக செந்தாமரை புஷ்பம் சேற்றில் உதித்தபோதிலும் அதை மக்கள் எவ்வாறு போற்றிப்புகழ்ந்து விரும்புகிறார்களோ அதேபோல் குணமும், உண்மை சாமர்த்தியமும் உள்ள எவரும் எக்குடியில் எந்நிலையில் பிறந்து வளர்ந்திருந்தபோதிலும் அவர்களது மகிமை இவ்வுலகத்தில் நிச்சயம் பிரகாசிக்கும் என்பதை தாமரை மலர் எல்லாருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டுகிறது. சேற்றிலே உண்டான போதிலும் ஜெகத்திலே ஆண்டவனுக்கு அருச்சிக்கும் புஷ்பங்களில் பங்கஜமலர் முதன்மையாக மதிக்கப்படுகிறது. அதேபோல் உத்தமர்களின் பெருமையை தாழ்குடிப்பிறப்பு மங்கவைக்க இயலாது என்பதைத் தாமரை மலர் பாமரரும் உணருமாறு செய்கிறது. பிறப்பால் உயர்வு தாழ்வு நிர்ணயிப்பது புத்தி சாலிகளுக்கு அடுத்ததல்ல என்பதை பரமனுக்குறிய பங்கஜ புஷ்பம் எடுத்துக் காட்டுகிறது.

அந்த உண்மையைக் கண் கூடாக எடுத்துக்காட்ட நாயன்மார்கள் சரித்திரத்திலும், ஆழ்வார்கள் சரித்திரத்திலும், இன்னும் எல்லா தேச அரசியல் பொருளாதார சரித்திரங்களிலும் எண்ணற்ற உதாரணங்களிருக்கின்றன. சேற்றில் முளைத்த செந்தாமரைகளும், குப்பையில் கிடந்த குண்டுமணிகளுமே இன்று உலகை ஆட்டி வைக்கின்றன.

மேலும் ரத்னங்களில் உயர்ந்தது வைரம். அதுவும் ஆதியில் நிலக்கரியாக இருந்ததுவே. அதனால் அதுவும் தாமரையைப்போல் உயர்ந்த உண்மைகளை ஊன்றிச் சிந்திப்பவர்களுக்கு எடுத்து உரைக்கின்றது.

தாமரை மக்களுக்கு சகிப்புத்தன்மையின் மாண்பையும் காட்டுகிறது. அதன் வளர்ச்சியின் இயற்கையைக் கவனியுங்கள். தண்ணீருயர்ந்தால் தானும் உயரும்: தண்ணீர் தாழ்ந்தால் தானும் தாழும். தண்ணீரிலே அலைகளும், ஆட்டங்களும் ஏற்பட்டால் மெதுவாக ஆடிக்கொடுத்துத் தன் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளும். நீர் நிலையை எதிர்த்துப் போராடாமல் அதனுடன் சமய காலங்களுக் கேற்ப வளர்ந்து வந்து அவ்வழியின் மேன்மையை நாம் அறியச் செய்கிறது தாமரை மலர்.

இன்னும் அதன் இலையை கவனிப்போம். இது தண்ணீரிலேயே சதாகாலமும் இருக்கிறது. ஆனால் இதன் மேல் தண்ணீர் துளியாவது ஒட்டுகிறதா? இல்லை. ஜலம் சிந்தியவுடன் அது இருந்த அடையாளம் ஏதாவது இலையில் படிந்திருக்கிறதா? இல்லை. பெரியவர்கள் நாம் இவ்வுலகில் வாழ்வதும் அப்படியே இருக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அதாவது "தாமரையிலைத் தண்ணீர் போல்" பட்டும் படாமலும், தொட்டும், தொடாமலும் இருக்கவேண்டும். நம் அழியாத ஆத்மாவின் மீது யாதொரு கரையும் படாதபடி வாழ்க்கையை நடத்த வேண்டும். இது இன்னொரு உண்மையையும் புலப்படுத்துகிறது. அதாவது தூய குண சீலர்கள் எவ்வளவு கேவலமானவர்கள், துர்நடத்தையர்கள், பாபிகள் மத்தியில் வசித்துவந்த போதிலும் அவர்களது நற்குணமும், தூய்மையும் சற்றும் பாதிக்கப்படாது என்பதே. எந்த அழுக்கு ஜலம் தாமரையில் பட்டாலும் தங்குவதுமில்லை கரைபடுவதுமில்லை. அது போல் மஹான்கள் எந்த விடத்தில் யாருக்குமத்தியில் இருந்த போதிலும் கெட்டுப்போக மாட்டார்கள் என்று தாமரை கூறுகிறது.

தாமரைக்கு அர்க்கபந்து என்ற பெயரும் உண்டு. அதாவது சூரியனது நண்பன் என்பது. இதற்கு இப்பெயர் வந்ததற்குக் காரணம் இம்மலர் ஆதித்தன் உதயமாகும் போது மலருகின்றது. அவன் எத்திசையிலிருக்கின்றானோ அத்திசையையே நோக்கி நிற்கின்றது. அவன் அஸ்தமித்தவுடன் குவிந்து விடுகிறது. இதுவும் ஒரு நல்லொழுக்கத்தைத்தான் அறிவுறுத்துகிறது. அதாவது ஒரு பெரியாரின் நட்பையும் ஆதரவையும் அடைந்து அதைக் கெட்டியாகப்பற்றிக் கொண்டிருப்பது மக்களுக்குப் பெரும் நன்மையைத் தரும் என்பதே. சூரியனே மலர்களுக்கு பலகலர்களையும் வனப்பையும் அளிக்கின்றான். ஆதித்தனே பலவித பக்ஷி ஜாலங்களுக்கும் அவைகளின் இறக்கைகளுக்கு கண்கவரும் நிற வேறுபாடுகளைக் கொடுக்கிறான். இருண்ட உலகுக்கு வெளிச்சத்தை அருளுகிறான். அவனுக்குற்றமலர் அலர் தாமரை.

நமது புராண இதிகாசக்கதைகளிலும் தாமரையைப்பற்றி மேன்மையாகவே கூறப்பட்டிருக்கிறது. "விஷ்ணுவின் உந்திக் கமலத்துதித்த தாமரை" என்பதால் தாமரை புஷ்பம் ஆதியில் பரம் பொருளாகிய ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் தொப்புளில் தோன்றியது என்பதினின்று அது உயர்வும் கீர்த்தியும் உள்ளது என்பது நாம் தெரிந்து கொள்ள வேண்டியதே. உல





கத்தை சிருஷ்டி செய்யும் கடவுளாகிய பிரம்மா உண்டானது எவ்விடம்? தாமரைப் பூவில் பிரம்மா உதித்தார். என்னே அதன் புகழ்! இன்னும் செல்வங்கள் எல்லாவற்றுக்கும் தலைவியான லக்ஷ்மிதேவி வீற்றிருப்பது எங்கண்? பத்மாசனத்திலேயே. எனவேதான் திருவுக்கு பத்மாசனி என்ற பெயர் உள்ளது; பத்மம் என்றாலும் தாமரையைத் தான் குறிக்கும்.

மேலும் காதல் கடவுளாகிய காமன், மன்மதன், காதலை உண்டாக்க மலர்பாணம் ஒன்றை உபயோகிக்கிறான் என்பது தெரிந்தது தான். கரும்பு வில்லில் மலர் அம்புகளைத்தொடுத்து காதலர்கள் மீது எய்கிறானாம். அதற்கு அவன் உபயோகிக்கும் பாணங்கள், அம்புகள் பஞ்சபாணங்கள். அவைகள் மலர்களே. அந்தபஞ்சமலர்களிலும் முதன்மையாகக் கருதப்படுவது பங்கஜ புஷ்பமே. அரவிந்த மென்ற தாமரை மலர் கொண்டு அருச்சித்தால் எம்பெருமான் மிகப்பிரீதி அடைகிறார் என்று சொல்லபடுகிறது. அர்ச்சனையின் பூரணபலனையும் பெற விரும்புபவர்கள் எப்படியாவது கொண்டு வந்து பகவானுக்கு மாலை சூட்டி பெருமகிழ்வெய்துகிறார்கள்.

காதல் கிளர்ச்சியை உள்ளத்தில் அதிகமாகக்கிளப்பும் சக்தி பதுமபுஷ்பத்துக்குண்டு. அதைக் காணும்போதே நங்கையர்கள் மனதில் ஓர்வித பூரிப்பும், சந்தோஷமும் இயற்கையாகவே ஏற்படுகிறது. மலர்களில் மென்மைக்கும், மிருதுத் தன்மைக்கும் தாமரை பெயர் பெற்றது. பாணபட்டர் தன் நூலின் கதாநாயகியாகிய காதம்பரி தன் கணவனை விட்டுப் பிரிந்த துயரம் தாங்கமாட்டாமல் தாமரை மலர்களில் புரண்டு தன் காமவெப்பத்தைத் தணித்துக் கொள்ள முயன்றாளென்றும், சூரியவெப்பத்தால் கரிந்து போகாத பங்கஜமலர்கள் பிரிவாற்றாமையின் தணலால் வெந்து சூடாயின வென்றும் கவி வாணர் என்ன அழகாய்ச் சித்தரித்திருக்கிறார்! மேலும் தெய்வீகக்கவி காளிதாஸர் குமார சம்பவத்தில் சிவபெருமானின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பார்வதியை வர்ணிக்கும் போது 'நாட்டில் நடக்கும் தாமரை' என்று ஒரே சொல்லில் எல்லாவற்றையும் அடக்கிக் கூறியிருக்கிறார். அனேக புலவர்களும், கவிவாணர்களும் தாமரை புஷ்பத்தை பல பொருள்களுக்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். சிலர் இருதயத்துக்கு கமலத்தை உவமை கூறியிருக்கின்றனர். வேறு சிலர் கண்ணிமைகளுக்கும். இரு கண் விழிகளுக்கும் தாமரைப்பூவை ஒப்பிட்டுப் பாடியிருக்கின்றனர். மங்கையரின் மதி முகத்தை அலர் செந்தாமரைக்கு ஈடாகக் கூறியிருக்கின்றனர் கற்பனை சித்திரக்காரர்கள். நங்கையரின் கைகளின் மென்மைக்கும் பாதங்களின் மிருதுத்தன்மைக்கும் தாமரையை ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். இப்படி மதப்பெரியோர்களாலும், கவிகளாலும் புகழப் பெற்ற தாமரை மலர் நம் இந்திய தேசத்தின் அரசியல் சரித்திரத்திலும் ஒரு சமயத்தில் பங்கெடுத்திருக்கிறது என்று சொல்லுவது அனேகருக்குப் புதுமையாக இருக்கலாம். 1857ம் வருஷம் ஆரம்பித்த புரட்சியில் ஆங்கிலேயருக்கு விரோதமாக சுதேசிகள் அங்கு அங்கே எழுந்தபோது முதல் முதல் ஒவ்வொரு ஊருக்கும், ஒரு தாமரை மலரும் சப்பாத்தியும் அனுப்பப்பட்டதாம். அதன் மர்மம் என்னவென்பது இன்று வரை புலப்படவில்லை. ஆனால் அந்தகாலத்தில்

தாமரை மலர் ஓர் அம்சமாக விளங்கியதென்பது சரித்திரம் சொல்லும் உண்மை.

தவிர தாமரை மலர் தைலங்கள் செய்வதற்கும், சென்ட்கள் உற்பத்தி செய்வதற்கும் பலதேசங்களிலும் உபயோகிக்கப்படுகிறது. தாமரைத்தைலம் காய்ச்சுவதற்கு நல்ல தாமரைப் புஷ்பங்களைப் பறித்து இதழ்களை மட்டும் பிரித்து ஜலத்தில் போட்டு நன்றாய் ஊரவைக்க வேண்டும். சிலநாட்களுக்குப்பின் அதே ஜலத்தில் புதிய மலர்களைப்போட்டு ஊறவைக்க வேண்டும். பின்னர் அந்த ஜலத்தை எடுத்து நன்றாகக் காய்ச்சினால் அந்த நீராவி வெளியில் செல்லாமல் ஏதாவது கண்ணாடிப் பாத்திரத்தில் போகும்படி செய்து பின்னர் அதைக் குளிரச் செய்தால் அந்த திராவகம் தாமரை மலர் வாசனையுடன் திகழும். அதை நமக்கு இஷ்டப்படி தேங்கா யெண்ணையிலாவது நல்ல எண்ணையிலாவது கலந்து தலைக்குத் தடவிவந்தால் கூந்தல் வெகு கருமையாகவும், பள பளப்பாகவும், அழகாகவும் வளருவதன்னியில் மூளைக்கும் கண்களுக்கும் நல்ல குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் தரும்.

தாமரை இலையையும் சாப்பாட்டுக்கு வாழை இலைக்குப்பதிலாக எவ்வளவோ மக்கள் உபயோகிக்கிறார்கள். அது ரொம்பவும் அகலமாயும், தொடுவதற்குப் பட்டுப் போல் மிருதுவாயுமிருக்கின்றது. இந்த இலையை சில நாட்டுமருந்துகள் செய்வதற்கு ஆயுர்வேத யுனானி வைத்தியர்கள் உபயோகித்து வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதன் தண்டும் மக்களுக்குப் பல வழிகளில் பயனை அளிக்கிறது.

தாமரைக்காயைச் சிலர் பலவிதமாகச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். தாமரைக் காயிலுள்ள சிறு விதைகளைச் சிறு குழந்தைகள் உரித்து பச்சையாகவே உண்கிறார்கள். அது உடம்புக்கு ஆரோக்கியத்தையளித்து, உண்பதற்கு ருசியாகவும் இருக்கின்றது.

தாமரையின் தண்டு, காய் இரண்டையுமே சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மோரில் உப்புப்போட்டு நன்றாக சில நாட்கள் ஊறப்போட்டுப் பின்னர் வெய்யிலில் சுத்தமான இடத்தில் உலரவைத்து எடுத்து வைத்துக்கொண்டு நெய்யிலாவது எண்ணையிலாவது வறுத்துச் சாப்பாட்டுடன் கலந்து தொட்டுக்கொண்டு தின்றால் வெகு இன்பமாய் இருக்கும். தேகத்துக்கும் ரொம்பவும் ஆரோக்கியமானது.

நம் தேசமக்கள் இன்றும் தாமரை மலரை நேசித்து விரும்புகிறார்கள் என்பது தங்கள் செல்வப் புதல்விகளுக்கு அம்மலரின் பெயரையிட்டு அழைப்பதினின்றும் தெரியவருகிறதல்லவா? நம்மில் எத்தனை பங்கஜங்கள், சரோஜினிகள், கமலங்கள், பத்மாக்ஷிகள், பத்மினிகள் என்ற பெயருடைய நாரீமணிகள் இருக்கிறார்கள்? அனேகர். இதினின்றும் தாமரையின் பெயரைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதில் இந்திய மங்கையர்கள் எவ்வளவு இன்புறுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆண்மக்களும் தங்களுக்குத் தாமரையின் பெயரை இட்டுக்கொள்ளாமலில்லை. மாபெரும் தேசபக்தராய் விளங்கி வங்கத்தின் சிங்கமெனத் திகழ்ந்து புதுவையில் தவயோகம் புரிந்துவரும் ராஜரிஷியின் பெயர் நாம் அறியாததல்ல. அவர் தான்





அரவிந்தகோஷ். அரவிந்தம் என்பது தாமரையே. தவிர பத்மநாதன், கமலநாதன் என்னும் பெயர்களும் பங்கஜத்தினின்றும் உண்டானவைகளே. அவைகளைப் புருஷர்கள் வைத்துக்கொள்வதால் தாமரையின் உன்னதஸ்தானத்தை கௌரவிக்கிறார்கள்.

தாமரை மலரில் எல்லோருமறிய இரு வகைகளுண்டு. அதாவது செந்தாமரை என்றும், வெண்டாமரை என்றும் இரு வகைகளாகும். தவிர இதர மேல்நாடுகளில் இது பலவித வர்ணங்களில் உண்டாக்கப்படுகின்றது. அல்லிபுஷ்பமும் தாமரை இனத்தைச் சேர்ந்ததே. இதற்குப் புண்டரீகம் என்ற பெயரும் உண்டென்பது ஸ்ரீமன் நாராயணனை வருணிக்குங்கால் "புண்டரீகக் கண்ணன்" என்று பாடியிருப்பதினின்றும் விளங்குகிறது. குளங்களில் அதிகாலையில் தாமரை புஷ்பங்கள் புஷ்பித்துத் தங்கள் மெல்லிய செவ்விதழ்களை விரித்துப் பிரகாசிக்கும் காட்சியைக் காண்போர் மனது எவ்வளவு குதூகலமடைகின்றது? இயற்கையின் மேன்மையும், ஆண்டவனின் மாட்சியும் மானிடர் உணரும்படி இதுபோன்ற புஷ்ப ஜாதிகள் செய்கின்றன. தாமரையைப் புஷ்பங்களுக்கு ராஜா என்று கூறினாலும் தகும். சகோதரிகள் ஒவ்வொருவரும் தாமரை புஷ்பத்தினால் தெய்வவழிபாடு செய்து லக்ஷ்மீகடாட்சத்தை அடைவார்களாக.

## கோ மகிமை

நகுஷ ராஜனுக்கு பசுவின் வயிற்றிற் பிறந்த மகரிஷி ஒருவர் சொன்னதாவது; "பிராமணர் குலமும், கோக்களின் குலமும் ஒன்றே இரண்டாகப் பகுக்கப் பட்டிருக்கின்றன. ஒரு குலத்தில் மந்திரங்களும் மற்றொரு குலத்தில் நெய் முதலிய ஹோமத்திரவ்யங்களுமிருக்கின்றன." ச்யவன ரிஷி கூறியதாவது, "இவ்வுலகில் கோக்களுக்கு ஒப்பான தனம் வேறொன்றில்லை. கோக்களைப்பற்றிப் பேசுவதும், கண்ணால் பார்ப்பதும், தானம் செய்வதும் எல்லாப் பாவங்களையும் போக்கி க்ஷேமங்களைத்தருவதாகச் சொல்லப்படுகின்றன. கோக்கள் தான் எப்போதும் லக்ஷ்மிக்கு ஆதாரமானவை. கோக்களிடம் பாவமில்லை. ஹோமமும் யாகமும் எப்போதும் கோக்களைப் பொறுத்திருக்கின்றன. யாகத்தை நடத்துகின்றவைகளும் கோக்களே. இவைகள் அமிர்தத்துக்கு ஆதாரமாயிருப்பதால், எல்லா லோகங்களாலும் நமஸ்கரிக்கப்படுகின்றன. கோக்கள் ஒளியிலும், உருவத்திலும் பாவத்தை எரிக்கின்ற அக்னியைப் போன்றவை. மனிதர்களுக்கு கோக்களே மிகப்பெரிய மகிமை. சுகத்தைக் கொடுப்பதும் அவையே. பசுக்கள் எந்த தேசத்தில் அச்சமின்றி ஜீவிக்கின்றனவோ அந்த தேசமே நன்கு விளங்குகின்றது. அத்தேசத்தின் பாவமும் போகின்றது. பசுக்கள் ஸ்வர்கத்துக்குப்படிகள். அவைகள் நினைத்தவற்றையெல்லாம் கறக்கும் தேவதைகள்."

# எலுமிச்சம்பழம்

ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி

எலுமிச்சம்பழம் தெரியாதவர்கள் நம் தமிழ் நாட்டில் ஒருவரும் இல்லையென்றே சொல்லலாம். அது பார்வைக்கு அழகாகவும், நல்ல வாசனையும் உள்ள பழம். சாதாரணமாக அது வருஷம் பூராவும் கிடைக்கக்கூடிய வஸ்து. சிலசமயங்களில் அதன் விலை சிறிது கிராக்கியாய் இருக்கும். ஆனால், அது ஒரு மலிவான பழம் என்றே சொல்லவேண்டும். இதை ஏழை முதல் பணக்காரர்கள் வரை வாங்கி உபயோகிக்கலாம். இதன் குணங்கள் பல. உபயோகங்கள் அனேகம். அவற்றில் சிலவற்றைப் பற்றி இங்கு எழுதுகிறேன்.

பொதுவாக நாம் பெரியவர்களைப் பார்க்கவேண்டுமானால் வேறு ஏதாவது உயர்ந்த வஸ்துக்கள் வாங்க இயலாவிடில் நல்ல பழுத்த எலுமிச்சம்பழங்களை இரண்டு வாங்கி அவர்களுக்குக் கொடுத்துக் காண்கிறோம். அதைப் பெற்று அவர்கள் முகர்ந்து பார்த்து கண்ணிலும் ஒற்றிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் உள்ளம் குளிர்கிறது. தவிர ஹிந்துக்கள் தங்கள் தெய்வங்களை வழிபடும் காரியங்களில் எலுமிச்சம்பழத்தைப் பலவழிகளிலும் உபயோகிக்கின்றனர். காளி, மாரி, பொன்னி முதலிய தேவதைகளின் பூஜைகளில் எலுமிச்சம்பழம் பிரதானஸ்தானம் வகித்து வருவது நாம் எல்லோரும் நன்கு உணர்ந்ததே. தவிர சுப்ரமண்யக் கடவுளின் வேலாயுதத்திலும், சூலங்களிலும் எலுமிச்சம்பழங்களைக் குத்தி வைத்திருப்பதையும் நாம் தினசரி காண்கின்றோம். இப்படி பழங்களில் எலுமிச்சம்பழம் ஒரு தனிப் பெருமை பெற்று விளங்குகிறது.

எலுமிச்சம்பழம் பல வியாதிகளையும் கண்டிக்கும் சக்தி வாய்ந்தது. அதில் நூற்றுக்கு 99 பாகம் தண்ணீராகவே இருக்கிறது. எலுமிச்சம்பழச்சார் சாப்பிட்டால் மூத்திரப்பை சம்பந்தமான வியாதிகள் நீங்கிவிடும். நமது இடுப்பில் அமைந்திருக்கும் சிறிய நீர் தெரிக்கும் கருவிகளைச் சுத்தீகரித்து அவைகள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்யும்படி எலுமிச்சம்பழரசம் செய்யவல்லது. இவ்வாறு அக்கருவிகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படாவிட்டால் அவைகளிலுள்ள அசுத்தங்கள் இரத்தத்துடன் கலந்து இரத்தம் கெடும். இரத்தம் கெட்டால் தேகத்தில் வியாதியுண்டாகும். ஆகையால் இரத்தத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள எலுமிச்சம்பழ ரசம் அடிக்கடி அருந்தி வருதல் நல்லது.

சிலர் எலுமிச்சம்பழத்தில் பிரோட்டின் சத்தும், கொழுப்பும் அதிகமாகவில்லை என்று கூறுவார்கள். ஆனால் ஒருவருக்குத் தேவையான ப்ரோட்டின், கொழுப்புசத்துக்கள் தினசரி உண்ணும் இதர ஆகார பதார்த்தங்களிலிருந்து ஒவ்வொருவருக்கும் தேவைக்கு அதிகமாகவே கிடைக்கிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

துணிமணிகளிலோ, கைகால்களிலோ சில கறைகள் ஏற்பட்டுவிட்டால் அக்கறைகளைப் போக்கடிக்க எலுமிச்சம்பழச் சாறை கறைபட்ட இடத்தில் போட்டு நன்றாய் தேய்த்து சிறிது நேரம் ஊற



வைத்துப் பின்னர் சுத்த ஜலம் கொண்டு கழுவினால் எவ்விதக்கறையும் மறைந்து போம். கறைகளைப் போக்கடிப்பதில் எலுமிச்சம்பழத்துக்கீடான வேறு எந்த வஸ்தும் கிடையாது. சில நோய்களுக்கு இதன் ரசத்தைப் பிளிந்து சுத்தமான சுடுதண்ணீரில் கலந்து இஞ்செக்ஷன் செய்து வருகிறார்கள்.

இப்பழத்துக்கு அழுக்கு எடுக்கும் சக்தி அதிகம். ரொம்ப நாட்களாய் உபயோகப்படுத்தாமல் உள்ளேயே கிடந்த பாத்திரங்களை எலுமிச்சம்பழ மூடிகளால் தேய்த்து ஊறவைத்துப்பின் துலக்கினால் பளபள வென்றாகும்.

தேகத்துக்கும், முகத்துக்கும் வசீகரம் வேண்டும் என்று விரும்பும் வனிதையர் தினந்தோறும், தாங்கள் ஸ்நானம் செய்வதற்கு முன் எலுமிச்சம்பழத்தின் தோலையும், உள்ளிருக்கும் சதையையும் கன்னங்களிலும், தேக முழுவதும் தேய்த்துப்பின்னர் ஸ்நானம் செய்துவர வேண்டும். குளித்தவுடனேயே ஒருவித உற்சாகமும் தேஜசும் உடம்பில் தோன்றும்.

தொண்டையில் ரணம் ஏற்பட்டால் எலுமிச்சம்பழச்சாறை வாயில் ஊற்றிக் கொப்பளிக்கவேண்டும். குரல் வளையில் ஏற்படும் நோய்களுக்கு தேனையும், எலுமிச்சம்பழச்சாறையும் சமபாகம் எடுத்துக் கலந்து ஒரு தடவைக்கு ஒரு டேபிள் ஸ்பூன் விதம் தினம் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் நல்ல குணம் ஏற்படும்.

உணவுப்பொருள்கள் மணமாக விருக்க வேண்டுமானால் நாம் அவைகளுடன் எலுமிச்சம்பழரசம் கலக்க வேண்டும். பருப்பு, சாதம், மோர் இவற்றுடன் இதன் சாற்றைப்புளிந்து சாப்பிட்டால் உணவுக்குத் தனி ருசியேற்படுகிறது. பம்பாய் வாலாக்களும், வடஇந்தியர்களும் எல்லா வித உணவுகளிலும், தின்பண்டங்களிலும் எலுமிச்சம்பழரசம் சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். புளி சேர்ப்பது தேகத்துக்கு அவ்வளவு நன்மையானதல்ல. புளிக்குப் பதிலாக எலுமிச்சம்பழம் சேர்ப்பது ஆரோக்கியமானது. பித்தத்தைக் கண்டிப்பதில் எலுமிச்சம்பழம் சிலாக்கியமானது. பித்த சுரங்களுக்கு எலுமிச்சம் பழச்சாறும், இஞ்சிச்சாறும் கொடுத்தால் பித்தம் கண்டிக்கப்படும். பித்தாசயத்தில் ஏற்படும் தொந்தரவுகளுக்கு ஒரு கிளாஸ் ஜலத்தில் இப்பழத்தின் சாறைக்கலந்து காலை, மாலை இருவேளையும் சாப்பிட்டால் நிவாரணமடையலாம். தொண்டை வரட்சியாக இருந்தாலும், காய்ச்சலாயிருந்தாலும் பழத்தின் சாற்றைச் சூடான தண்ணீரில் கலந்து அருந்த வேண்டும். வேண்டுமானால் இத்துடன் தேன் சேர்த்துக் கொள்ளலாம். சீனி சேர்ப்பது அவ்வளவு உகந்ததல்ல. சொறி கரப்பான் முதலியவைகளுக்குக் காடியைவிட எலுமிச்சம்பழத்தின் சாறே மேன்மையானது.

இப்பழத்தில் கால்ஷியம் என்ற பொருள் ஏதேஷ்டமாக இருக்கிறது. இப்பொருள் பற்களும், எலும்புகளும் உறுதியாயிருப்பதற்கு பயன் படுகிறது. இதில் மெக்னிஷியமும் இருப்பதால் பல் எயிறுகளைப் பலப்படுத்தும் சக்தியுள்ளதாயிருக்கிறது.

எலுமிச்சம்பழச்சாற்றுடன் இதர வாசனைப் பொருள்களும் சேர்த்து லைம்ஜூஸ் கிளிசரைன் என்ற தைலத்தைத் தயாரித்து விற்றுவருவது நாம் அறிந்த விஷ

யமே. அதைத்தடவி ஸ்நானம் செய்தால் மூளைக்கும் கண்களுக்கும் நல்ல குளிர்ச்சி உண்டாகும். குளிர்ச்சியை கொடுக்கும் சக்தி இதற்கு இருப்பதால்தான் அனேகர் நல்ல எண்ணெய் ஸ்நானத்துக்குப் பதிலாக இதைத்தேய்த்து ஸ்நானம் செய்கிறார்கள். வெயில் காலங்களில் இதன் சாறையும், சர்க்கரையும் குளிர்ந்த ஜலத்தில் கலந்து சாப்பிட்டால் எவ்வளவு ரம்யமாயிருக்கும் என்பதுபற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இதை ஷர்பத் செய்து சாப்பிட்டுவந்தால் ரொம்ப நல்லது. தவிர எலுமிச்சம்பழ ரசம் நல்ல பருப்புடன் செய்து சாப்பிட்டால் வெகு ருசியாக விருக்கும். இஞ்சி ஊறுகாய் செய்வதற்கு இஞ்சித்துண்டுகளுடன் இந்துப்பையும் இதன் சாறையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். எலுமிச்சம்பழத்தைப் பல விதமாக ஊறுகாய் போட்டுச் சாப்பிடலாம். சாதவகைகளில் எலுமிச்சம்பழச் சாதவகையும் ஒன்று. இவ்வளவு பிரயோசனப்படும் எலுமிச்சம்பழத்தை நம் சகோதரிகள் பயன்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# என் பாரதமே!

## திரு. ச. முனி

(கும்மி)

சத்தியமே ஜெயம் என்ற மன்னன் அரிச்
சந்திரனாண்ட தென்பாரதமே —புவி
எத்திசையும் புகழ் வள்ளுவராங்கவி
வேந்தல் பிறந்ததென் பாரதமே.

முத்தி தருந்தவ சித்திபயின்ற நன்
முனிவர் நிறைந்ததென் பாரதமே —தனுர்
வித்தையில் நேர்தனக் கித்தரை மீதில்லா
விஜயன் பிறந்ததென் பாரதமே.

புத்தன் மகாவீரன் கண்ணனெனும் பல
புண்யர் பிறந்ததென் பாரதமே —மற்று
உத்தம சாவித்ரி கர்ணகை வாசுகி
ஔவை பிறந்ததென் பாரதமே.

மாரத ரஜபுத்ர மகம்மது வீரர்கள்
மல்கியிருந்ததென் பாரதமே —திவ்ய
பூரண ஞானி விவேகாநந் தன்னருள்
பொங்கிச் செழித்ததென் பாரதமே.

செந்தமிழாரியம் என்ற செந்தேன்மொழிச்
சீர்கள் நிறைந்ததென் பாரதமே —இதை
'வந்தே மாதரம்' என்று சொல்லித்தினம்
வணங்கிக் கும்மி அடித்திடுவோம்.

# விடுகதை வினா

## ஸி. எஸ். ஜகதீச சுந்தரம்

26. நாற்கால் நாரி நடவாள், படுப்பள்.

27. நீல நிலத்தில் நித்தில முளைகள்.

28. ஈனாது புராளா நிமுத்துக் கட்டினால் குடத்தளவு பாலைக் கொடுத்துதவி நிற்கும்.

29. வெளிப்பார்வைக்குப் பழமாய் விளங்கும், உடைத்துப் பார்த்தால் உள்ளே மயிராம்.

30. பார்த்தால் பார்க்கும், சிரித்தால் சிரிக்கும், குத்திப்பார்த்தால் பத்துச் சில்லாம்.

31. காலுமில்லையே கைகளுமில்லையே சாலும்போன்ற வயிறு தழைக்குமே கோலக்கண்ணிற் சோறுண்டு குதித்திடும் ஒலஞ் செய்யும் ஒருவர் தனைத்தொட.

32. கருத்த கட்டிலின் மீதே காரிகை விரிக்கும் விரிப்பாம், எடுக்கும் விரிப்பாம்.

33. முக்கால் கிழவி முன்னீருண்டு கட்டை விழுங்குவள் கழறாய் இதனை.

34. செதுக்காத் தூணாம்; செய்யாக் குடமாம் வார்க்கா நீராம்; வைக்காச் சுண்ணமாம்.

35. கோலளவு பெண்ணிற்குக் குடத்தளவு சொருக்கு.

36. மறைந்திருக்கும் மாயப்பிசாசு எங்கே போனாலும் அங்கெல்லாம் வரும்.

37. இருளன் கொண்ட இரண்டெருதுகளில் படுத்திருக்கும் பாரினில் ஒன்று; அத்தை அடுத்து மற்றது திரியும்.

38. நீட்டிக்கொண்டு நடுவே படுக்கும் சுருட்டிக்கொண்டு மூலையில் நிற்கும்.

39. குயவன் செய்யாக் குடமாம் வண்ணான் வெளுக்காத மடியாம் ஞாயிறு பாராத நீராம்.

40. தன்னைத்தானே விழுங்கிக் கடைசியில் மாயமாக மறைந்து போவது என்ன?

41. அங்கு மிங்கும் அலைவதிரண்டு; பக்கம் பக்கமாய் பார்ப்பதிரண்டு; கின்னொலி தன்னைக் கேட்பதிரண்டு, எட்டி எடுத்துக் கொள்வதிரண்டு.

42. நலமாய் இலகும்; நாசியில் அமரும்; காதுகள் இரண்டும் கட்டி அணைக்கும் கன்னத்தழுந்தும்; கற்றோர் தமக்கு நேசத்துடனே நெறி காட்டிடுமே.

43. கந்தைத்துணியைக் கட்டிக் கொண்டு முத்துப் பிள்ளைகள் பெற்று மகிழ்ந்தாள்.

44. பூவும் பூக்கும், காயும் காய்க்கும் பூ இருக்கப் பூங்கொம்பில்லை.

45. இருகடல் நடுவில் இலங்கிய பாலம்.

46. தலையில்லை இடையில்லை, கையுண்டு விரலில்லை.

47. கண்ணுண்டு செவியில்லை கண்டிடும் கேட்டிடும்.

48. பறிக்கப் பறிக்கப் பெரிதாகிறது எது?

49. ஆகாயத்தில் அரிவாள்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

50. பழமாகாப் பழம், பூவாகாப் பூ.

---

26. கட்டில், 27. ஆகாயம், நக்ஷத்திரம், 28. பனைமரம், 29. பருத்திக்காய், 30. கண்ணாடி, 31. மத்தளம், 32. தோசைக்கல், தோசை, 33, சந்தனக்கல், 34. தென்னைமரம், தேங்காய், இளநீர், தேங்காய் பூ, 35. சோளக்கதிர், 36. நிழல், 37. மாவரைக்கும் யந்திரம், 38. பாய், 39. தேங்காய், 40. மெழுகுவர்த்தி, 41. கால்கள், கண்கள், காதுகள், கைகள், 42. மூக்குச் கண்ணாடி, 43. முத்துக் சோளக்கதிர், 44. நெற்கதிர், 45. மூக்கு 46. சொக்காய், 47. பாம்பு, 48. குழி, 49. புளியங்காய், 50. விபூதிப்பழம்.

# ஜாமூன்

"ஸரோஜா"

ஜாமூன் என்னும் பெயர் ஹிந்தி பாஷையினின்று உண்டாயிற்று. ஹிந்திபாஷையில் "ஜாமூன்" என்றால் "நாகப்பழ"மென்று பொருள். இத்தின்பண்டம் நாகப்பழத்தின் நிறத்தையும், உருவத்தையும் கொண்டிருப்பதால் தான் இதற்கு இந்தப்பெயர் வழங்கி வருகிறது. இது வெகுருசிகரமான இனிப்பு பக்ஷணம்.

ஜாமூன் செய்வதற்கு முதலில் பாலை சுண்டக்காய்ச்சி, "கோவா" செய்து கொள்ளவேண்டும். கோவா திரட்டிப் பால் பதத்திற்கு வருவதற்கு முன்பாகவே அடுப்பிலிருந்து இறக்கிவிட வேண்டும். ஒரு படி பாலை கோவா காய்ச்சினால், அரைப்படி மரிக்கன்மாவை (மைதாமாவு) கலந்து, நன்றாக பிசையவேண்டும். ஹோட்டல்களில் ஜாமூன் நிரம்பகாண வேண்டுமென்று அதிகமாகவே கோவாவுடன் மாவை சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் மாவை எவ்வளவுக்கெவ்வளவு கொஞ்சமாக சேர்க்கிறோமோ, அவ்வளவுக்கெவ்வளவு ஜாமூன் ருசியாகவிருக்கும். கோவா உருண்டையை நெய்யில் பொறிக்கும் பொழுது பிரிந்து கொள்ளாமலிருப்பதற்காகவே மாவை சேர்ப்பது. பிசைந்த மாவை கொஞ்சநேரம் மூடிவைத்திருந்து அப்புறம் கோழிமுட்டை உருவத்தில் கட்டைவிரல் பருமனில் உருண்டைகளாக உருட்டிக்கொள்ள வேண்டும். கோவா மொத்தையை அப்பள மாவைப்போல் நன்றாக சேர்த்து பிசைந்துகொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் உருண்டை பிரிசல் பிரிசலாய் நெய்யில் போட்டதும் பிரிந்து போய்விடும்.

பின்பு அஸ்கா சர்க்கரையை வாய் அகலமான ஈயப்பாத்திரத்தில் ஜலம் விட்டு கரைத்து அடுப்பின்மேல் வைத்து, பாகு காய்ச்சவேண்டும். பாகில் குங்குமம், ஏலக்காய் பொடி சிறிதளவு சேர்க்கவேண்டும். ஜிலேபிப்பாகு வந்து கம்பிப்பாகு வந்ததும், பாகைஅடுப்பிலிருந்து இறக்கி விடுங்கள். பாணலில் சுத்தமான நெய்யை விட்டு அடுப்பின்மேல் வைக்கவேண்டும். நெய்காய்ந்ததும், கோவா உருண்டைகளை நெய்யில் போட்டு சட்டுவத்தால் பெரட்டி பெரட்டி நாலாபக்கமும் ஒரே சமமாக சிவப்பு நிறம் வரும்வரைக்கும் பொறித்து சர்க்கரை பாகில் போடவேண்டும். கோவா உருண்டைகளை அதிக கணக்கில் நெய்யில் போட்டு பொறிப்பதைக் காட்டிலும் ஒரு தடவைக்கு மூன்று அல்லது நான்கு உருண்டைகள் கணக்கில் பொறித்தெடுப்பது தான் நலம். ஜாமூன்கள் சர்க்கரைப் பாகில் கடைசி பக்ஷம் நான்கு மணி நேரமாவது ஊறின பிறகு எடுத்து உபயோகித்தால்தான் நன்றாக ஊறித் தின்பதற்கு ருசியாக விருக்கும். ஊறினதற்குத் தக்கபடி ருசியும் அதிகரிக்கும். ஆனால் பதம் பார்த்து செய்வதில்தான் இருக்கிறது அதன் ருசிகரம். மைதாமாவு அளவிற்கு கொஞ்சம் அதிகம் சேர்த்துவிட்டால், ஜாமூன் பாகில் நன்றாக ஊறாமல் கல்லுப்போலாகிவிடும். மாவு மிகவும் குறைச்சலாக சேர்த்துவிட்டாலோ, நெய்யில் போடும்பொழுதே உருண்டைகள் பொடிப்பொடியாகிவிடும். அனுபவத்தின் பேரில் மாவை அளவாகசேர்த்து ஜாமூன் தயாரித்து விட்டால், அதைப்போன்ற ருசிகரமான தித்திப்பு பக்ஷணம் வேறெதுவுமில்லை.

## குலோப்ஜான்

இந்த பக்ஷணம் தயாரிப்பதும் ஜாமூனைப் போல்தான். ஆனால் ஜாமூனைப்போல் நீளவாட்டத்தில் உருட்டாமல், கொழக்கொட்டையைப்போல் உருண்டை உருண்டையாக உருட்டி, நெய்யில் பொறித்து பாகில் போடவேண்டும். இதர விஷயங்கள் எல்லாம் ஜாமூனைப்போலவேதான்.

# ❋ கதம்பம் ❋

## சந்தேகத்தின் விளைவு

தன்மனைவி சமீபத்தில் தன் பதின் மூன்று வயது குமாரன் தூங்கிக் கொண்டிருப்பதை மேஜர் ஆலன் போக்ஸ் என்பவர் தூரத்திலிருந்து பார்த்து, சந்தேகத்தினால் அவன் அன்னிய புருஷன் என்று நினைத்து மனைவி சந்தாக்ருஸை சுட்டுப்படு காயப்படுத்தி விட்டான். பின் உண்மையுணர்ந்து மனம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ள இருமுறை முயற்சித்தும் பலிக்க வில்லை. என் மாலைக்கண்!

... ... ...

## குழந்தைகளுக்குப் படி

நியுயார்க் ஸ்டேட்டில் ஒவ்வொரு குழந்தைக்கும் 75 டாலர் படி பிறந்தவுடன் சர்க்கார் பெற்றோர்களுக்குத் தருகிறார்கள். இத்தாலியில் ஒரு குழந்தைக்கு 6 வீதம் பெற்றோர்களின் சம்பளம் உயர்த்தப்படுகிறது. ரஷ்யாவிலும் சிசு விருத்தி போஷிக்கப்படுகிறது. நம்முடைய சர்க்கார்?

... ... ...

## ராஜகுமாரிகளின் தியாகம்

இராக் அரசரின் இரு சகோதரிகள் தங்கள் சகோதரர், சுற்றத்தார் முதலியவர்களின் மூட ஆட்சேபனைகளை நிராகரித்து, தைர்யமாக தாங்கள் காதலித்த சாமான்ய குல புருஷர்களை மணந்து கொண்டு ராஜ சுகபோகங்களை வெறுத்துத் தள்ளினார்கள். முதலாவது ராணி அஜ்ஜா ரோட்ஸ் தேசத்தைச்சார்ந்த ஹோட்டல் வேலைக்காரனை மணந்தாள். இரண்டாவது இருபத்தைந்து வயது இராஜகுமாரி ரஜீஹா ஈராக் ஆகாயப்படை உத்தியோகஸ்தர் ஒருவரை மணந்து கொண்டாள். காதல்முன் கனல் காற்று, கடல் எந்த மூலை!

... ... ...

## விஷப்புகை வெற்றி

விஷப்புகையும், வெடிகுண்டும் போட்டு எதியோபியாவை ஜயிக்க முஸோலினி 157 கோடி ரூபாய்கள் செலவு செய்திருக்கிறார். இந்த தர்மகைங்கர்யத்திற்காக நிச்சயம் நரகத்தில் தலைமை ஸ்தானம் கிடைக்கும்!

... ... ...

## மின்சாரச் செடி

செடிகளின் வேர்களுக்கிடையில் உலோகக்கம்பிகளை பதித்து அவற்றின் மூலம் மின்சாரம் பாய்ச்சினால் செடிகள் சீக்கிரத்தில் வளர்வதுடன் மிக்க நேர்த்தியான புஷ்பங்களையும், பழங்களையும் கொடுக்குமாம். மின்சாரமாயம்!

... ... ...

## அற்புதக்காளை

ஐக்கிய மாகாணத்தில் பெங்காலிநாத் என்பவருக்குச் சொந்தமான போலநாத் என்ற காளை ஒன்றிருக்கிறது. அது பிறர் பேசும் பாஷைகளை அறியும். மனிதரின் எண்ணங்களைச் சொல்லுகிறது. திருடர்களைக்கண்டு பிடிக்கிறது. பலர் நின்றால் "பணம் வைத்திருப்பவரைக்காட்டு" என்று பெங்காலிநாத் கேட்டால் ரூபாய் வைத்திருக்கும் மனிதனை போலா கண்டு

பிடித்து விடுகிறது. சீட்டு விளையாட்டுத் தந்திரங்களும் இதற்குத்தெரிகிறது. இதன் மர்மம் விளங்கவில்லை.

... ... ...

## யஜமானை சுட்டாள்

தன் சம்பளத்தை தரவில்லை யென்பதற்காக வாஷிங்டன் நகரத்தைச் சேர்ந்த டைபிஸ்ட் பெண் மிஸ் ஹேஸல் டாட்லாக் அவளது யஜமானன ஜான் மேக்லியை ரிவால்வரால் சுட்டு ஒரு புஜத்தைக்காயப் படுத்தி விட்டாள். தன் சம்பளத்தைக் கேட்டபொழுது மேக்லி கன்னத்தில் அறைந்தாராம்! வந்து விட்டது கோபம் ஹேஸலுக்கு. பத்ரகாளி அம்சம் போலும்!

... ... ...

## மீன் வேகம்

டர்பன் என்னும் ஒரு வகை மீன்தான் உலகிலேயே மிகவேகமாக நீந்தக் கூடியதாம். இவை ஒரு மணிக்கு 80 மைல்கள் நீந்துகின்றன. எஞ்சினில் கோர்த்தால்?

... ... ...

## கத்தரிக்காய்

திருவாங்கூர் ராஜ்யத்திலிருக்கும் ஆலப்பிளையில் கத்தரிக்காய்கள் சிறு புடலம் பிஞ்சுகள் போல் மெல்லியவையாயும் மிக நீளமாயும் இருக்கின்றன. எந்தக் கத்தரிக்காயும் ஒரு முழ நீளத்துக்குக் குறைந்ததாயில்லை. ஆனால் டில்லி நகரில் அகப்படும் கத்தரிக்காய்கள் பெரிய இளனி அளவு பெரியவைகளாக இருக்கின்றன. உடுப்பிப் பக்கங்களிலோ புடலங்காய்கள் குறுகி நம்மூர் கத்தரிக்காய்கள் போலிருக்கின்றன. காய் கறிச்சச்சரவு!

## கல்யாணமான மோட்டார் ட்ரைவர்

கல்யாணமான மோட்டார் ட்ரைவர்களை அமர்த்திக் கொள்வது தான் ஆபத்தில்லாதது. ஆராய்ச்சியின் பயனாக கல்யாணமானவர்கள் வெகு ஜாக்கிரதையாக மோட்டார் ஓட்டுகிறார்களென்று தெரிய வருகிறது. டாக்டர் ஹாரி டிஸில்வா என்ற போக்கு வரத்து நிபுணர் இந்த உண்மையைத்தன் அனுபவத்தில் கண்டு கூறுகிறார். எனவே மோட்டார் விபத்து உண்டாக்கினால் முதல் விபத்துக்கப்புறம் ட்ரைவரை உடனே கல்யாணம் செய்து கொள்ளும்படி உத்தரவிடுவதே சரியான தண்டனை!

... ... ...

## ரஷ்யாவில் முக்குழந்தைகள்

சோவியத் ரஷ்யாவில் ஜனன விகிதம் வருஷா வருஷம் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதுவரையில் ஒரே சமயத்தில் ஒரே ஸ்திரீ ஐந்து குழந்தைகளைப் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் நாலு குழந்தைகளும், மூன்று குழந்தைகளும், இரட்டைக்குழந்தைகளும் அதிகமாக இத்தேசத்தில் பிறந்திருக்கின்றன. உஸ்பெஸ்கிஸ்தான் என்ற இடத்தில் 1936ம் வருஷம் 11 செட் நாலு குழந்தைகள் பிறந்தன. அன்றியும் 21 செட் முக்குழந்தைகளும், 930 ஜதை இரட்டைக் குழந்தைகளும் இருந்தன. இவ்விதக் குழந்தைகளைப் பெறும் தாய்களுக்கு சர்க்கார் இடவசதி, ஆகாரவசதி முதலியவைகள் செய்து தருகின்றனர். நம் நாட்டிலோ பிச்சையெடுக்கப் பழக்கப்படுத்துவார்கள்!



# ரமாமணி

திரு. ஆர். எஸ். வாஸன்

**மா**லை ஐந்து மணி இருக்கும். எல்லோரும் உல்லாசமாக பீச்சில் பேசிக்கொண்டும் ரேடியோ கானம் கேட்டுக்கொண்டும் ஆனந்த பரவசராய் இருந்தார்கள். அன்றையதினம் ரேடியோ கானம் வெகு இனிமையாக இருந்தது. இப்படி இருக்கையில் ஓர் மங்கை பீச் ரோட்டின்மீது தனது மோட்டார் காரை விரைவாக ஓட்டிக் கொண்டிருந்தாள். எப்பொழுதுமே பீச் ரோட் என்றால் அனேக கார்களும் இன்னும் இதர எல்லா வகையான வண்டிகளும் வந்தும் போய்க்கொண்டும் இருக்கும். மாலை நேரத்திலோ கேழ்க்க வேண்டியதில்லை. ஏராளமான வண்டிகள் போவதை நாம் காணலாம். மேற்சொல்லிய மங்கையோ மிகவும் வேகமாக தன் மோட்டாரை ஓட்டிக்கொண்டிருந்தாள். அகஸ்மாத்தாக ஒரு சைகிள் ஓட்டி குறுக்கே வந்துவிட்டதால் அவள் (Sudden Brake) ஸடன் ப்ரேக்கை போட்டாள். ஆனால் அவ்வளவு வேகமாக வந்ததின் பொருட்டு, ப்ரேக் போட்டும் சிறிது தூரம் தூக்கி அடித்தாற்போல் நின்றது. சைகிள் ஓட்டியோ கார் வந்த வேகம் பார்த்து தன் பேலன்ஸை இழந்தான். காரும் இவனை மோதி சைகிளை உடைத்தெறிந்தது. சைகிள் ஓட்டிக்கும் சிறிது காயம் ஏற்பட்டு மூர்ச்சித்து விட்டான். காரில் வந்த மங்கை மிகவும் நடுங்கியவளாய் யாது செய்வது என்று யோசித்து கீழே யிறங்கி, பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த கிளீனரைக் கூப்பிட்டு, காயம் பட்டவனை தன் காரிலேயே போடும்படி சொல்லி, தான் உடைந்த சைகிளை ஒருவாறாக பின்னால் கட்டிவிட்டு காரை மீண்டும் விரைவாக ஓட்டிக்கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் விட்டாள். இச்சம்பவத்தைப் பார்க்க பீச்சிலிருந்து வந்தவரில் சிலர். கும்பல் கூடி விட்டார்கள். காரில் வந்த மங்கையை சிலரும் சைகிளில் வந்தவனை சிலரும் திட்டினார்கள். யாது செய்து என்ன பயன்? இவர்கள் கூக்குரலிடுவதற்கு முன்னமே மங்கை காரை ஓட்டிக் கொண்டு போய்விட்டாள்.



## 2

மதராஸில் திருவல்லிக்கேணியில் ராமன் அண்டு கம்பெனி மேனேஜர் ராஜம் பி.ஏ., 'ரமாவில்லா' என்னும் பங்களாவில் வசித்து வந்தார். அவர் மிகவும் செல்வாக்குடையவர். பெரிய மனுஷ்யர். அவர் யாது சொன்னாலும் எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். மேலும் யாதொரு அடாதடிக்கும் போக மாட்டார். மிகவும் நல்லவர். யாராவது கஷ்டம் என்று சொன்னால் சகியார். தன்னாலான உதவி செய்வார். இவருக்கு மாதச் சம்பளம் ரூபாய் 650. தனக்கு ஒரு காரும் தன் ஏக புத்திரி ரமாமணிக்கு ஒரு சிறிய ஆஸ்டின் காரும் வாங்கியிருந்தார். ரமாவோ அழகில் ரதியையும் தோற்கடிப்பாள். அவள் அன்னை

அவனை மிகவும் ஆதரித்து வளர்த்து வந்தாள். ரமா எது கேட்டாலும் இல்லை என்று சொல்லவே மாட்டார்கள் அவள் பெற்றோர்கள். தற்கால நாகரிக முறையில் பழகியிருந்தாலும் ஆசாரம், முதலியவை கவனிப்பார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை மாலையில் எல்லோரும் தேயிலைப் பானம் அருந்திய பிறகு வெற்றிலைப் பாக்கு முதலியவை போட்டுக்கொண்டு உல்லாசமாக பேசிக் கொண்டிருந்தார்கள். ரமா அறையில் டெலிபோன் மணி அடித்தது. உடனே ரமா அப்பாவிடம் விடை பெற்றுக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள். டெலிபோன் ரிசீவரை எடுத்து "ஹல்லோ! யார், கோகிலமோ, என்ன விசேஷம்," என்று கேட்க வேறுபக்கத்திலிருந்து, "ஆமாம், ரமா! இன்றைக்கு நாங்கள் எல்லோரும் $5\frac{1}{2}$-மணிக்கு ஒரு பேன்ஸி டிரஸ் **(Fancy dress)** போட்டி வைத்திருக்கின்றோம். ஆதலால் நீயும் வரவேண்டுமாக நாங்களனைவரும் கோருகிறோம்" என்று கூறினாள் கோகிலம். தான் கட்டாயம் வருவதாகக்கூறி ஐந்து மணிக்கே சரியாக டிரஸ் செய்துகொண்டு பீச் ரோட்டின் மீது தனது காரை விரைவாக ஓட்டிக்கொண்டு போகும்போது முன் அதிகாரத்தில் கூறியபடி சம்பவம் நிகழ்ந்து விட்டது. ஆதலால் காயம் பட்ட மனிதனை ஜெனரல் ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டுத் தானும் இரண்டொரு நாழிகை அவனருகே உட்கார்ந்தாள். அம்மனிதனுக்கு தன் சுய உணர்வு பெற அரை மணியாயிற்று. ரமாவுக்கோ ஒன்றும் தோன்றவில்லை. தான் மேரி கலாசாலையில் நடக்க விருக்கும் பேன்ஸி டிரஸ் போட்டிக்கு தன் தோழி கோகிலம் சொன்னதின் பேரில் உல்லாசமாக இருந்து வரலாமென்று போக தெய்வம் இப்படி செய்வித்ததே என்று மன ஏக்கம் கொண்டாள்.

அரை மணிக்கெல்லாம் ரமாவின் அறையில் மறுபடியும் டெலிபோன் மணி அடிக்க வீட்டில் ரமா இல்லாததால் அவள் தாயார் அதில் பேசினாள். மறுபடியும் கோகிலம் பேசினாள். ரமாவின் தாயார், கோகிலத்திற்கு ரமா வீட்டை விட்டு சென்று ஒரு மணி ஆயிற்றென்றும், அவ்விடம் போவதாகவே சொல்லிப் போயிருக்கிறாள் என்றும் சொன்னாள். ஆனால் கோகிலத்தினிடமிருந்து ரமா அவ்விடம் போகவில்லை என்று தெரிந்து கொண்டு தன் கண்மணி ரமாவிற்கு ஏதேனும் விபத்து சம்பவித்திருக்குமோ வென்று அஞ்சினாள். உடனே தன் பிராணநாதரிடம் சென்று டெலிபோனில் நடந்த வர்த்தமானத்தைத் தெரிவித்தாள். அவர் திகிலடைந்தவராய் டிரைவரைக் கூப்பிட்டு காரை கொண்டுவரச் சொன்னார். திரும்பவும் ராஜம் அரையிலிருந்து டெலிபோன் மணி அடிக்க, அவர் உடனே தன் அரைக்குப் போய் டெலிபோன் ரிசீவரை எடுத்து காதண்டை பிடிக்க தன் புத்திரி ரமா பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தார்.

## 3

ரமா மேரிராணி கல்லூரியில் முதல் வருஷம் வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் படிப்பில் மிகவும் ஊக்கமாக படித்து வந்தாள். டம்பமாக இல்லாமல் ஏழைகளை ஆதரிப்பாள். எல்லோரிடத்தி





லும் அன்பாக பேசுவாள். எப்பொழுதும் புன்னகை தவழ்ந்தவாறே இருப்பாள். அவள் தேசீய விஷயங்களில் மிகவும் கவனம் செலுத்தி வந்தாள். ஏதாவதொரு ஏழை "அம்மா பசி, சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆயின" என்று சொன்னால் உடனே அவனிடம் சில்லரை கொடுத்து சாப்பிடச் சொல்வாள். அதிகம் கூறுவானேன். தானம், தருமம், தயை, முதலிய அறிய குணங்கள் காண்பதென்றால் ரமாவிடம் தான். ரமா, ஜெனரல் ஹாஸ்பிடலிலிருந்து டெலிபோனில் நடந்தவை யாவற்றையும் தன் தகப்பனாரிடத்தில் சொன்னாள். அவள் மாதா பிதா மிகவும் மனம் நொந்து "இப்பொழுதே நீ புறப்பட்டு வந்துவிடு, நான் ஜெனரல் ஆஸ்பத்திரி தலைமை வைத்தியருக்கு போன் செய்கிறேன்" எனச் சொன்னார். ரமாவும் அதை ஆமோதித்தவளாய் அங்கு இருக்கும் நர்ஸுகளிடம் மிகவும் பணிவாக காயமடைந்த வாலிபனை சீக்கிரம் குணமாக்கும்படி சொல்லி தன் இருப்பிடம் போனாள். போகுமுன் அம்மனிதனிடம் போய் "அய்யா, நான் தப்பிதமாக காரை தங்கள் சைகிளின் மேல் மோதி விட்டேன். தயவு செய்து மன்னிக்கவும். மேலும், தங்கள் தாய் தகப்பனார் இருப்பிடத்தைச் சொன்னால் அவர்களிடம் போய்த் தெரிவிக்கிறேன்," என்று சொன்னாள். அவன், சிறிது சாந்தியடைந்தவனாய், "அம்மா, தாங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும். நான் தப்பிதமான பக்கம் வந்து விட்டேன். என் பெற்றோர்கள் திருவல்லிக்கேணியில் சிங்காராசாரி தெருவில் இருக்கிறார்கள். என் தந்தை பெயர் வக்கீல் ஜனார்த்தனம்" என்று சொன்னான். ரமா அட்ரஸைக் குறித்துக் கொண்டு மறுநாள் காலை வருவதாகச் சொல்லி தன் வீடு நோக்கி காரை ஓட்டினாள்.

## 4

ரமா வீட்டை யடைந்ததும் தன் தகப்பனாரிடம் காயமடைந்த மனிதனின் பெற்றோர்கள் பெயர் சொல்லி, அவரிடம் உடனே போய் மன்னிப்பு கேழ்க்க வேண்டும் என்று கூற, அவர் உடனே ரமாவையும், ஜனார்த்தனம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார். ஜனார்த்தனம் தன் வீட்டிற்கு ராஜம் வருவதைப் பார்த்து வியப்படைந்து, வரவேற்றார். தகப்பனாரையும், மகளையும் உட்கார வைத்து சாவதானமாக சங்கதி யாது என வினவினார். ராஜம் நடந்த சங்கதிசொல்ல, ரமா கூச்சம் கொண்டு தன் தகப்பனாரையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஜனார்த்தனம் தலை யசைத்து, "மிஸ்டர் ராஜம், பரவாயில்லை, என் மகனுக்கு காயம் ஏற்பட்டது பற்றியும், சைகிள் உடைந்ததைப் பற்றியும் வருத்தமாயினும், தங்கள் ஏகமாத்ர புத்திரி காயமில்லாமல் வந்தது பற்றி சந்தோஷப்படுகிறேன். மேலும், நம் வேணுவை இப்பொழுது பார்க்கச்செல்லுகிறேன். மறுபடியும் நாளைக்கு நாமெல்லாம் போகலாம்" என்று சொன்னார். அவர் பத்தினி ரமாவின் அழகைப் பார்த்து மிகவும் சந்தோஷம் கொண்டாள். சிறிது நேரம் கழித்து ரமாவும், அவள் தகப்பனாரும் விடைபெற்றுக் கொண்டு தங்கள் இல்லத்திற்குப் போனார்கள்.

## 5

வேணுவும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் குணமடைந்து தன் வீட்டிற்கு வந்து விட்டான். தினமும் காலை பீச்சுக்கு

உலாவப்போவான். அகஸ்மாத்தாக ஒரு நாள் காலை பீச்சில் போய்க்கொண்டிருந்த பொழுது ரமாவைக் கண்டான். பரவசமடைந்தான். ரமாவோ தன் பெற்றோர் கூட பேசிக்கொண்டிருந்தாள். திடீரென்று வேணுவைப்பார்த்து ஒருவித புத்துணர்ச்சி யடைந்தாள். மேலும் தன் தகப்பனாரும் வேணுவைக் கூப்பிட்டு "அப்பா வேணு, உன்னைப்பார்த்தால் உடனே எனக்கு என் குழந்தை ரமாவின் ஞாபகம் வருகிறது. மேலும் உன் உடம்பு சௌக்கிய மடைந்தது பற்றி மிகவும் சந்தோஷம். இதுவுமல்லாமல், ரமாவையும், உனக்கே கன்னிகாதானம் செய்து கொடுப்பதாக நாங்கள் நிச்சயித்திருக்கிறோம். வரதக்ஷிணை, எவ்வளவு வேண்டுமென்பதை உன் தகப்பனாருடன் சேர்ந்து ஆலோசித்துத் தெரிவி" என்று சொல்ல, வேணு, "பழம் நழுவி பாலில் விழுந்தது, அதுவும் நழுவி வாயில் விழுந்தது" என்பதற்கேற்ப, புளகாங்கிதனாய், "சார், வரதக்ஷிணை யாதொன்றும் வாங்க மாட்டேன். அப்பணம் இருந்தால் எத்தனையோ ஏழை மக்கள் பிழைப்பார்கள் அல்லவா? ஆதலால், எனக்குக் கொடுக்கும் வரதக்ஷிணைப் பணத்தை ஏழை மக்களுக்கு சாப்பாடு போடும்படி கோருகிறேன். இவ்விஷயத்தில் என் தகப்பனாருக்கும் பூரண சம்மதமே" என்று சொன்னான். எல்லோரும் "ரமா வில்லா" விற்கு போய் உல்லாசமாக இருந்தார்கள்.

ஓர் சுபதினத்தில் வேணுவுக்கும் ரமாமணிக்கும், மிகவும் எளிய முறையில் திருமணம் நடந்தேறியது. காதலர்கள் இருவரும் இன்ப சாகரத்தில் மூழ்கி ஏழைகளை உத்தாரணம் செய்ய தீவிரமாக உழைத்து வருகிறார்கள்.






எல்லா தேசத்தவர்களாலும் உபயோகித்து புகழ்பெற்றது

# லோத்ரா

கர்ப்பாசய ரோகநிவாரணி




சூதகவலி, குசுமவியாதி, வாதோன்மாதம், கணைச்சூடு, வயிற்றுவலி, அஸ்திஸிராவம், கர்ப்பஸிராவம், மலடு, சோமரோகம், சர்மவியாதி முதலிய சகலவிதமான வியாதிகளை போக்கும் திவ்விய ஔஷதம்.

விலை ஜாபிதா :
12 oz. ரூ. 3-0-0
6 oz. ரூ. 1-10-0

தயாரிப்பவர்கள் :

கேஸரி குடீரம், சென்னை.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.




# சங்கீதம்

அராலி ஸ்ரீமதி ச. அன்னபூரணி.

சங்கீதமென்பது கீதம், வாத்தியம், நிருத்தம் எனு முப்பொருளையும் பொதுப்படக் குறித்து நிற்கும். இவை ஒன்றற்கொன்றியைபுடைய வாவலின்,

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ
மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை"

என்றும்

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்"

என்றும்

சங்கீதமே யாவற்றிலும் தலைமையுடைத்தென்றும், மக்கள் செவியின்பம் உணராவிடத்து மாக்களெனப்பட்டு இவ்வுலகில் வாழினும் இறப்பினும் ஒன்றேயென்றும் திருவள்ளுவர் கூறியிருப்பதை நோக்குமிடத்து, யாவரும் செவிக்கு இன்பத்தைக் கொடுக்கும் சங்கீதத்தைக் கற்றிய வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. மக்கட் பிறவியின் ஓர் கடமையெனவும் பொருந்தும்.

சங்கீதம் தெய்வீகமானது. அது நமக்குக் கடவுளாற் கொடுக்கப்பட்ட அரும்பெரும் நிதியாகும். சங்கீதத்தின் இசையைத் 'தீங்கனி யிசை' என்று சொல்லும்போது எவ்வளவு சுவையுடையதாயும், இன்பத்தைத் தருவதாயுமிருக்கின்றது. சங்கீதம் நமதுள்ளத்தைக் கொள்ளைகொண்டு நம்மை ஆனந்த சாகரத்துள் ஆழ்த்துகின்றது. நாம் சங்கீதத்தைக் கேட்கும்பொழுது நம்மைச் சூழ்ந்திருக்கிற, நடக்கிற காரியங்கள் நமக்குத் தெரியாமற் போகின்றன. நம்மை யறியாமல் ஆனந்தக் கண்ணீர் விடுகின்றோம். உணவை மறந்து விடுகின்றோம். அப்பொழுது நமது செவியானது அதிக சுவையுள்ளதாகிய இசையின்பத்தை நுகருகின்றது. நமது செவிக்கு உணவில்லாதபோது தான் நாம் நமது வயிற்றுக்கு உணவைத் தேடுகின்றோம். அதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்"

என்றனர்.

இன்னும் நாம் கோபமாயிருக்கும்பொழுது நமது கோபத்தை மாற்றி மனதை நிம்மதி அடையச் செய்கின்றது. நாம் கவலையாக இருக்கும்போது, நம்மை இன்பத்துள் இழுத்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. சங்கீதம் தெரிந்தவராக இருந்தால் மற்றவர் துன்பத்தையும் அகற்ற முடியும். அன்றியும் நாம் தனித்திருக்கும்பொழுது சங்கீதம் நமக்கோர் பெருந்துணையாக விருக்கும். சிறு குழந்தைகள் கூட சங்கீதத்தில் விருப்புடையராய்க் கேட்கிறார்கள். அன்னையின் மென் தாலாட்டினாற் குழந்தை தன் அழுகையை நிறுத்தி உறங்குகின்றது. ஆறறிவுடைய மக்களையே யன்றி அறிவிற் குறைந்த உயிர்களையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் சங்கீதத்திற் குண்டு. இன்னிசைக்குரல் கேட்டின்புறு மசுணமாவினைக் கொல்லுங்

கொடியோர், முதலில் யாழை வாசித்து அதனை யின்புற்றிருக்கச் செய்து, பின்பு அதன் செவியிலேற்க வொண்ணாத பறையை முழக்கித் திகிலடையச் செய்து கொல்லும் வழக்கமுண்டென்ன தமிழ்நூல்களிற்கூறப்படலால் விலங்கு, புள் முதலியனவும் சங்கீதத்தில் ஈடுபடுவன என்பது நன்குபுலனாகின்றது. இசையின் ஆற்றலைப் பெரியாழ்வார் மிகவழகாகக் குறிப்பிடுகின்றார்.

"மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லுங் கடவாய் வழிசோர
இரண்டு பாடுந்துலுங் காப்புடை பெயரா
எழுது சித்திரங்கள்போல நின்றனவே"

"அவ னொருவன் குழலூதினபோது
மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவை செய்யுங் குணமே".

இன்னும் இசையானது கன்னெஞ்சரின் மனதையும் உருகச் செய்கின்றது. கள்வரைக் களவெடுக்க வொட்டாமல் தடுத்து மயக்கமுறச் செய்கின்றது. கொடிய விஷப்பாம்பும் இன்னிசை கேட்டுத் தன் தீய குணத்தை யொழித்து ஆடவாரம்பிக்கின்றது.

"ஓடுங் கொடிய விஷப்பாம்பும்
பேயு மிசைகேட் டுள்ளுருகி
யாடுங் கருங்கல் லசைந்துவரும்
அழுத குழவி குரலடங்கும்
மாடு மிசைகேட் டெழுதுவரும்
வந்த பசுவும் பால்சுரக்கும்
பாடு மிசைகேட் டுருகாரை
என்னென் றுரைப்பேன் பாவலரே"

என்னும் பாவினால் சங்கீதத்தின் ஆற்றலை ஒரு சிறிதளவு அறியலாம். பகுத்தறிவில்லாத மிருகங்களே இவ் விசையில் ஈடுபட்டுருகுமாயின், மக்களாகிய நாம் மயங்காமல், அதிலீடுபடாமல் என் செய்வது! "யாண்டிசை ஆண் டின்பம்" என்றார் ஓர் புலவர். இசையிலே கருத்தூன்றாதானை இருண்ட மன முடையானெனக் கொள்ளுதலே பொருத்த முடைத்தென்பர் அறிஞர். இப்படிப்பட்டவனை ஆங்கிலக் கவியாகிய ஷேக்ஸ்பியர்

"தன்னுளே யிசையிலாதான் றனியொலி
யியைபிலூறுங்
கன்னலுண்டுருகான் வஞ்சங் கடுஞ் சதி
கேடு செய்யப்
பின்னிடான் பிறர்க்கிராங்காப் பீடறு நெஞ்
சனாவான்
கொன்னர கிருளே வாய்ந்த குணத்தினான்
நம்பொணாதே"

என வெறுக்கின்றார்.

இன்னும் பலருடைய சமயக் கொள்கையின்படி, அவரவர் வழிபடு தெய்வத்தை வணங்குவதற்குச் சங்கீதம் ஏதுவாகவிருக்கின்றது. கிறிஸ்தவ சீஷர்கள், சைவ அடியார்கள், வைஷ்ணவ ஆழ்வார்கள் முதலியோர் கடவுளைத் தேவ கீதங்களாற் பாடி அவரது அருளைப் பெற்றுய்ந்தார்கள். இப்பொழுது அங்ஙனமே செய்துவருகின்றார்கள். இறைவனே இசையில் ஈடுபட்டுத் தன் அடியார் மீது அருள் பாலித்தலினால், 'இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க' என ஒரு சிறந்த அடியார் போற்றியிருக்கின்றார். முன்னொருகால், இலங்கைக் கரசனாகிய இராவணன் தற்பெருமைகொண்டு கைலைமலையைத் தூக்கிய பொழுது, இறைவன் தனது பெருவிரலால் ஊன்றி அமுக்கினார். அப்பொழுது இராவணன் பெரிது வருந்தியவனாய் அன்பினோடும் அவரைச் சங்கீதக்கருவி மீட்டி இசை மறையோதித் துதித்தனன். இறைவன் அவன் சங்கீதத்தி லீடுபட்டு அவனை அத் தண்டனையினின்றும் விடுவித்தருளினார். ஆதலால் இசையே அன்பிற்குப் பெருந் துணையாயும் வழிகாட்டியாயுமுள்ளது. இசை இனிதாயவிடத்து அன்பிலின்பு ஊற்றெடுக்கும். அவ் வன்பினின்றும், 'என்தன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும் உன்தனக்கேயாக்கிக் கொள்' என்னும் பெருநிலை பெருக்கெடுத்து, மனதை அமைதியாக்கிக் கருவிகரணங்களை ஓய்வித்துச் சாந்தமூட்டி எல்லாம் வல்ல இறைவனின் நினைவொன்றை மட்டும் நிலைப்படுத்திப் பதியச்செய்து வீடுபேற்றை யளிக்கும்.





நாம் உற்றுநோக்குமிடத்து இயற்கையன்னையே இசை வயப்பட்டிருத்தலைக் கண்டின்புறலாம். இலைகள் அசையும்போது ஓர்வித ஓசை ஏற்படுகிறது. காற்று வீசும்போது ஓர்வித ஓசை கேட்கிறது. கடற்கரையிலுள்ள சங்கை எடுத்துக் காதில் வைத்து உற்று கேட்போமாயின் அதிலிருந்தும் ஓர்வித இசை ஏற்படுவதைக் கவனிக்கலாம். பறவைகள் பாடும்போது இன்னிசையுடன் பாடுகின்றன.

பண்டைக்காலத்தில் யாழும் குழலுமே இசைமீட்டற் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இப்பொழுது இன்னும் பல சங்கீதக் கருவிகளுண்டு. ஆர்மோனியம், ஜலதரங்கம், பிட்டில், உருத்திர வீணை போன்றன பலவுள. இசைமீட்டற்குச் சிறந்த கருவி குழலும் யாழுமென்பர்.* ஆர்மோனியம் சங்கீதவுலகிற்கு ஓராற்றான் குறைவையுண்டாக்கிற்றென்பர் சிலர். புல்லாங்குழல் விசித்திர வேலையற்ற கருவியெனினும் அற்புத ஆற்றல் வாய்ந்தது.

இன்னோரன்ன பெருமை வாய்ந்த சங்கீதத்தை நாம் வருந்திக் கற்றல் வேண்டும். பெண்பாலார்க்கு இயற்கையிற்றானே இனியகுரல் பெரும்பாலும் அமைந்திருத்தலினால் அவர்கள் இதனை கற்றல் கடமையென்றே சொல்ல விரும்புகின்றேன்.

தமிழகத்தில் இக்காலத்தில் சங்கீதம் மிகவும் கீழ்நிலையை அடைந்திருக்கின்றதென்றே சொல்லவேண்டும். அதிக பணமுடைய ஒரு சிலரே பெரும் பொருள் செலவழித்து இசையாசிரியரைப்பிடித்து கற்க கூடியவராயிருக்கின்றனர். இசை பயிலுமாற்றலும் அவாவுமுடைய ஏழைப் பிள்ளைகள் சங்கீதத்தை கனாவிற்றான் படிக்க முடியும். இனிப் பொருளுடையாருள்ளும் சங்கீதத்தால் இன்பம் நுகரும் நோக்குடையராய் உயர்தரச் சங்கீதத்தைக் கற்போர் மிகக்குறைவு. சில பாட்டுகளை வாசிக்கத்தெரிந்தவுடன் சங்கீதத்தில் கரைகண்டவர்களென நினைத்து விடுகின்றார்கள். இன்னுஞ் சிலர் பல விலையுயர்ந்த கருவிகளை வாங்கி, வருபவர் போவர் காணுமாறு அழகாக வைத்துவிட்டு ஒவ்வொன்றிலும் நாலைந்து பாட்டு மட்டும் வாசிக்கப் பழகியதும் முற்றுமுணர்ந்த வித்துவான்களைப் போல் மகிழ்வுற்றிருக்கின்றனர். இவர்கள் தன் அறியாமையை என்னென்பேன்! இசைத்துறையி லாழ்ந்து செல்லுதற்கு இசைக்கருவி ஒன்றே போதுமானது. உருத்திரவீணையாயினுஞ் சரியே, சிறு புல்லாங்குழலாயினுஞ் சரியே, எதைபழகினும் அதில் சிறிது நுணுகிப் படித்தல் அவ

* 'குழலினிதுயாழினிது' எனவரூஉந்தேவர் குறளும் நினைவுகூர்தற் பாற்று.

சியம். இளமையிற் கல்வி சிலையிலெழுத்தாதலின் சிறுவயதிற்றானே தாளத்தோடு பாட்டுகளைப் படிக்கப் பழகுதல் வேண்டும். அங்ஙனம் பழகுதற்கு இசை வல்ல ஆசிரியர் பள்ளிக்கூடங்களில் இருத்தல் வேண்டும். அப்பொழுது இளமைதொட்டே ஏனைய பாடங்களோடு சிறிது சிறிதாகச் சங்கீதத்தையும் கற்கலாம். இதனாற் பதினைந்து பதினொரு வயதுள்ள மாணவி அல்லது மாணவனுக்குச் சங்கீதத்திலும் பற்றுண்டாகும். ஏழைப் பிள்ளைகளும் சங்கீதம் கற்றற்குறிய வழியினைக் காண்டல் அரசாட்சியாரின் கடனாம். அன்றேல் அப் பள்ளிக்கூடம் இருக்குமிடத்தைச் சூழ்ந்து வசிக்கும் செல்வர்கள் அல்லது மானேஜர் உதவி புரிந்து சங்கீதத்தை யாவரும் கற்கும்படி ஏவுதல் வேண்டும். இங்ஙனம் இளமையில் தகுந்த அஸ்திவாரம் இட்டுத் தொடங்கிய இசைக் கல்வியானது பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டிலேயே இருப்பினும் இடைவிடாது வளரும் தன்மை யுடையதாயிருக்கும். வயது முதிர்ந்தபின் பழகுதலினும் இளமையிற்றானே கற்கத் தொடங்குதல் மிக நன்று. இங்ஙனம் தொடங்கற்கு உரிய இடம் பாடசாலை களாதலின், ஆசிரியர்களும், பெற்றோரும், அரசினரும் ஒருங்குகூடி ஆனவற்றை இன்றே செய்க. இசை கல்வி தமிழகம் முற்றும் பிரவேசிக்க வேண்டுமென்பதே அடியேனது பெரு விருப்பம்.

## சுகாதாரம்

வீட்டிலிருக்கும் குழந்தைகளைத் தெருவில் மலஜலங் கழிக்கும்படி விடக்கூடாது. அது சுகாதாரக் கேடாகும். தெருவில் மலஜலங்கழிப்பது சமூகத்துக்கே அவமானமானது. இதை முக்கியமாகத் தாய்மார்கள் உணரவேண்டும். தெருவில் வரும் பண்டங்களை எல்லாம் நாம் வாங்கி உணவுப்பொருள்களோடு சேர்த்துக்கொள்ளக்கூடாது. கெட்டுப்போன காய்கறிகள், பழங்கள் முதலியவைகளை பகிஷ்கரித்து விடவேண்டும். சமூக நன்மைக்காக ஒவ்வொருவரும் தங்களாலானதைக் கட்டாயம் செய்ய வேண்டும். சுகமாய் வாழவேண்டுமானால் வீட்டையும் ஊரையும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.



# ஜோதிபாய்

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை, டர்பன்

மேவாடின் சூரியனாகிய ராணா பிரதாபனின் சரித்திரத்தை அநேகர் அறிந்திருக்கக் கூடும். இவனாளுகையின் கடைசி காலத்தில் சில ராஜத்துரோகிகள் மகம்மதியர்கள் பக்கம் சேர்ந்து இவன் ராஜ்ஜியம் நசிப்பதற்குக் காரணமானார்கள். ராணா பிரதாபன் மகம்மதியர்களுடன் சம்பந்தம் விளைவிப்பதை எவ்வளவுக் கெவ்வளவு வெறுத்து வந்தானோ, அவ்வளவுக் கவ்வளவு அச்சம்பந்தம் விசேஷம் வாய்ந்ததென்று நினைத்த ராஜபுத்திரர்களும் இருந்தனர். அவர்களில் இக்கதையில் கூறப்படும் ராஜா மான்சிம்மனும் ஒருவன். தன் தங்கையாகிய ஜோதிபாயை அக்பருக்கு விவாகம் செய்து கொடுத்து, அதனால் சக்ரவர்த்தியின் தயவைப் பெற்றிருந்தான். ஒருநாள் சூரியாஸ்தமன வேளையில் இவன் தனிமையாக ராஜஸ்தானத்திலிருக்கும் ஆரவலி மலையின் அடிவாரத்தில் தனது சௌரியப் பிரதாபங்களைத் தானாகவே புகழ்ந்துரைத்த வண்ணம் உலாவிக்கொண்டே நிமிர்ந்து நோக்கினான். எதிரில் ஒரு ஸ்திரீரத்னம் வருவதைக் கண்டான்.

“இந்த ரமணி யார்? இவள் அடிகள் செழுமையாக வளர்ந்து, பனியில் தோய்ந்த அருகம் புல்லின்மேல் பெருங்காற்றினாலடிபட்டு வீழ்த்தப்படும் புஷ்பராசி போன்று மிக மிருதுவா யிருக்கின்றனவே. இவளின் மெல்லிய நடை சேனா வீரர்களின் முரட்டு அடிகளினால் கிளரப்பட்டிருக்கும் இக்கானகப் பாதைக்கு மெத்த அழகைத்தருகின்றதே. இவள் என்னைக் குறித்தே நடந்து வருவதாகத் தெரிகின்றது. இதென்ன ஆச்சரியம்! இல்லை. ஒருக்கால் இவள் இவ்வன தேவதையோ! பின் யாராயிருக்கக் கூடும்? இவள் விசனத்திற்கே இருப்பிடமானவளாகக் காணப்படினும், இவள் மனத்துள்ள துயரமே இவளின் அழகை இன்னும் அதிகரிக்கச் செய்கின்றதென்பதில் தடை என்ன?” என்றிவ்வாறு மான்சிம்மன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவ்வனிதாரத்னமும் எதிரில் வந்து நின்றாள்.

மான்சிம்மன்: அம்மா! அருகில் வா. நானொரு ராஜபுத்திரன். ஸ்திரீகளை எவ்விதம் கௌரவிப்பதென்பதை ராஜபுத்திரன் நன்கறிவான். ஆகையால் நீ சிறிதும் அச்சப்பட வேண்டியதில்லை.

ஸ்திரீ: இச்சொல் முழுப்பொய்.

மான்: ஏ! அதிகப் பிரசங்கி! என்ன சொன்னாய்? மான்சிம்மனைப் பொய்யனென்று தைரியமாய் மறுபடியும் சொல்வாயா?

ஸ்திரீ: ஆம், இவ்வளவு மாத்திரமல்ல! இதிலும் அதிகமாகவே சொல்வேன்.

மான்: உன் தைரியங்கண்டு எனக்களவற்ற வியப்புண்டாகின்றது. மான்சிம்மனின் வாள் ஸ்திரீகளின் தேகத்தைப் பரிசிக்காதன்றோ? அதனால், பெண்ணே நீ ஆபத்தில்லாது உயிர்த்திருக்க ஏதுவுண்டு?

ஸ்திரீ: ஆயின் உடன் பிறந்தானின் இரத்தம் அதினும் தாழ்ந்ததோ? உன் வாளானது சகோதர ரத்தத்தினால் கறைபட்டிருக்க வில்லையா?

மான்: மாதே! நீ ஏதோ புதிர் போடுகிறாயே. இதன் அர்த்தம் என்னவென்று தெரிந்துகொள்ளக் கூடிய சாமர்த்தியம் என்னிடத்திலில்லை.

ஸ்திரீ: (வீராவேசத்துடன்) உன் வாள் களங்கமுறவில்லையா? உன் வாளை உன் சகோதரர்களான ராஜபுத்திரர் மீது நீ உபயோகிக்க வில்லையா? மேவார் ராச்சியத்தின் சூரியனும் பாரத மக்களால் பரிசுத்த னென்றும், பூஜிக்கத்தக்கவ னென்றும் விளங்கும் பிரதாபனுக்கு விரோதமாக மொகலாயருடன் நீ சேர்ந்திருக்க வில்லையா? இதைக்காட்டிலும் வேறென்ன வேண்டுமென்கிறாய்?

மான்: அவன் பெயரை இனி ஒரு முறை என் முன்னிலையில் உச்சரிப்பயானால் நீ பெண்பால் என்பதைக் கூட மறந்து விடுவேன், தெரியுமா? ஜாக்கிரதையாய்ப் பேசு!

ஸ்திரீ: (அலட்சியமாய் சிரித்துவிட்டு) இதில் சற்றும் ஆச்சரியமே இல்லை. தாய் நாட்டின் துரோகிக்குப் பெண் வதையில் அச்சமேது?

மான்: நிறுத்து, நிறுத்து. என் கோபத்தை உன் சொற்களா லதிகப்படுத்தாதே. (உறையிலிருந்து வாளை உருவுகிறான்).

ஸ்திரீ: உன் உடை வாள் என்னைப் பயமுறுத்தக்கூடிய சக்திவாய்ந்த தன்று. பளபளவென்று மின்னும் உன் வாளை உற்று நோக்கு. ஐயோ! அதில் படிந்திருக்கும் உன் அன்னையின் ரத்தக்கறை சிறிதும் அழியாமலிக்கின்றதே!

மான்: மூடமே! பைத்தியக்காரி! என்ன சொன்னாய்!

ஸ்திரீ: என்ன சொன்னே னென்றா கேட்கிறாய்? இதைத்தான் சொன்னேன். மொகலாயர்களுக்காக நீ காட்டும் சூரத்தன்மை ஒவ்வொன்றும், செய்யும் உபகாரமனைத்தும் உன் ஜன்ம பூமிக்கு நீ காட்டும் கொடுமைகளன்றோ? இந்நன்றி மறந்த பாதகனை தேசமாதா என்றேனும் மன்னிப்பாளோ? மறந்துவிடுவாளோ?

மான்: வாயை மூடு. உன் அழகு உன் உயிரைக் காப்பாற்றா தென்பதைத் தெரிந்து பேசு. உன் அழகைக் கண்டு மயங்கி, உன்னை சிட்சியாமல் விடுவதற்கு நான் யவனனல்ல.

ஸ்திரீ: (ஆச்சரியத்துடன்) என்ன! நீ யவனர்களை வெறுக்கிறாயா? அவ்விதமாயின் உன் தங்கையை யவனனுக்கு ஏன் விவாகம் செய்வித்தாய்? மொகலாயர்களுக்கேன் சகாயம் செய்தாய்!

மான்: இவை யெல்லாம் என் நாட்டில் ரத்த ஆறு பெருகாதிருப்பதற்கே.

ஸ்திரீ: பிரதாபன் உனக்குச் செய்த துரோகம் என்ன? அவனை ஏன் பகைக்கிறாய்? உன்னிடம் நிலைத்துள்ள கபடமும் துரோக சிந்தையும் அவனிட மில்லாமையால் நீ இவ்வாறு செய்கிறாய் போலும்!

மான்: (வாளை உருவிய வண்ணம்) பெண் பேயே! உயிரிழக்கத் தயாராயிரு. இனியும் உன் கடுஞ் சொல்லைச் சகிக்க மாட்டேன்.





ஸ்திரீ: (தைரியத்துடன்) ராஜபுத்திரப் பெண் மரணத்திற்கு ஒரு நாளும் பயப்படவே மாட்டாள்.

மான்: (வியப்புடன்) என்ன! நீ ராஜ புத்திரியா?

ஸ்திரீ: ஆம். ஒரு காலத்தில் களங்கமற்ற ராஜபுத்திரப் பெண்ணாகவே நானிருந்தேன்.

மான்: இருந்தேன் என்றால்? இப்போதும் நீ ராஜப்புத்திரப் பெண்தானே. உன் அதிகப் பிரசங்கித் தனத்தை மன்னித்து விட்டேன். ரகசிய நிலைமையிலுள்ள உன்முகத்தைப் பார்ப்போம். வெளிச்சத்தில் வந்து நில். உன்குரல் எனக்கு முன் பழகியதாகத் தோன்றுகின்றது. டில்லி பாதுஷா மொகலாய சக்ரவர்த்தி அக்பர்கூட அஞ்சும் மான் சிம்மனை மிரட்டிப் பேசக்கூடிய ஸ்திரீ ரத்னமாகிய நீ யார்!

ஸ்திரீ: அப்படியல்ல! அப்படியல்ல! "அக்பரும் துவேஷிக்கக் கூடிய மான் சிம்மன்" என்று சொல்.

மான்: அவனுக் கவ்வளவு தைரியமேது? அவனுடைய சிங்காதனத்திற்கு ஆதாரம் நானே என்பதை அவன் நன்கறிவான். இவ்விதமிருக்க அவன் என்னைக் கண்டு அஞ்சவேண்டியது தானே.

ஸ்திரீ: ஐயோ, உன் புத்தி இவ்வளவு தானா? ஜயமடைந்த அரசன், தான் ஜெயித்ததாகப் பெருமை பாராட்டுவானன்றி, ஜெயிக்கச் செய்தவனை மதிக்கவே மாட்டான். தன் வாளுக்கு அஞ்சித் தப்பித்தவனை கௌரவ புத்தியுடன் நோக்குவானென்று நீ நினைப்பது முழுத் தவறு. அக்பர் உன் முதுகைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த போதிலும், வீரனும் தேசாபிமானியும், பௌருஷமும் வாய்க்கப் பெற்றவனும், சுய மதிப்பை இழக்கச் சகியாதவனும் ஆகிய எதிரியையே (பிரதாபனையே) அவன் தன்மனதில் புகழ்ந்து கௌரவிக்கின்றான்.

மான்: (ரோஷத்துடன்) நில், நில். மனிதன் பொறுமைக்கு எல்லையுண்டு. நீ உண்மையில் பிரதாபனால் அனுப்பப்பட்டிருக்கும் வேவுகாரி என்பதில் தடையில்லை. க்ஷத்திரிய தர்மப்படி நீ தண்டிக்கத் தக்கவள் தான்.

(என்றிவ்வாறு கர்ச்சித்து வாளை யுருவிக் கை ஓங்கும்போது ஸ்திரீ யானவள் தன் மீது போர்த்திருந்த போர்வையை எடுத்தெறிகிறாள்.)

மான்: (திடுக்கிட்டு) என்ன, என்ன! ஜோதிபாய்! என் தங்கை! இதென்ன நான் காண்பது கனவா?

ஸ்திரீ: கனவல்ல, ஆம், உன் தங்கை ஜோதிபாய் நானே.

மான்: தங்காய்! எனதன்புள்ள சகோதரீ! பரத கண்டத்து எதிர்கால சக்கிரவர்த்திக்கு அன்னாய்! என்னை மன்னித்து விடு. நான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள். நிற்க, நீ துயரப்படுபவளாகக் காணப்படும் காரணம் யாதோ?

ஜோதி: ராஜ புத்திர வீரனாகிய உனக்கு நான் துயரடையும் காரணம் தெரியாதது யாதோ!

மான்: தங்காய்! உன் மொழிகள் எனக்குத் திகைப்பை விளைவிக்கின்

றனவே, எவளின் ஆக்ஞா சக்கரத்தினால் இப்பாரத வருஷம் சுழன்று வருகின்றதோ, எவள் மிதமிஞ்சிய ஐசுவரியம், சுகம், போகம், பாக்கியம் இவைகளாகிற பெருங் கடலில் அழுந்தெழுந்து கொண்டு வருகின்றனளோ அத்தகையவளின் வாயினின்றும் துயரமென்ற சொல் புறப்படுமாயின் நான் திடுக்கிட மாட்டேனோ?

ஜோதி: உன் சுயநலப் பேய்க்கு என்னைப் பலியிட்டு விட்டாய்.

மான்: பட படக்காதே, தங்காய்! மனதைச் சாந்தப் படுத்திக்கொள். உன் மனம் கவலைகொண்டிருக்கிறது. சமாதானப்படுத்திக்கொள். உன் சொற்கள் எனக்கு விளங்கவே இல்லையே. எனக்கு அர்த்தமாகும்படி கூறு.

ஜோதி: விளங்கவில்லையா? சொல்லுகிறேன், கேள். என்னைப் பிறமதத்தினனுக்கு ஏன் விவாகம் செய்து கொடுத்தாய்?

மான்: என்னுடன் பிறந்தவளின் க்ஷேமத்தை நான்தானே கோர வேண்டியவனாயிருக்கிறேன். இதை யனுசரித்து நீ சக்கிரவர்த்தியின் மனைவியாய் அகண்ட ஐசுவரியத்தில் அளவற்ற போக பாக்கியங்களுடன் சுகமாக வாழ்வதன் பொருட்டே உன்னை இவ்வாறு மணக்கச் செய்தேன்.

ஜோதி: (கோபத்துடன்) நான் சுகமாக வாழ்வது என் புருடனின் அன்பினாலும் எனது நற்குணத்தினாலுமன்றி, உனது நிலைமையை முன்னேற்ற மடையச் செய்வதற்காக வென்றே இக்கலியாணத்தைச் நீ நிச்சயப்படுத்த வில்லையா?

மான்: தங்காய்! நீ இவ்வாறு என்னை தூஷிக்கலாமா?

ஜோதி: நீ உன் சுயநலத்தை மட்டும் கவனித்தாயன்றி, உன் ஏழைத் தங்கையின் சுகம்பற்றி நீ சிறிதேனும் சிந்தித்துப் பார்த்தாயா?

மான்: (பரிகாசத்துடன்) ஐயோ பாவம்! டில்லியின் அரசி மெத்த ஏழையன்றோ?

ஜோதி: எல்லாவற்றிலும் ஐசுவரியமே முக்கியமா? அவ்விதமாயின், அத்தகைய போதனையை எனதிளமைப் பருவமிருந்து எனக்கேன் உபதேசிக்க வில்லை? ஐசுவரியத்தை மதியாத ஹிந்து குலத்தில் நான் ஏன் பிறந்தேன்?

மான்: தங்காய், எல்லா மதங்களுடைய சாராம்சமும் முடிவிலொன்றே. மொகல் சக்கிரவர்த்தியே சுயமாக இக்கொள்கையை யனுஷ்டித்து நடத்துகிறாரன்றோ?

ஜோதி: இதுபற்றி உன்னுடன் சர்ச்சை செய்ய நான் விரும்ப வில்லை. எனது இளமைப் பருவத்திய சிந்தனைக்குத் தற்கால நிலைமை சிறிதும் ஒவ்வாததாயிருக்கின்றது. நீ என்னை உன் ராஜ்யத்திலுள்ள ஓர் ஏழை ராஜபுத்திரனுக்கு ஏன் அளித்திருக்கக் கூடாது? உனது சுயநலத்தை பெரிதென மதித்துத் தங்க நாணயங்களுக்காக என்னை விற்று விட்டாய். இக்கவலை என்னை இராப்பகலாக வருத்துகிற தென்பதை நீ எங்ஙனம் அறிவாய்?

மான்: தங்காய், எனக்கிப்பொழுதே ஞாபகமாயிற்று. இதுபற்றி நீ முன்னதாகவே ஏன் சொல்லாதிருந்தாய்?



‘கிணத்துக்கு’





பார்வதிபுரம் ஸ்ரீராமகிருஷ்ண பக்தசமாஜம்.

படத்தில் அக்கிராசனர் ஸ்ரீமதி கோமளவல்லியம்மாளும், காரியக்கமிட்டி யங்கத்தினர்களும், இலவசக்கல்வி கற்றுக்கொள்ளும் மாணவிகளும் இருக்கிறார்கள்.



ஜோதி: பெற்றோரளிக்கு மிடத்தில் மணந்து, கணவனுக்குக் கீழ்பணிந்து, கிடைத்தது கொண்டு ஒருவாறு சமாதானத்துடன் காலங் கழித்தலே பாரதப் பெண்களின் தர்மமாகும். இப்பொழுதேனும் உன் பாபத்திற்குப் பச்சாத்தாபமடைந்து மன்னிக்கும்படி கடவுளை வேண்டிக்கொள்.

மான்: அன்னாய்! என்னை மன்னித்துவிடு! மன்னித்துவிடு!! நான் செய்த பெரும் பிழையை மன்னித்து விடு. (முழந்தாளிட்டு வேண்டுகிறான்)

ஜோதி: நான் என்னவோ உன்னை மன்னித்தே இருக்கிறேன். ஆனால், உன் ராஜ்ய லட்சுமி உன்னை மன்னிப்பாளா?

மான்: (கண்ணீர் விட்டவண்ணம்) அப்படியாயின் நான் இனி என்ன செய்வேன்? இவ்வளவு பாடு பட்டும் நான் என் பெயரை மணலின் மீது வரைந்துள்ளேன் போலும்.

ஜோதி:-ஆம். ஆம். சுயநலக்காரனாகிய உன் பெயர் மணல்மீதும், தாய் நாட்டுத் தொண்டனாகிய பிரதாபனின் பரிசுத்தப் பெயர் ஒவ்வொரு கற்பாறை மீதும் வரையப்பட்டுள்ளன.

மான்: (தலைமீது கை வைத்து மெத்த மன வருத்தத்துடன்) ஐயோ! பாழும் விதியே! என் ஒப்பற்ற காரியங்கள் முழுதும் இவ்வாறு முடிந்தனவோ?

ஜோதி:- இக் கேள்விக்கு நான் ஏன் பதில் கூறவேண்டும்? சரித்திர நூல்கள் விஸ்தாரமாகக் கூறப்போகின்றன.

மான்சிம்மன் இம்மொழி கேட்டு நடுநடுங்கினான். ஒன்றுந் தோன்றாதவனாகி மௌனத்துடன் குறுக்கும் நெடுக்குமாகத் திரிய வாரம்பித்தான்.

ஜோதிபாய் மேற்றிசையை நோக்கி "ஆஹா எவ்வளவு ரமணீயமான நிழல் பூமிக்கு இறங்கிக் கொண்டிருக்கின்றது! அந் நிழல் ராஜபுதனத்தின் ஒவ்வொரு பாறை மீதும் எவ்வளவு அழகை உண்டாக்குகின்றது? மேவாரின் சூரியனாகிய ராணா பிரதாபனின் கீர்த்தி யொன்றே இனி விளங்கப்போகின்றது. அண்ணா! சுயநல ஆசையால் முன் யோசனை சிறிதுமின்றி நீ செய்து விட்ட பெரும் பிழையால் ரஜபுத்ர வம்சமும் ராஜ்யமும் வேரோடி நாசமாகி, இனி இப் பாகங்களில் இருள் கவிழ்ந்து விடப்போகின்றதே. ஐயோ!" என்று கண்ணீருதிர்த்து நின்றாள்.

184248.

# வைத்தியப் பகுதி

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

## தாய்ப்பால்

சிசுவுக்கு தன் தாய்ப்பாலன்றி வேறு உணவு கடவுள் படைத்திருப்பாரானால் தாயின் அன்பிற்கு இடமாகிய நெஞ்சின் அருகில் பால் சுரப்பிருக்கமாட்டாது. பாலுக்காக ஓர் உறுப்பை ஏற்படுத்தி சிசு பிறந்தவுடனே அச்சிசுவின் உணவுக்கு வேண்டிய அளவு பால் அந்த உறுப்பில் சுரக்கிறதனால், அந்தப் பால் சிசுவுக்கென்றே கடவுளால் ஆக்கப்படுகிறது. காரணமின்றி ஆண்டவன் ஒன்றையும் படைக்கவில்லை. சில பெண்கள் குழந்தைகட்கு தாங்கள் பால் கொடாமல் தாதி வைத்தும், தாய்ப்பாலுக்குப் பதிலாக வேறு உணவுகள் கொடுத்தும் வளர்க்கிறார்கள். விலங்குகளின் குட்டிகள் பிறந்த நிமிஷமே பழைய உணர்ச்சியினால் தங்கள் தாயின் பால்தான் தங்களுக்குரிய ஆகாரமென்றறிந்த தாயினிடம் பால் குடிப்பதையும், அந்தத் தாய் மிக அன்புடன் குட்டிக்கு பால் கொடுத்து அதன் உடலை நாவினால் நக்கி இன்புறுகிறதையும் நாம் எல்லோரும் பார்க்கிறோம். மனிதர்கள் மிருகத்திலும் மிக்க பகுத்தறிவுடையவர்களாயிருந்தும் இந்தக் காரியத்தில் தம் சிசுவை மறக்கிறார்கள்; சிசுவுக்குத் துரோகம் செய்கின்றார்கள். இது பெரும் பிழை. தாய்க்கும் சிசுவுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. அதனால் குழந்தைக்கு தன் தாயின் அமிர்தமயமான பாலைப்போல மற்றெந்தப் பாலும் குணம் செய்யமாட்டாது. அன்னை தன் குழந்தையை அன்புடன் மார்போடணைக்குங் காலத்தில் அவளுக்குண்டாகும் ஓர் வகை பூரிப்பும் அப்போது அவள் மார்பிலுண்டாகும் பாற் சுரப்பும் இன்பமும் தாய்க்கும் குழந்தைக்குமிருக்கும் தொடர்பைக்காட்டுங் குறியாகும். தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கும்படி கடவுள் அமைத்திருப்பது குழந்தையின் நலத்துக்கு மாத்திரமல்ல. அச்சிசுவைப்பெற்ற தாய்க்கும் அதனால் நலமிருக்கிறது. ஆகலால் தன் குழந்தைக்குத் தானே பால் கொடாத தாய் அந்த நன்மைகளை அடைய வியலாது.

தாய் தன் குழந்தைக்கு பால் கொடுப்பதனால் உண்டாகும் நன்மைகள்:—

1. கருஉயிர்த்த (பிள்ளைபெற்ற) மாதத்தில் தாய்க்குண்டாகக் கூடிய பல நோய்கள் நேரிடா.

2. பிள்ளை பெறுவதற்கு முன் வலுவற்று மெலிவாயிருந்த தாய் கருவுயிர்த்து தன் குழவிக்கு முலைகொடுக்கும் காலத்தில் இன்பமும் வலுவும் அடையக்கூடும். ஆனால் வருஷக்கணக்கில் குழந்தைக்குப் பால் கொடுத்தால் இந்த நன்மை கெட்டுப் போகும்.



3. முலைக்கடுவன் என்று பெண்களுக்கு வரும் ஒருவகைக் கொடுமையான நோய் வராது. அது பிள்ளை பெறாத மலடிகளுக்கே பெரும்பாலும் உண்டாகும்.

4. பொதுவாக சிசுக்களுக்குப் பால் கொடுக்குங் காலத்தில் நூற்றில் எழுபது பெண்களுக்குக் கருப்ப முண்டாகாது. அடிக்கடி கருப்பெற்றால் விரைவில் உடம்பில் வலுவற்றுப் போகும். ஆகலால் அதுவும் நன்மையே யாகும்.

5. குழந்தை செம்மையாய் வளரும். செமியாக்குணம், வயற்றுவலி, வயிற்றோட்டம் முதலிய பிணிகளணுகா. தாய் பாலுண்டு வளரும் குழந்தைகளுக்கும், வேறு உணவு உண்டு வளரும் குழந்தைகளுக்கும் மிக வேற்றுமையுண்டு. கைப் பால் கொடுப்பதனால் குழந்தைகளுக்கு வியாதி கண்டு அகால மரணத்துக்கிடமாகும். இதன் வேற்றுமைகளை விசாரித்து அடியிற் சொல்லப்படுங் கணக்கைச் சராசரியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தாய்ப்பாலே உண்டு வளருங் குழந்தைகளில் நூற்றில் 85-ம், தாய் பாலும், வேறு உணவுமுண்டு வளருங் குழந்தைகளில் நூற்றில் 53-ம், முற்றிலும் வேறு உணவு கொடுத்து வளருங் குழந்தைகளில் நூற்றில் 26-ம் தான் பிழைக்கிறதாகத் தெரிய வந்திருக்கிறது. ஆகையால் தாய்பாலே கடவுள் உணவென்றறிய வேண்டும்.

6. இருமல், காசம், கண்டமாலை முதலிய கொடிய வியாதிகள் நோயில்லா நல்ல உடம்புள்ள தாயாரின் பாலைக்குடித்து வளரும் குழந்தைகளுக்கு வராது.

தாய் சிசுவுக்குப் பால் கொடாவிட்டாலுண்டாகுந் தீமைகள்:—

1. பிரசவித்த மாதத்தில் சிசுவுக்குத் தாய் தனது முலைப்பால் கொடாவிட்டால் அதனால் முலைகளில் பால் கட்டுப்பட்டு வீங்கிக் காய்ச்சலும், கட்டிகளுமுண்டாகும். உடல் வலுவற்று பல பிணிகளுண்டாகும்.

2. பிள்ளைபெற்றவுடன் குழந்தைகளுக்குத் தாய் தனது பாலைக் கொடுப்பதினாலேயே தாயின் கருப்பை சுருங்கி கட்டுப்பட்ட உதிரம் சரியாய் கழிந்து விரைவில் சுபமுண்டாகும். தாய்ப்பால் கொடாவிட்டால் உதிரப்போக்கு மிகுதியாகி அதிக பலவீனத்திற்கிடமாகும். தாய் விரைவில் வெளியேறி நடமாடி வீட்டு வேலை முதலியன பார்க்க உடம்பில் வலுவு ஏற்படாது.

3. கருப்பை சுருங்கிப் பழைய நிலையை அடையாவிடில் அது எப்போதும் சற்றுப் பருமனுகவும், பளுவாகவுமிருக்கும். அதிலிருந்து வெள்ளை ரோகம் என்று பெண்கள் சொல்லுகிற ஓர்வகை அழுக்கு நீர் ஓயாமல் வடிந்து கொண்டிருக்கும். அதனால் தேகமெலிந்து பலவீனப்படும். அடிவயிற்றில் வலியுண்டாகும். முதுகெலும்புக்குள் உளையும். கருப்பை புரண்டு வளைந்து தன்னிடம் விட்டு விலகிப்போகும். முடிவில் உயிரோடிருப்பதே பெருந் துன்பமாகத் தோன்றும்.

4. கடைசியாய் குழந்தைக்குத் தாய் முலை கொடுப்பதனால் உண்டாகிற மேற்கண்ட நன்மைகள் ஒன்றுங்கிடைக்காது.

ஆனால் சில சமயங்களில் தாய் தனது பாலை சிசுவுக்கு கொடுக்கக்கூடாது. அவை யாவன:—

1. தாய்க்கு நேரிடும் கடுங்கோபம், அதிக துக்கம், சஞ்சலம், திகில், வெருட்சி

முதலிய காரணங்களால் இரத்தம் ஓட்டம் பேதப்படும். அந்த நேரம் அவள் மார்பிலிருக்கிற பாலும் அது போலவே பேதப்படும். இப்படிப்பட்ட காலங்களில் தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கக் கூடாது. நம் நாட்டில் சில பெண்கள் வீடுகளில் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொண்டு தொண்டை கம்மிப் போகுமட்டும் இரைந்து ஓயாமல் சண்டைசெய்வதில் வெகு சமர்த்தர். இப்படிப்பட்ட காலங்களில் குழந்தையை எடுத்துப் பாலும் கொடுத்துக் கொள்வார்கள். அதனால் குழந்தைக்கு வியாதி நேரிடும். இதன் காரணமறியாமல் பல வைத்தியங்கள் செய்வதனால் குழந்தைக்குத் துன்பம் நேரிடும். ஆகையால், தாய் சினமிருந்தகாலங்களில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். உடம்பில் இரத்தக்கொதிப்பு அடங்கிய பின் குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும். கடுஞ்சினத்தால் இரத்தம் கொதிப்புண்டாகுங் காலத்தில் முலைப்பால் முட்டையின் வெண் கருவைப்போல் உறைந்து பிசின்மாதிரியாகும். அந்தப் பாலை அருந்தின சிசுவுக்கு நோயுண்டாகும். சினமிகுந்த பெண்களும், சண்டை போடுகிறவர்களும் குழந்தைகட்குப் பால் கொடுப்பதில் மிகக்கவனமாய் இருக்க வேண்டும்.

2. மிகவருந்திக் கரு உயிர்த்தலினால் உண்டாகும் காய்ச்சல், குளிர்காய்ச்சல், காய்ச்சல்கட்டி, பால்கட்டி முதலிய வியாதிகளால் வருத்தப்படும் தாய்மார், தங்கள் குழந்தைகளுக்கு இந்தச் சமயங்களில் பால் கொடுக்கக்கூடாது.

3. எக்காரணத்தாலாவது உடம்பு அதிக பலவீனப்பட்டு அதனால் பால் சத்துக் குறைந்திருக்குமானால், அப்போது தாய் குழந்தைக்குத் தன் முலைப்பால் கொடுக்கக்கூடாது.

4. காக்கைவலி, பைத்தியம், கண்டமாலை, காசம், இருமல், க்ஷயம் முதலிய கொடூரமான நோய்கள் உண்டானால், அந்தத் தாய் தன் குழந்தைக்கு பால் கொடுக்கக்கூடாது.

5. தாய்க்குப்பால் மிகக் குறைவாயிருப்பினும், அல்லது பால் மிகுதியாயிருந்தும் பாலில் சத்துக்கள் குறைந்து நீர் மிகுந்திருக்குமானால் அந்தப்பாலையும் குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது.

6. முலைக்காம்பு சிறுத்து உட்சுருங்கியிருந்தால் தாய் பால் கொடுக்க இயலாது.

7. தாய் கருப்பெற்றால், பாலின் குணம் மாறி சத்துக்கள் ஏறுமாறாகும். அப்போது குழந்தைக்குப் பால் கொடுக்கக் கூடாது. தாய் கருவிலிருக்கும் பிண்டத்திற்கும், கையிலிருக்கும் குழந்தைக்கும் போதுமான வளர்ச்சிக்குத்தக்க உணவுகொடுக்க இயலாது.

8. மாதவிலக்குக் காலங்களில் பாலின் தன்மைமாறிக் கெட்டுப் போயிருக்கும். அப்போதும் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடாது.

இந்த எட்டுவகை காரணங்களில் ஏதேனும் ஒன்றிருந்தால், தாய் பால் கொடாமல் தாதிவைத்தாவது பசும்பால் கொடுத்தாவது வளர்க்க வேண்டுமேயன்றி, குழந்தைக்கு நோய் உண்டாகும்படி, தானே தன் பாலைக் கொடுக்கக்கூடாது.



# ஸ்ரீமதி ராமாபாய் ரானடே

"கண்ணன்"

இந்தியா தேசத்தின் பொது வாழ்க்கையில் சிறந்து விளங்கும் பாக்கியம் ஒரு சில தம்பதிகளுக்கே கொடுத்து வைத்திருக்கிறது. இன்று அப்பெருமையை அடைந்து விளங்கும் சதிபதிகளில் முக்கியமானவர்களில் மகாத்மா காந்தியும், அன்னைகஸ்தூரிபாயும் தலை சிறந்து நிற்கின்றனர். திரு. கே. எம். முன்ஷியும், லீலாவதி முன்ஷியும் அவ்வாறே. ஆனால் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே இதர சமூக சீர்திருத்தக் கொள்கைகளைக் கையாண்டு அவைகளைப்பற்றிப் பிரசாரமும் செய்யும் கௌரவமும் தைரியமும் ரானடே தம்பதிகளுக்கே உரியன. ஸ்ரீமான் ரானடே பிரபல மஹாராஷ்டிர அரசியல் நிபுணர். அவர் காலத்தில் அவரது சாதுர்யத்தையும், சாமர்த்தியத்தையும் கண்டு நாடு அதிசயித்தது. அவர் பம்பாய் ஹைகோர்ட் நீதிபதியாக வேலை செய்து வந்த காலத்தும் தன் பொதுநல காரியங்களைக் கைவிடாது செய்து வந்தார். அன்னாரின் உத்தம பத்தினியே ஸ்ரீமதி ராமாபாய் ரானடே.

அவரின் அரிய பெரிய சேவையைக் காட்டுவதற்கு இன்று பூனாவில் திகழும் சேவாசதனம் ஒன்றே போதும். அதை ஸ்தாபித்தவர் ஸ்ரீமதி ராமாபாய் தான். இந்த ஸ்தாபனம் பம்பாய் மாகாண வனிதையர்க்கு கல்வி, பொருளாதார, அரசியல் துறைகளில் செய்து வந்திருக்கும் நன்மைகள் பல. அதன் ஆதிகர்த்தா ராமாபாய்.

## பெற்றோர்

ஸ்ரீமதி ராமா பிறப்பிலேயே நகரவாசியல்ல. நாகரிகம் என்ற வெறும் பகட்டை மட்டும் கையாண்டுவரும் மாகாண ஜில்லா தலை நகரங்களில் பிறந்தவரல்ல ராமா. அவர் சாதரா ஜில்லாவில் மலைப்பிரதேசத்திலுள்ள ஒரு சிறு நகரத்தில் பிறந்தார். அவர் முன்னோர்கள் கௌரவ குடும்பத்தைச் சார்ந்தவர்கள். செல்வாக்கும் அந்தஸ்தும் வாய்ந்தவர்கள். இவர்கள் பீஷ்வாக்களுக்கு செய்துவந்த பணியைப்பாராட்டி ஒரு பீஷ்வா இக்குடும்பத்தை கௌரவிக்க தேவராஷ்டிரத்தில் ஒரு ஜாஹீர் வழங்கினார்.

ராமாவின் தந்தை மிகுந்த பரோபகாரி. சீரிய குணமும் நன்னடத்தையும் தெய்வ பக்தியும் மிகுந்தவர். தர்மம் செய்வது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. தன்னாலான உபகாரங்களை அவ்வூரிலுள்ள ஏழைமக்களுக்கு மனப்பூர்வமாய் செய்துவந்தார். தாயும் ஏழைகளிடத்திலன்பு மிக்கவள். அவளுக்கு நாட்டு வைத்திய முறையும் தெரியும். ஆகையால் அவ்வூரில் வியாதிகளால் பீடிக்கப்பட்ட ஏழைகளெல்லாம் ராமாபாயின் அன்னையை நாடிவருவார்கள். அவளும் அவர்களை அன்புடன் வரவேற்று நோய்களின் தன்மையை சோதித்துப் பார்த்து அதற்குத் தகுந்த ஔஷதங்களைத் தானே தயார் செய்து கொடுத்து அனுப்புவாள். தனது பெற்றோர்களின் பரோபகாரமே ஸ்ரீமதி ராமாபாயையும் பிற்காலத்தில்

தன் வாழ்நாட்களை யெல்லாம் பொது நல ஊழியத்தில் ஈடுபடும்படி செய்தது. சிறுமியின் உள்ளத்தில் அச் செய்கைகளின் மகிமை பதிந்து விட்டது.

## பால்யம்

ராமாபாயின் பால்ய வாழ்க்கையைப் பற்றி அவர் எழுதிய ஞாபகக் குறிப்புகளில் (Reminiscences) பல ருசிகரமான சம்பவங்கள் காணப்படுகின்றன. அதில் அவரது குழந்தை மனப்பான்மையைக் காட்டும் ஒரு விஷயத்தை இங்கு சொல்லுகிறேன். அவர் சிறு குழந்தையாயிருக்கும்போது அவர் தந்தை பூனாவுக்குப் புறப்பட்டு ஏதோ அலுவலாகச் சென்றார். ராமா தன் தந்தையிடம் ரகசியமாகச் சென்று தனக்கு விளையாட பூனாவிலிருந்து ஒரு வேடிக்கை பொம்மை வாங்கி வரும்படி சொன்னாள். தன் சகோதரனுக்கோ வீட்டிலுள்ள இதர பந்துக்களுக்கோ இது பற்றிச் சொல்ல குழந்தை ராமாவுக்கு இஷ்டமில்லை. ஆனால் அந்த களங்கமற்ற தெய்வபக்தியால் தான் விரும்பியதையும், சொன்னதையும் குலதெய்வத்தின் விக்கிரஹத்தினிடம் மட்டும் கூறியிருந்தாள். தந்தை ஊரிலிருந்து வருமுன் ஒரு நாள் அவள் சகோதரன் பொம்மை விஷயமாக அவளிடம் பேசினான். அது அவளுக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. தான் அச்செய்தியை தன் ஆண்டவன் தேவனுக்கும் தந்தைக்கும் மட்டும் தானே தெரிவித்தோம்; அண்ணாவுக்கு எப்படி விஷயம் தெரிந்தது என்று பிரமித்து விட்டாள் குழந்தை ராமாபாய். அவளது இள அறிவுக்கு தந்தையிடமிருந்து தன் அண்ணாவுக்குவந்த கடிதத்தில் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கும் என்று புலப்படவில்லை. அது ஒரு பிரமாதமாக அக்குழந்தைப் பருவத்தில் அவளுக்குத் தோன்றியது. இம்மாதிரித்தான் இளமைப்பருவத்தில் நேரிட்ட சம்பவங்களை ராமா முதுமையிலும் மறக்கவில்லை. பின்னர் சிறுமிகளுடன் பழகும்போது அவர்களின் மனோ நிலையை உணர்ந்து அவர்களின் உள்ளக் கிளர்ச்சிகளையும், கஷ்டங்களையும், சந்தேக விபரீதங்களையும் நன்கு யூகித்து அறிந்து உதவ இவரது பால்ய அனுபவங்கள் ரொம்பவும் உதவியாய் இருந்தன.

## கல்யாணம்

ராமாபாய் பால்ய விவாஹம் செய்துகொண்டவரே. இவர் தாய் தந்தையர் ராமாவை நீதிஞ்ய புத்தியும் ஊக்கமும் மிகுந்த ரானடேக்கு விவாஹம் செய்து கொடுக்க விரும்பினார். ரானடேயின் பெற்றோர்களுக்கும் தங்கள் செல்வப் புதல்வனுக்கு ராமாவை மணம் முடிப்பதில் வெகு திருப்தியே. ஆனால் ரானடேயின் அபிப்பிராயம் வேறாக இருந்தது. தனக்குகந்த கல்வி பயின்ற கன்னிகையையே மணந்து கொள்ள வேண்டுமென்பது அவரது விருப்பம். கொஞ்சமாவது ஆங்கிலக் கல்வி கற்ற பெண்ணை விவாஹம் செய்து கொண்டால் தனது பிற்கால வாழ்க்கைக்கு நன்மையாக இருக்குமென்று ரானடே நினைத்தார். ஆனால் கடைசியில் வெற்றி பெற்றது ராமா தான். ரானடேயின் பிதா கட்டாயம் ராமாவைத்தான் தன் புத்திரன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். தாயும் தன் கணவன் சொல்லுவது சரியென்று சொன்னாள். மிதவாத மனப்பான்மை





யுள்ள ரானடே இந்த எதிர்ப்பை மீறி நடக்க விரும்பவில்லை. ஸ்ரீமதி ராமாவுக்கும் ரானடேக்கும் விவாஹம் நடந்தேறியது.

## கல்வி

ரானடே தன் பால்ய மனைவிக்குக் கல்வி கற்றுக்கொடுக்க விரும்பினார். ஆனால் வீட்டிலுள்ள வைதிகபிக்ஷுகள் கல்யாணமான பெண்ணுக்குக் கல்வி வேண்டியதில்லை, படிப்பது பெண்களுக்கு அழகல்லவென்று பலவிதமாக ஆட்சேபித்தனர். ஆனால் ரானடே இந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்கத்தயாராய் இல்லை. தயங்கி நின்ற ராமாவைக் கூப்பிட்டுத் தன் ரூமில் தினசரி வந்து பாடங் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கண்டிப்பாய் தெரிவித்து விட்டார். இதனால் வீட்டில் அமளி ஏற்பட்டது. பலவித குசுகுசுப் பேச்சுகள் வம்புகள் எல்லாம் ஆகாசங்களில் பரவின. ஆனால் ரானடே பிடிவாதத்தை விடவில்லை. தன் கணவனின் கட்டளையைத் தலைமேற் கொண்டு நடத்தி வைப்பதில் இடையூறுகள் வந்தபோதிலும் அவற்றைச் சட்டை செய்யாது தைர்யமாய் இருந்தாள் ராமாவும். தன் கணவனது அறையில் தனியாகப் பாடம் கற்றுக்கொள்ள ஆரம்பித்த தினத்திலிருந்து பூனா நகரசபை மண்டபத்தில் பம்பாய் கவர்னர் சர் பெர்கூஸன் முன் ஸ்திரீகளுக்கு உயர்தரக்கல்வி அளிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், அதன் பொருட்டு ஒரு கல்லூரி சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்றும் வெகு அழகாகவும், சாதுர்யமாகவும் பேசின நாள் வரை ராமா அவரது வைதீக ஸ்திரீ பந்துக்களிடம் பட்டபாடு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. புருஷர்களை விட அறியாமைப் படுகுழியில் ஆழ்ந்து கிடந்த பெண்களே அவரைப் பற்றி அவதூறாகவும், கேவலமாகவும் பேசினார். அவ்வளவையும் வெகு பொறுமையுடன் சகித்துவந்தார் ராமாபாய். எந்த விதமான துன்பங்கள் நேர்ந்தபோதிலும் ரானடேயின் இஷ்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு ராமா தயங்குவது கிடையாது. மாடியில் சில மணி நேரங்கள் தன் அருமைக்கணவனிடம் கல்வி பயிலுவதில் உள்ள சந்தோஷம், கீழே போனவுடன் மற்ற ஸ்திரீகள் திட்டிக்கொடுமைப் படுத்தும் துன்பத்தை விட மேல் என்று ராமா கருதி தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தார்.

வெளியில் பிரபலஸ்தர்கள் வந்து செய்யும் பிரசங்கங்களுக்குச் சென்று வருமாறு ரானடே கூறியிருந்தார். ஆனால் வீட்டிலுள்ளவர்கள் அவ்வித கூட்டங்களுக்குப் போய் வந்தால் வீட்டுக்குள் நுழையுமுன் ஸ்நானம் செய்து விடவேண்டுமென்று கட்டாயப் படுத்தினார்கள். வீட்டைச் சேர்ந்த பைப்பிலும் குளிக்கக் கூடாதென்றும், வெளியிலுள்ள கிணற்றில் தாம்புக் கயறுபோட்டுத்தானே தண்ணீர் மொண்டு குளிக்கவேண்டுமென்றார்கள். அப்படியே ராமாவும் செய்து வருவார். இந்த சங்கதிகள் ஒன்றும் திரு. ரானடேக்குத் தெரியாது. ராமாவும் குடும்ப அமைதியை உத்தேசித்து அவருக்குத் தெரிவிப்பதில்லை. ஒரு சமயம் இரவு கிணற்று ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு வந்ததினால் தண்ணீர் ஒத்துக்கொள்ளாதபடி சுரம் வந்து ராமா மிகவும் கஷ்

டப்பட்டாள். அச்சமயம்தான் ரானடேக்குதன் மனைவி கல்வி பயிலத் துணிந்ததால் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகினாள் என்பது தெரியவந்தது. ராமா தன்னை வருத்தப்படுத்துபவர்களிடம் இரக்கமும் பச்சாத்தாபமும் கொண்டாளே தவிர கொஞ்சமும் கோபம் கொள்ளவில்லை.

## விடுதலை

கடைசியில் ராமாவுக்கு விடுதலை காலம் வந்தது. ரானடேயை நாஸிக் நகரத்துக்கு ஜட்ஜாக பம்பாய் சர்க்கார் நியமித்தார்கள். நாஸிக்குக்கு ராமாவும் ரானடேயும் தனியே சென்றார்கள். ராமா குடும்பத்தின் உண்மைத் தலைவியானாள். இல்லத்துக்கு அதிகாரியாக விளங்கினாள். குடும்ப நிர்வாஹத்துக்குப் புதிதானதினால் முதல் மாதம் ரானடே செலவு சாமான்கள் எவ்வளவு வேண்டுமென்று ராமாவைக் கேட்ட போது அவர் ஒரு ஜாப்தா கொடுத்தார். ஆனால் மாதக்கடைசியில் அதன்படி வாங்கிய சாமான்கள் போதவில்லை. தான் அதிகமாகச் செலவு செய்து விட்டோமோ வென்று ராமா பயந்தாள். ஆனால் ரானடே ராமா கேட்டது குறைவுதான் என்று எடுத்துக் காட்டினார். மறுமாதத்திலிருந்து ராமா கொடுத்த லிஸ்ட் சரியாக இருந்தது.

நாஸிக்கில் சீர்திருத்த ஆர்வமுள்ள இன்னொரு குடும்பம் இருந்தது. அவர்கள் ராமாவின் நண்பர்களானார். அந்தக் குடும்பத்திலுள்ள ஸ்திரீகளும் ராமாவும் பலபொதுக் காரியங்களில் கலந்துகொண்டார்கள். அவ்வூர் பள்ளிக்கூட வருஷாந்திர விழாவுக்கு ராமாவே தலைமை வகித்துப் பரிசுகள் வழங்கினார். இது அவ்வூரில் மிகுந்த பரபரப்பை யுண்டாக்கியது.

## ரானடே மறைவு

ஒரு சமயம் ரானடே காலராவால் பிடிக்கப்பட்டார். டாக்டர்கள் கைவிட்டு விட்டனர். ஆனால் ராமா சிறிதும் மனம் தளராது வெகு கவலையுடனும், சிரத்தையுடனும் தன் கணவரைப் பாதுகாத்துப் பணிவிடை செய்துவந்தாள். தன் இஷ்ட தெய்வத்தை தனக்கு மாங்கல்ய பிச்சை கொடுக்குமாறு மனம் வருந்திப் பிரார்த்தித்தாள். ரானேடேயும் சுகமடைந்தார். இருந்தபோதிலும் 1901ம் வருஷம் ரானடேயும் காலகதி யடைந்தார். அதனால் ராமாபாய் அடைந்த துயரம் அளவற்றது.

## சேவாசாதனம்

கீதையின் சாரத்தை அறிந்து பருகியிருந்த ராமா கணவன் இறந்தபின் மூலையில் கிடந்து அழுதுபுரண்டு கொண்டிருப்பது தொழிலாகக் கொள்ளவில்லை. அவர் எந்த லக்ஷியத்துக்காகத் தன் வாழ் நாட்களில் ஒரு பகுதியைச் செலவழித்தாரோ அந்த லட்சியத்தைப் பூர்த்தி செய்வதில் தன் முழுகவனத்தையும் செலுத்துவதே தன் முக்கிய வேலை யென்றும், அதேதான் கணவனுக்குக் காட்டும் நன்றியும் ஆகும் என்று கருதினார்.

தாழ் நிலையிலிருக்கும் தன் சகோதரிகளை உயர்த்தும் வேலையில் சீக்கிரமாகவே இறங்கி விட்டார். அவரும் பண்டித ராமாபாயும் சிறை தண்டனை யடைந்த பெண்களைச் சிறைக்குச் சென்று பார்த்து அவர்களுக்கு நற்போதனைகள் செய்து வந்தார்கள். ஆஸ்பத்திரிகளுக்கும், இதர இடங்களுக்கும் சென்று கஷ்டப்படுவோருக்கு வேண்டிய உதவியும் ஆறுதலும்





அளித்துவந்தார். ஸ்திரீகளின் கூட்டங்களை அடிக்கடி கூட்டுவித்து சமூகத் தொண்டு, கல்வி, முதலிய விஷயங்களைப் பற்றித்தெளிவாக அவர்களுக்கு எடுத்துக் கூறுவார். ஸ்திரீ தொண்டர்படை ஒன்றை நிர்மாணித்து அதன் அங்கத்தினர்களுக்கு முதல் உதவி (first aid) முதலிய வற்றில் பயிற்சி அளித்தார்.

1904-ம் வருஷம் அகில இந்திய மாதர் மஹா நாட்டை பம்பாயில் கூட்டுவித்து அதில் சமூகசேவைத் திட்டம் ஒன்று தயாரித்து சமர்ப்பித்தார். மஹாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதற்குக் காரணம் ரமாவே.

சேவாசாதனம் ஆரம்பிக்க முயற்சி ராமாவின் இல்லத்திலேயே நடைபெற்றது. ஸ்திரீகளுக்கு கல்வியளிக்கவும், ராஜீய, பொருளாதார, வைத்திய அறிவு புகட்டவும், தேசசமூக ஊழியங்களுக்கு அவர்களைத் தகுந்தவர்களாகச் செய்வதற்காகவும் சேவாசாதனம் "ஹிந்து வனிதையர் சமூக இலக்கிய சங்கத்தாரால்" ஸ்தாபிக்கப்பட்டது. சேவாசாதனம் ஸ்தாபிக்கப்பட்டு முதல் பதினைந்து வருஷங்களுக்கு அதன் நிர்வாகத்தையும் மேற்பார்வையையும் ஸ்ரீமதி ராமாபாய் பார்த்து வந்தார். இத்துடன் ஹிந்துப் பெண்களுக்கு நர்ஸிங்கும் (Nursing) வைத்தியமும் கற்றுக்கொடுக்க ஒரு இலாகா ஏற்படுத்தினார். வைத்தியக் கல்வி கற்பது ஹிந்து வனிதையருக்குக் கெடுதல் என்று ஒரு தப்பபிப்ராயம் இருந்தது. அதை எதிர்த்து வைத்தியக்கல்லூரியில் சேரும்படி அநேக நங்கையரைத் தூண்டி உற்சாகமளித்தார். திக்கற்ற பெண்கள், பால்யவிதவைகள், கஷ்டப்படும் கன்னியர், அல்லலுறும் அபலைகள், அனாதைச் சிறுமிகள் முதலியவர்களுக்கு சேவாஸாதனம் ஒரு புகலிடமாகவும், ரக்ஷிப்பு நிலையமாகவும் இருந்து வருகிறது. அதில் நிர்வாஹம் வகிப்பவர்கள் ஆடம்பரத்தை விரும்பியோ, சுயநலங்கருதியோ அல்லது இதர சுயகாரியங்களை மனதில் வைத்துக் கொண்டோ வேலை செய்யாததால் அந்த ஸ்தாபனம் மென்மேலும் ஓங்கி வளர்ந்து ஸ்திரீ சமூகமுன்னேற்றத்துக்காக அபார வேலைகள் செய்து வருகிறது.

தவிர ராமாபாய் பெண்களுக்குக் கட்டாய இலவசக் கல்வியளிக்க வேண்டுமென்று பூனாவில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். அனேக சிறு நூல்களும் எழுதிப்பிரசுரித்திருக்கிறார். அவரது ஞாபகக் குறிப்புகள் மராத்தி பாஷையில் ஒரு இலக்கியமாகக் கருதப்படுகிறது.

ஸ்திரீகளுக்கு அரசியலிலும் உரியபங்கு தரவேண்டும் என்றும் ராமா கிளர்ச்சி செய்தார். ஸ்திரீகளுக்கு ஓட்டுரிமை கிடைக்க வேண்டுமென்று பலகூட்டங்கள் கூட்டி தீர்மானங்கள் செய்து சர்க்காருக்கு அனுப்பினார். அச்சமயம் பம்பாய் மாகாணசர்க்காரின் நிர்வாஹ அங்கத்தினராயிருந்த சர் எச். லாரென்ஸ், "ஸ்ரீமதி ராமாபாய் ரானடே அங்கத்தினராயிருக்கும் சட்டசபையில் இருப்பது ரொம்பவும் கௌரவமாகும்" என்று ஒரு விவாதத்தின் போது ராமாவைப் புகழ்ந்தும் அவர் லட்சியங்களை ஆதரித்தும் பேசினார். மாதர்களுக்கு சட்டப்படியுள்ள அரசியல், பொருளாதார குறைபாடுகளை சட்டபூர்வமாக நிவர்த்திக்க வேண்டி எவ்வளவோ முயற்சிகள் செய்தார்.

## குணாதிசயம்

ஸ்ரீமதி ராமாபாய் சலியாத உழைப்பாளி. சோம்பல் என்ற வார்த்தையே அவருக்குத் தெரியாது. 'முடியாது' என்ற காரியம் ஒன்றுமில்லை என்று ராமா தன் சக ஊழியர்களுக்கு அடிக்கடி கூறுவார். தன் சக ஊழியர்களிடம் வெகு அன்பாகவும், மரியாதையாகவும் அவர் நடந்து வந்தார். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி எல்லோரையும் ஒன்றாகப் பாவித்து ஒத்து உழைத்து வந்தார். தன்கீழ் வேலை செய்து வந்த உத்தியோகஸ்தர்களிடமும், தொண்டர்களிடமும் கனிந்தமுகத்துடன் அன்பாகப் பேசுவார். தன் கௌரவம், அகம்பாவம் சற்றுமின்றி, அவர்களுடன் பழகுவார். தான் பெரிய காரியங்களைச் சாதித்துவிட்டோம் என்று ஒரு விநாடி கூட ராமாபாய் நினைத்தது கிடையாது. எல்லாம் ஆண்டவன் அருளால் நடைபெற்று வருகிறதென்றே கடைசி வரையில் கூறி வருவார். தனது முதுமைப்பருவம் வரை இரவு பகல் என்ற வித்தியாசம் இல்லாமல் ஏழைமக்களுக்காகத் தன்னலம் சிறிதும் உன்னிடாது பாடுபட்டு வந்தார். கடைசியில் ஆண்டவன் அவரைத் தன்னருகே அழைத்துக் கொண்டார். அவர் மரணத்தைக் கண்டு வருந்தாதார் கிடையாது. அவரது தூய சேவையைப் பாராட்டிப் பல பிரபல பத்திரிகைகளும், பெரியோர்களும் எழுதினார்கள். இப்படிப் பொதுசேவையில் ஈடுபட்டு மறைந்த இரண்டு மஹாத்மாக்களாகிய ராமாபாயும், ரானடேயும் சாந்தி உலகில் சந்தோஷமாக இருக்கிறார்கள். அவர்களின் சேவையின் பலன்களை எல்லோரும் இன்றும் அனுபவிக்கிறோம். ஸ்ரீமதி ராமாபாயைப்போல் படித்த ஒவ்வொரு ஸ்திரீயும் அக்கல்வியின் பயனை இதர ஸ்திரீகளும் அடையும்படி செய்ய வேண்டியது அவசியமல்லவா? ஒவ்வொரு மாதும் ராமாவைப் பின்பற்றுவார்களேயானால் நம் நாடு எவ்வளவு முன்னுக்கு வரும்! ராமாபாயின் நாமம் வாழ்க!



# கற்பு

ஸ்ரீமதி பத்மாசனி

ஸ்திரீகளுக்குச் சகல விதமான ஐஸ்வர்யங்களைக் காட்டிலும் கற்பு என்னும் பூஷணமே எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது. பதிவிரதா தர்மமென்பதை வெளி வேஷத்தினால் மட்டும் காட்டாமல், மனப்பூர்வமாகவும் உண்மையுடனும் அனுஷ்டிப்பது அவசியம்.

அடுத்த வீட்டு அய்யாசாமி ஐயர் சாயந்திரம் ஆபீஸிலிருந்து வந்தவுடன், ஏதோ அவசரவேலையாக வெளியில் போய்விட்டார். அதன் பிறகு சிறிது நேரம் சென்ற பிற்பாடு, அவருடைய நண்பர் கோவிந்தராயர், அன்று இரவு ஓர் ஊருக்குப் போவதால், அதைப்பற்றி ஏதோ சில முக்யமான விஷயங்களைப் பற்றிக்கேட்டு அறிந்து கொள்ளுவதற்காக, அய்யாசாமி ஐயர் வீட்டிற்கு வந்து, 'அய்யாசாமி!' என்று குரல் கொடுத்தார். உடனே ஐயருடைய தர்மபத்னி ஞானாம்பாள் வந்து பார்த்துவிட்டுத் தடேலென்று வாசல் கதவைச் சாத்திவிட்டுத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே போய் விட்டாள். அந்தோ பாவம்! அவர் என்ன செய்வார் பாபம், திடுக்கிட்டார். பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு, "என்னே நமது ஜனங்களின் அறியாமை! முக்கியமான சில விஷயங்களைப்பற்றி அறிவதற்காக வந்தேனே! அவன் போயிருக்கும் இடத்தையாவது கூறியிருந்தாலும், அல்லது தெரியாவிட்டால், நான் கூறவேண்டிய அவசியமான விஷயத்தையாவது சொல்லி விட்டுப் போனேனாகில் எவ்வளவு சௌகரியமாயிருக்கும். கதவாவது திறந்திருந்தாலும் பொதுவாக விஷயத்தைக் கூறிவிட்டுப் போவேனே! இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் முக்கியமான சில வார்த்தைகள் பேசிவிட்டால் ஸ்திரீகளின் இல்லறதர்மம் ஒழிந்துவிடுமோ! கற்பிற்குப் பங்கம் வந்துவிடுமோ! என்ன மடத்தனம்," என்று வருந்தியவாறு சென்றார்.

கீழத்தெரு அண்ணாவையங்காருக்குத் தேள் கொட்டி வலி பொறுக்கமுடியாமல் தாண்டிக் குதித்துத் தாண்டவமாடிக் கொண்டிருந்தார். பக்கத்து வீட்டுப் பங்கஜத்தினிடம் அதற்கு நல்ல மருந்து இருந்தது. ஆனால் அத்தருணம் அவள் கணவன் வீட்டில் இல்லாமையால், தானாக அம்மருந்தை அவருக்குக் கொடுக்கப் பயந்து இருந்துவிட்டாள். ஏனென்றால், தான் அப்படிக் கொடுத்தால் உலகத்தார் தன்னைப்பற்றி அவதூறாக அவருக்கும் இவளுக்கும் ஏதோ நேசமென்று சொல்லிவிடுவார்களாம். அதனால் தான் அப்பரிதாபகரமான நிலைமையில் கூடக் கொடுக்காமல் இருந்து விட்டாளாம்.

சாந்த விலாஸ் என்னும் மாளிகையின் சொந்தக்காரியான ஸரஸ்வதி தன் பெண்ணுக்கு வீணை கற்றுக்கொடுக்க ஓர் உபாத்தியாயரை நியமித்திருந்தாள். அவளும் பாட்டில் மிக்க தேர்ந்தவளே! மிகவும் ஒழுக்கமான நடத்தையும், பரிசுத்தமான மனதையும் உடையவள். அவள் தினந்தோறும், தன் பெண்ணுக்கு உபாத்தியாயர் பாட்டுக் கற்றுக்கொடுக்கும் பொழுது பெண்ணின் அருகிலிருந்து, தன் பெண்ணைச் சரிவர பயிலும்படியும் வேறு

தனக்கிஷ்டமான சில கீர்த்தனங்களைச் சொல்லிக் கொடுக்கும்படியும் கூறுவாள். அதைத் தவிர சங்கீதத்தில் தனக்குத் தெரியாத சில விஷயங்களைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்ளுவாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த எதிர் வீட்டு அம்புஜம், சேஷிப்பாட்டி யிடத்தில், "பாட்டீ! கேட்டேளா கதையை! ஸரஸ்வதியிருக்கிறுளோன்னோ! அவாத்து பாட்டு வாத்தியாரோடே கூடயிருந்து சரிசமானமாப் பேசிண்டு அட்டகாசம் அடிக்கரா, ஏன் பாட்டி! அவாளுக்குள் என்னமோ இருக்கு, அவள் ஆம்படையானும் சம்மதிச்சுத் தானே இருக்கான், என்னமோ பாட்டி, காலமே தலை கீழாகப் போச்சு," என்று பிரமாதமாக வம்படித்தார்கள். ஒருநாள் ஸரஸ்வதி வீட்டு பாட்டு வாத்தியார் பாட்டுக் கற்பித்துவிட்டு வெளியில் வரும்பொழுது, அம்புஜம் அவரை வலக் கண்ணாலும் இடக்கண்ணாலும் பார்த்துப் பார்த்துச் சிரித்துவிட்டு, அவர் ரோட்டில் வந்தவுடன் தான் ரொம்ப ஒழுங்கானவள் போன்று தடபுடலாக இடறி விழுந்துக்கொண்டு உள்ளே ஓடினாள். இப்படி பிறருக்காகவும் தன் மனச் சாக்ஷிக்கு விரோதமாகவும் நடந்து கொள்ளுவது தான் பரிசுத்தமோ?

பெரிய பண்ணை வீட்டு ஸரோஜினி சற்று தைரியமானவளே தான். களங்கமற்ற மனதும் கற்புடைய மங்கையுமாவள். ஒரு சமயம் அவளுடைய பிள்ளைக்குப் பித்தவாத ஜுரம் கண்டு மிக்க அவஸ்தைப்பட்டது. அவள் கணவருக்கோ லீவே கிடைக்காதபடியினால் ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்து வாங்கவோ, அடிக்கடி டாக்டர் வீட்டுக்குப் போய் உடம்பைப் பற்றிய தகவல்களைக் கூறவோ முதலிய விஷயங்களுக்கு அவளே நேரில் செல்லும்படியாயிற்று. உதவிக்கு வேறு யாரும் இல்லை. இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, கோடி வீட்டுக் குப்பு, தன் சிநேகிதி சுப்புவிடம், "அடி சுப்பு, இந்த ஸரோஜினியைப் பார்த்தயாடி, என்ன தைரியமடி, ஒண்டியாய் ஆஸ்பத்திரிக்குப் போவதும் டாக்டர் வீட்டுக்குப் போவதும் என்ன கண்றாவியடீ! என்ன அதிசயம்! குழந்தைக்கு உடம்புக்கு வந்தால்தான் என்ன! இப்படித் தனியாய் போவாளோ! ஏண்டி அவள் ஏதாவது சம்சயப் பேர்வழியோடி," என்று இல்லாத பொல்லாத வார்த்தைகளாடி வீண்பொழுது போக்குவள். பிறகு ஒரு நாள் சுப்பு வழக்கம்போல குப்புவின் வீட்டிற்குப் போனாள். வாயிற்கதவு சாத்தியிருந்தது. புழக்கடைப் பக்கமாகச் சென்றாள். கூடத்திலுள்ள ஓர் அறையில், அன்று அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த அவளுடைய அம்மாஞ்சியுடன் கால்மேல் காலைப்போட்டுக் கொண்டு, அவன் இவளைப் பரிகாசமாகத் தொட்டுக் கொண்டே பேசியதையும் சுப்பு பார்த்து விட்டாள். உடனே அவள் பார்த்ததைக் குப்பு அறிந்தவுடன் ஓடிவந்து, 'அடி சுப்பு; இதை வெளியில் சொல்லாதேடி' என்று அவள் கால்களைப் பிடித்துக் கொண்டாளாம். குற்றமுள்ள நெஞ்சு குருகுருக்கும் என்றபடி தன்னுடைய எண்ணத்தைப்போல ஏதுமறியா ஸரோஜனியைத் தூஷித்தாள். நடுத்தெரு நாணிப்பாட்டியின் வீட்டிற்கு பிச்சை வாங்க ஓர் பிராமணர் வந்தார். வந்துவிட்டதே ஆவேசம்! 'ஏங்காணும் பிராமணரே, உமக்குப்புத்தி இருக்கிறதா!





ஸ்ரீமதி பஞ்சாங்கம் திம்மப்பா, பேனுகொண்டா பெண்பாடசாலையில் 25 வருஷங்கள் உத்தியோகம் பார்த்தவர்.



காக்கினாடா வித்தியார்த்தினி சமாஜ வருஷ விழாவின்போது எடுத்த படம்.
ஸ்ரீமதி ராஜவிபாய் தலைமை வகித்தார்.




பம்பாய் குழந்தைகள் மாறுவேஷப்போட்டியில் கலந்து கொண்டார்கள்



புருஷாள் இல்லாத வீட்டிலே எப்படி தைரியமா தடதடவென்று உள்ளே வந்தீர் நன்னாயிருக்கு. போங்கோ வெளியில்,' என்று ஆங்காரத்துடன் ஆடிப்பாடி அமர்க்களப் படுத்தினாள். தெய்வமே! என்று அப்பிராமணர் துக்கத்துடன் வெளியில் போய்விட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம், அடுத்த வீட்டிற்கு வந்திருந்த அழகியசிங்கம் வெளியில் போய் திரும்பிவரும்பொழுது வீடு தட்டுக் கெட்டு நாணிப்பாட்டியின் வீட்டிற்கு வந்துவிட்டார். உடனே நாணிப்பாட்டி அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்து பார்த்துவிட்டு, 'நீங்களா! அந்தப் பிச்சைக்காரப் பிராமணன்தான் வந்து விட்டானோவென்று பார்த்தேன். உட்காருங்கோ! ஏதாவது தாக சாந்தி செய்துகொள்ளுகிறீர்களாவென்று' அன்புடன் உபசரித்தாள். முன்பின் பழக்கமில்லாத இந்தப் பிராமணர் மட்டும் புருஷாள் இல்லாத வீட்டில் உபசாரம் பெறலாம் போலிருக்கிறது.

இவ்வித மூட எண்ணங்கள் நமது சமூகத்தை விட்டு அகன்ற பிற்பாடேதான் நமது சகோதரிகளும் நாமும் முன்னுக்கு வரமுடியும். கற்புக்குப் பாதுகாப்பு ஹ்ருதய சுத்தமே ஒழிய வெளிப் பகட்டால் ஒன்றும் பிரயோஜனப்படாது. தன்னுடைய குடும்பத்திற்காகவும், நம் சகோதரிகளின் முன்னேற்ற விஷயமான சில காரியங்களுக்கும் தைரியமாய், ஆபத்து சமயங்களில் உதவுவதால் ஒருவருடைய பதிவிருதா தர்மத்துக்குச் சிறிதும் பங்கம் வராது.

கற்பென்னும் அறிய பூஷணத்தை மனோ உறுதியுடன் கடைப்பிடித்து நடக்க வேண்டும். வெளி வேஷத்தினால் உலகோரை ஏமாற்றுவதில் பயனில்லை.

# உமாசங்கர்

'ஜயம்'

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

புருடர்கள் : சங்கர் — கதாநாயகன்

விஸ்வநாதய்யர்—சங்கரின் சிறிய தகப்பனார் (அவனை வளர்த்தவர்)
கோபினாத்—சங்கரின் தோழன், முதலியோர்.

ஸ்திரீகள் : உமா — கதாநாயகி

தங்கம்மாள்—உமாவின் தாயார், மிஸ் மதுரவாணி :—நர்ஸ் (டிரெய்னிங்கில் இருக்கும் டாக்டர்) லக்ஷ்மி, பத்மா, சரஸ்வதி, உமாவின் பள்ளிக்கூடத் தோழிகள் முதலியோர்.

## காட்சி 4.

இடம் : பெங்களூர் வாணி விலாஸ் பெண் கலாசாலையின் ஹாஸ்டலில் ஓர் அறை.

காலம் : மாலை நான்கு மணி.

(கலாசாலையின் மாணவிகள் சிலர் கேரம் (Carrom) ஆடிக்கொண்டிருக்கிறார்கள்).

(அப்பொழுது மாணவிகளனைவரும் ஆட்டத்தை விட்டெழுந்து வந்து ஒவ்வொருவராக உமாவின் கைகளை குலுக்குகிறார்கள்.) (எல்லோரும் ஒருமிக்க)

ஹல்லோ உமா! ஹார்டி கங்ரேஜ்யுலேஷன்ஸ் (Hearty congratulations.) பஸ்ட் க்ளாஸ் அடித்து விட்டாயே!

லக்ஷ்மி : உன் தாயார் போய்விட்டாராமே பாவம்!

(ஆச்சரியத்துடன் குருக்கிட்டு) பத்மா : அட பாவமே! எத்தனை நாட்களாச்சு, அவர் போய்?

(துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வர, கண்களில் கண்ணீர் ததும்ப,)

உமா : ஒரு மாதமாய் விட்டது "பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்று சொல்வது போல் ஒன்றன் பின் ஒன்றாய் ஏதாகிலும் கஷ்டம் வந்து கொண்டே இருக்கிறது. நான்........

சரஸ்வதி : என்னவாக இருந்ததம்மா அவருக்கு?

உமா : திடீரென்று மார்படைப்பில் இறந்து விட்டார்.

மீராபாய் : Poor Uma! Poor thing! I think she may join our hostel here after, என்ன உமா?

உமா : எனக்கென்னமோ இந்த பக்கம் இருப்பதற்கே பிடிக்கவில்லை. நான் டெல்லிக்கு சென்று டாக்டர் பரீக்ஷைக்கு படிக்கலாமென்று உத்தேசித்திருக்கிறேன். அதனால்......

டாரதிமேதன் : When will you start for Delhi Uma?

உமா : To night.

(எல்லோருமாக) : What an unfortunate news! we are going to loose such a good friend alas!



பத்மா : உமா, எங்களுடைய ஞாபக குறிப்பை மறந்து விடாதேமா. அதை விட நாங்கள் இன்னொன்றை கொடுக்கப்போகிறோம்.

உமா : உங்கள் அன்பொன்று நிலையாக இருந்தால் போதுமெனக்கு. இவ்வேழை நேசியை மறக்காதேயுங்கள்.

டாரதிமேதன் : I am so sorry to leave you Uma?

உமா : I will write you letters regularly.

(எல்லோருமாக) : Thank you very much dear friend.

சரஸ்வதி : Uma is so tired, பாவம், கொஞ்சம் டீக்கு சொல்லிவிட்டு வரட்டுமா?

லக்ஷ்மியும் பட்டுவும் : நல்லது சொல்லி விட்டுவா. தோட்டத்திற்கு சென்று சிலநேரம் தமாஷாக பேசுவோம். எல்லோரும் வாருங்கள்.

(எல்லோரும் செல்கிறார்கள்)

(சரஸ்வதி மட்டும் பின்புறம் செல்கிறாள்)

(திரை வீழ்கிறது).

## காட்சி 5.

இடம் : பம்பாயில், தாதரில் ஓர் ப்ளாட் (Flat) ல் ஒரு அறை.

காலம் : மாலைபொழுது $4\frac{1}{2}$-மணி.

(சங்கரன் ஈவினிங் உடுப்பை (Dress) அணிந்தவனாய், மேஜை, நாற்காலிகளை சரியாக இழுத்து போடுவதும், பூக்கிண்ணங்களிலிருக்கும் (flower vases) பூக்களை சீர்திருத்துவதும் (Arrange செய்வது) மாக யாருடைய வரவையோ எதிர்பார்த்தவனாக, அடிக்கொரு தடவை கதவின்புறம் பார்த்துக்கொண்டும், அறையை சரிப்படுத்திக் கொண்டுமிருக்கிறான். அவனது வெளுத்த முகத்தையும், மெலிந்த தேகத்தையும், சோர்வுடனிருப்பதையும் கவனித்தால் இப்பொழுதுதான் நீடித்த காயலாயிருந்து பிழைத்தெழுந்தவன் போல் தென்படுகிறது.)

(அப்பொழுது கதவண்டை காலடி சப்தம் கேட்கிறது. சங்கரனும் திரும்பி பார்க்கிறான். அவனது நண்பன் கோபினாத் அறையினுள் பிரவேசிக்கிறான். தக்ஷணம் மலர்ந்த முகத்துடன் சங்கரன் அவனை அணுகி, கையை குலுக்கி) ஹலோ, கோபிநாத்! Good evening, நாலைந்து நாட்களாக உன்னை காணவே இல்லையே!

(என்று பேசிய வண்ணம் அவனை அழைத்துச் சென்று ஓர் நாற்காலியில் உட்கார்த்தி தானும் எதிரிலிருக்கும் நாற்காலியில் உட்காருகிறான்) (கோபிநாத் அறையின் சுற்று முற்றிலும் கவனித்த வண்ணம்) என்ன சங்கர்? உன் அறையின் அரேஞ்சுமெண்டுகளை பார்த்தால், யாரோ விருந்தினர்கள் வருகிறார்களென்று தோன்றுகிறதே!

சங்கர் : ஆமாம் நான் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தபொழுது எனக்கு பலவித பணிவிடைகள் செய்து, என்னை பிழைக்க வைத்த உத்தமியாகிய அந்த நர்ஸிற்கு என்ன கைமாறு செய்தாலும் போதாது..............அவ்வுத்தமியை இன்று 5-மணிக்கு டீக்கு அழைத்திருக்கிறேன்.

கோபினாத் : அவருடைய வயதெவ்வளவிருக்கும்?

சங்கர் : சுமார் 22 இருக்குமென்று தோன்றுகிறது. பெயர் Dr. மதுரவாணி. மற்ற தகவல்களை எல்லாம் நான் விசாரிக்க வில்லையப்பா.

(கோபினாத் நாற்காலியிலிருந்து எழுந்து) : சரிநான் போய்வருகிறேன். நீ எப்படி இருக்கிறாயென்று பார்த்துவிட்டு போகலாமென்று இப்படியே வந்தேன்.

சங்கர் : சற்று இருந்து, நீயும் டீ அருந்திவிட்டு செல்லலாகாதா?

கோபினாத் : இல்லை, எனக்கொரு அவசர ஜோலி இருக்கிறது. நாளைக்கு வருகிறேன். தயவுசெய்து கோபித்து கொள்ளாதேயப்பா, Good evening (என்று எழுந்து செல்கிறான்.)

சங்கரன்: Good evening (பக்கத்தில் மேஜை மேலிருந்த Illustrated weekly யை எடுத்து திருப்பிக்கொண்டிருக்கிறான்.)

(அப்பொழுது அழகே உருவெடுத்தாற் போன்ற மராட்டிப் பெண் ஒருவள் பிரவேசிக்கிறாள்.)

(சங்கரன் பத்திரிகையை மேஜை மீது எறிந்து விட்டு, மலர்ந்த முகத்துடன், எழுந்து அவள் கையை குலுக்கிக் கொண்டே) Good evening doctor!

டாக்டர் மதுரவாணி: Good evening மிஸ்டர் சங்கர்?

(இருவரும் தத்தம் நாற்காலிகளில் உட்காருகிறார்கள்)

சங்கரன்: Boy! Boy!

(ஓர் ஆள் ஓடிவருகிறான்.)

சங்கர்: எங்கே? டீ கொண்டுவா, நேரமாகிறது.

ஆள்: சித்தம் துரையே! (செல்கிறான்.)

டாக்டர் மதுரவாணி: இந்த தமிழை எங்கே பிடித்தீர்கள்?

சங்கர்: என் நேயன் மிஸ்டர் கோபிநாத் வீட்டு ஆள் இவன். அவர் தற்சமயம் என் பணிவிடைக்காக அனுப்பி இருக்கிறார். மிகவும் சுறுசுறுப்பான பையன். தாங்கள் மராட்டி ஜாதியானாலும் கூட தமிழ் ரொம்பவும் நன்றாக பேசுகிறீர்கள்!

டாக்டர்: கொஞ்ச நாள் என் தந்தை மதராஸ் பக்கம் வேலையாக விருந்தார். அப்பொழுதுதான் நான் தமிழ் பேச கற்றுகொண்டேன். தமிழ் பாஷையை கண்டால் எனக்கு வெகு பிரியமாதலால், அப்புறம் கொஞ்சம் விருத்தி செய்துக்கொண்டேன். தாங்கள் எனக்காக இந்த உடம்பில் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு டீக்கு அரேஞ்சு செய்திருக்க வேண்டாம்.

சங்கர்: தாங்கள் என் காய்ச்சலில் அல்லும் பகலும் சிஸ்ருஷை செய்ததற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்!

(அப்பொழுது ஆள் டீ, பலகாரங்களை தட்டில் ஏந்தி வந்து மேஜைமேல் வைக்க இருவரும் கொஞ்சம் டீ, பலகாரங்களை எடுத்துக் கொள்கிறார்கள். டீ சாப்பிட்டுக்கொண்டே) டாக்டர் மதுரவாணி (ப்ரகாசமாக) இன்று எனக்கு ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் ட்யூடீ (Duty) இருக்கிறது. மன்னிக்கவும், நான் இப்பொழுதே புறப்படவேண்டும்.

(சங்கர் டீயை அருந்திவிட்டு கோப்பையை மேஜைமேல் வைத்துவிட்டு, சட்டைபையிலிருந்து கைகுட்டையை எடுத்து வாயைத் துடைத்துக் கொண்டே): இவ்வளவு அவசரமாக புறப்படுவீரென்று நான் நினைக்க வில்லை. ஆனால் என்ன செய்வது? வேலையின் அவசரம். அம்மா, மதுரவாணி, நீங்கள் எனக்கு செய்த உபகாரத்தை நான் என் உயிருள்ளளவும் மறவேன்........

(அப்பொழுது மதுரவாணி தன் கைப்பையிலிருந்து (Hand bag) தனது கைகுட்டையை எடுக்க போகிறாள். கைகுட்டையுடன் ஒரு புகைப்படமும் தவறி கீழே வீழ்கிறது. அவளுக்காக சங்கரன் கீழே வீழ்ந்த கைகுட்டையையும், போடோவையும் குனிந்து எடுக்க போகிறான். அப்பொழுது அப்புகைப் படத்தை தரையிலிருந்து உற்று நோக்கிய வண்ணம் ப்ரமித்துப் போகிறான். பின்பு) அம்மா தங்களிடம் இப்படம் வரக்காரணமென்ன?

(புன்முருவலுடன்) மதுரவாணி: என் இவ்விதம் கேட்கிறீர்?

சங்கரன்: (வாய்குளற) இ...து...என்...கலிய...ா...ண...த்...தி...ல் எ...டு...த்...த...ப...ட...ம்.

மதுரவாணி: எனக்கு தெரியும். இதை என் நேசி உமா கொடுத்தாள். நானும் அவளும் ஒருமிக்க டெல்லியில் மெடிகலுக்கு படித்





தோம். நீங்கள் அவளை த்யஜித்திருப்பதாகவும், தயவு செய்து தன்னை உங்களிடம் எப்படியாவது சேர்த்து வைக்க வேண்டுமென்றும் கெஞ்சுகிறாள் பாவம். ஆதலால் இப்படத்தை தங்களுக்கு காண்பித்து, அவளை பற்றி கொஞ்சம் பேசவெண்ணி இதைக் கொண்டு வந்தேன். (மதுரவாணி பேச பேச சங்கரனின் முகம் விகாரமடைகிறது. அவனது முகம் கோபத்தால் சிவக்கிறது. தக்ஷணம்) அவன்: அவள் மஹா கெட்டவள். அவளை நான் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். தயவு செய்து அவளைப் பற்றி என்னிடம் பேச வேண்டாம்.

மதுரவாணி: அந்த பெண் மகா உத்தமியாக வல்லவோ தோன்றுகிறாள்! அவள் என்ன கெட்ட செயலை செய்தாளென்பதை யறிய ஆவலாக விருக்கிறேன். நான் அவளை நல்ல வழிக்கு திருப்ப முயல்கிறேன்.

சங்கரன் (தலையை சொரிந்த வண்ணம்): அவள் அந்த சிறிய வயதிலேயே, அதுவும் என்னுடன் குடும்பத்தை நடத்திக்கொண்டிருக்கும் பொழுதே ஒரு கள்ளக் காதலனை வைத்துக் கொண்டு, அவனிடமிருந்து வரும் கடிதங்களை யெல்லாம் ஓர் ட்ராயரில் பத்திரப் படுத்தி ரகசியமாக பூட்டி வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தேன். அப்பேர்ப்பட்ட துஷ்டப் பெண்முகத்தில் நான் முழிக்க மாட்டேன். (தக்ஷணம் மதுரவாணி தன்னிருகைகளாலும் முகத்தைப்பொத்திக்கொண்டு) "ஐயோ! இவ்விதம் செய்தேனென்று என்மேல் சந்தேகம் கொள்ளலாமா, அம்மாஞ்சி! நம் பக்கத்தாத்து பத்மா தன்னை படுத்தும் மாமி, நாத்திகள் (இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருக்கும்) தன் கணவனின் கடிதங்களைக்கூட தன் பெட்டியினின்றெடுத்து சோதித்து பார்க்கும் உபத்திரவத்திற்காக, என்னிடம் அவைகளை கொடுத்து "பத்திரமாக வைத்திரு. நான் கேட்ட பொழுது கொடு" என்று சொன்னாள். அவள் கடிதங்களையல்லவோ அந்த ட்ராயரில் வைத்து பூட்டி இருந்தேன்! அவள் கட்டிக் கொடுத்த மாதிரியே கவர்களை கொண்டு வந்து வைத்திருந்தேனே யல்லாமல் அவைகளை நான் சரியாக பார்த்ததுகூட கிடையாது. அதனால் இவ்வளவு விபரீதம் நடந்ததென்று நான் கனவிலும் அறியேனே! ஐயோ! நாதா! என்மேல் இவ்விதம் அபாண்டமான சந்தேகம் கொள்ளலாமா?

(சங்கரனின் பாதங்களில் வீழ்கிறாள். தக்ஷணம் அவன் அவளை எழுப்பி வாரிகட்டி முத்தமிடுகிறான். இருவரும் அருகிலிருந்த சோபாவில் அமருகிறார்கள். இருவர் முகமும் ஆனந்தத்தினால் மலர்கின்றன. உமா வெட்கத்துடன் முன்போல் தலை குனிகிறாள்.)

(சங்கரன் அன்புடன் உமாவை நோக்கி): என் கண்ணே! என் தவறுதலால் நீ இதுவரைக்கும் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாயோ பாவம்! ஆஸ்பத்திரியில் உன்னுடைய சாயலைக் கண்டு பலதடவைகள் சந்தேகித்தேன். ஆனாலும்கூட உன்மீதிருந்த வெறுப்பினால் "உலகில் ஒருவரைப்போல் ஒருவர் எவ்வளவோ பெயர்களிருக்கிறார்கள்" என்று மனதை மாற்றிக்கொண்டேன். நீ என் பெயரைக் கூட மாற்றிக்கொண்டு விட்டாயம்மா?

உமா: நாதா, தாங்கள் என்னைவிட்டுப் பிரிந்தபின் வேறு உபாயமின்றி காலேஜில் சேர்ந்தேன். என் நேசிகள் "உமா உன் குறல் எவ்வளவு இனிமையாக விருக்கிறது! உனக்கு மதுரவாணி என்ற பெயரே தகும்" என்பார்கள். அந்தப் பெயரையே மாற்றி வைத்துக் கொண்டேன். நாகபுரியில் தங்களுக்கு மாதம் 500ரூ சம்பளத்தில் வேலை ஆயிருப்பதாக இன்றைய பேப்பரில் படித்தேன்! அதை இதுகாரும் கேட்க மறந்தே விட்டேன்!

சங்கரன்: ஆமாம் உமா! நாம் என்றைக்கு புறப்படலாம் சொல்?

(திரை வீழ்கிறது.)

முற்றிற்று.

# கண்ணன் தோழி

"மைதிலி"

'அரிது, அரிது, மானிடராதல் அரிது' என்று ஔவையார் கூறியவாறு பெறற்கரிய மானிட ஜன்மம் எடுத்தும், மோக்ஷசாதனமாகிய இம்மனிதப் பிறப்பினால் முக்தியை அடைய முயலாது மதிகெட்டு உலக இன்பமென்ற மருளில் சிக்கி, உய்ய வகையறியாது திகைக்கின்றவர் பலர். அவ்வாறல்லாமல் மானிட ஜன்மத்தை எடுத்தவர் பலகாலும் ஸ்ரீமந் நாராயணனை வாயினால் பாடி, அவனுடைய மங்கள ஸ்வரூபத்தைக் கண்ணால் கண்டு களித்து, அவனுடைய கல்யாண குணங்களைக் காது குளிரக் கேட்டு, சிந்தையினால் சதா அவனை நினைந்துருகி அடைதற்கரிய பதவியை அடையவேண்டிய முயற்சியைச் செய்வதே கடமையாகும் என்பதை உலகினர்க்குக் காட்டியவள் உத்தமி சக்குபாய்.

என்னேரமும் எம்பெருமானையே சிந்தித்துக் கொண்டிருக்கும் அடியார்களால் அன்பெனும் கயிற்றினால் இன்புறப் பிணைக்கப்பட்டுள்ள கண்ணன் அவ்வடியார்களுக்காக எவ்விதமான துன்பத்தையும் அனுபவிப்பான் என்பது வெள்ளிடைமலையாம். கண்ணன்பால் நீங்கா அன்புடையவளும், பெண்பாலர்க்குரிய சகல நற்குணங்களையும் தன்னிடத்தே கொண்டுள்ளவளும், மாதர்க்கணிகலமானவளுமான சக்குபாய் என்பவளுக்காகக் கண்ணன் பட்ட கஷ்டங்கள் பல. 'உள்ளன்பு கொண்டோர்க்கு உயிரையுமளிப்பான்' என்றவாறு அன்பிழைத்த மனத்தினர்கள் துன்பமுறச்சகியான் சர்வேஸ்வரன். அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்!

பண்டரீபுரத்திற் கருகிலுள்ள ஒரு அழகிய சிறிய கிராமத்தில் வசித்துவந்த நற்குணசம்பன்னர்களாகிய தம்பதிகளுக்குப் புதல்வியாயவதரித்தவள் சக்கு. 'தாயெப்படியோ சேயப்படியே' என்றவாறு, பக்திமிக்கத் தன் அருமை அன்னையின் அரிய குணங்களை சக்குவிடமமைந்தன. தேவகிவாசுதனை தாமோதரனிடம் தையல் அளவற்ற அன்பு கொண்டாள். சதா பாண்டுரங்கனையே பஜித்து வந்தாள் அப்பெண்மணி.

கண்ணன் கழலிணைகளை அடைவதற்கு முயலும் ஒவ்வொரு பக்தனும் பலவித சோதனைகளுக்காளாவது சகஜமே. அத்தன்மையாகவே சக்குவும் மழலைச்சொல் மாறாத இளம்பருவத்திலேயே துன்பமென்னும் கடலில் தள்ளப்பட்டாள். தெய்வபக்தியின் சிறப்பறியாதவனும், நிர்மூடனுமுள்ள ஓர் அந்தணனின் மகனுக்கு மனைவியானாள் சக்கு. ஒருவனின் செல்வத்தையும் ஆடம்பரத்தையுங் கண்டு அவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதில் பிரயோஜனமென்ன? கடவுள் பால் அழியா அன்பு பூண்டு, வாழ்க்கையில் தனக்கென்று விதிக்கப்பட்ட கடமைகளைச் சரிவரச்செய்து, அன்பு, இரக்கம், தயை, தன்னலங்கருதாமை, முதலிய பெறற்கரிய பண்புகளைப் பெற்றுள்ளவனுக்குப் பெண்ணை அளித்தால், அவன் ஏழையாயிருப்பினும், இருவரும் உள்ளன்புடன் மனமொத்து வாழ்வார்கள். 'பாண்டமேல் மாற்றலாம் கொண்டபின்.' ஆனால் பெண்களுக்கு மணம் புரிவதென்பது ஓர்



எளிய காரியமல்ல. ஆராய்ந்து பார்த்து, நன்கு ஆலோசித்து மெதுவாகச் செய்ய வேண்டிய ஒரு அரியகாரியமாகும் விவாகமென்பது.

ஆயினும், சக்கு தன் தெய்வ பக்தியினின்று சிறிதும் தளர்ச்சியுறவில்லை. பெண்களது வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கும் 'விவாகம்' என்பதினால் சக்குவின் கடவுள் அன்புக்குச் சிறிதேனும் குறைவேற்படவில்லை. கண்ணன் புகழினைக் களிப்புடன் பாடி அவன் செயல்களை எண்ணி எண்ணி இன்புற்று வாழ்வளாயினாள் சக்கு. உண்மைக் காதல் வெற்றி பெறுவதற்குமுன் பல தடைகள் ஏற்படுவது போல் உள்ளத்தே பொங்கி எழும் வெள்ளமனைய கடவுள் பால் காதலின் வளர்ச்சிக்கு நேரும் பங்கங்கள் பல. சக்குவின் புனிதமான செயல்களைக் கண்டு சந்தோஷமுறாது, அவளுடைய மதியற்ற மாமனும் மாமியும், "நீ பக்தி செய்தது போதும். ஏதோ பித்துப்பிடித்தவள் போல் நீ செய்யும் காசுக்குதவாத செயல்களால் வீட்டு வேலைகள் தடைப்படுகின்றன. இனிமேல் நீ இவ்வாறிருக்கக் கூடாது" என்று கண்டித்தார்கள். சக்குவின் மனம் பொங்கிற்று. கண்ணீரினால் நனைந்து நைந்து போயிருக்கும் மதிமுகத்தாளாகிய அம்மானினி தன் மாமியாரின் துன்பத்திற்காளாயினாள். இத்துணை கொடுமைகளுக்காளாகியும் இளமனத்தினளாய் சக்குவின் மனவுறுதி வியக்கத்தக்கதாயிருந்தது.

அண்டையிலுள்ளார் அணங்கின் துன்பத்தைக் கண்டு சக்குவின் பால் இரக்கங் கொண்டு அவளிடம் வந்து, "அம்மா, தெய்வபக்தி மிகுந்து, நற்குணங்களுக்கு இருப்பிடமாய் செந்தாமரை யினுறையும் திருமகளுக்கொப்பாய் விளங்கும் நீ யார்? உன் ஊரெது? உன் பெற்றோர் யாவர்?" என்று வெகு விநயத்துடன் விசாரித்தார்கள். சலியாது தவம் புரிந்தும் முனிவர்கள் அடைதற்கரிய அங்கயற் கண்ணனின் அருள் நிரம்பிய மனத்தினளாய் சக்கு "நீலமேகசியாமள ஸ்வரூபனான ஸ்ரீ கிருஷ்ணனே எனக்குப் பிதா. ஸ்ரீ ருக்மணி தேவியே என் தாய். சர்வபாப நிவாரணியாகிய 'சலியுறத்தெளிந்த தண்ணொன்ற' நீரை உடைய சந்திரபாக நதியையும், வனப்பு மிக்கச் சோலைகளையும், வானமளாவிய மாளிகைகளையும் கொண்ட பண்டரீபுரமே எனது ஊர்" என்று அன்பொழுகும் குரலில் கூறினாள்.

வழக்கம் போல், ஓர் தினம் சக்குவும், அடுத்தகத்தில் வசிக்கும் சாந்தாவும் நீர் கொண்டுவரக் குளத்திற்குச் சென்றார்கள். திரும்பிவருங்கால் கண்ணனருள் பூரணமாகப் பெற்றவர்களும், பார்த்தமாத்திரத்திலேயே பாபங்கள் நீங்கப்பெறும் பரிசுத்தமான திருமேனியைப் பெற்றவர்களும், சதாசின்மயனையே சிந்திப்பவர்களுமாகிய ஸாதுக்களின் கானம்ருத பஜனைக்கோஷ்டியைக் கண்டாள் சக்கு. 'இனம் இனத்தைச் சேரும்' என்றபடி, சாதுக்களுடன் சேர்ந்து பஜனை செய்ய ஆவல் கொண்ட சக்குபாய் தன்குடத்தைச் சாந்தாவிடம் கொடுத்தனுப்பிவிட்டு, கண்ணனடியார்கள் கூட்டத்தில் கலந்து கமலமனோகரனின் கல்யாண குணங்களைக் களிப்புடன் பாடினாள். சாந்தா வீட்டிற்குச் சென்று சக்குவின் மாமியாரிடம் நடந்ததைக் கூறினாள். அவள் அதிக கோபங்கொண்டு சக்கு தங்கிய இடத்தை

அடைந்து, சக்குவை நன்றாக அடித்து வீட்டிற்கு இழுத்துச் சென்று ஒரு தூணில் கட்டிப் போட்டு விட்டாள்.

அன்னந் தண்ணீரில்லாமல் தவித்தாள் தையல். தன் மெல்லிடை துவண்டு போக, இருளைக் கண்டு வாடும் அருங் கமலம் போல் அவளுடைய மாசிலா வதனம் சோபையற்று, காற்றினாலசைக்கப் பட்ட கொடிபோல் அல்லலுற்றாள். சேஷசயனனையன்றி சதம் வேறில்லை என்றறிந்தாள் ஏந்திழை. கஷ்டத்திற்கிரங்கி அவளை இரக்ஷித்த இராஜ கோபலனைத் துதித்தாள் சக்குபாய். அடியார் துயருரச் சகியாத அச்சுதன், சக்குவிற்குதவி செய்யத் திருவுள்ளங் கொண்டவனாய், சக்குவைப் போன்ற ஒரு வடிவெடுத்து வந்து நின்றான். தன்னைக் காப்பதற்குத் தன்னைப் போல் வடுவெடித்துவந்த தயாநிதியைத் தலையார வணங்கினாள் சக்கு. "நீ பண்டரீபுரம் சென்று வா, நீ வரும் வரையில் நான் உனக்குப் பதிலாக இங்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன்" என்று அன்பும் அருளும் கலந்த இன்ப மொழிகளைப் புகன்றான் புருஷோத்தமன். சக்குவும் மிக்க சந்தோஷங்கொண்டு சாது கோஷ்டிகளுடன் சேர்ந்து பண்டரீபுரத்திற்குச் செல்வாளாயினாள்.

அண்டசராசரங்களுக்குத் தலைவனை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தன்பால் தளராவன்பு கொண்ட தையலொருத்திக்காகத் தூணில் கட்டுண்டு கிடந்தானென்றால் அவனுடைய கருணைவிலாசம் தான் என்னே! உலகத்தில் கிடந்துழலும் மனிதர்களே, கருணையே உருவான கடவுளைத் தொழுங்கள். ஜனன மரணமென்னும் பிணியினின்று விடுபடுவீர்கள். சக்குவின் கணவன் சக்குவின் பேரிலிரக்கங் கொண்டு அவளை அவிழ்த்து விட்டான். மாயா சக்குவும் தன் வேலைகளைச் சரிவரச் செய்தாள். மதிகெட்ட பாபிகளுக்குக் கடவுளே ஊழியஞ் செய்யத் தலைப்பட்டரென்றால், அவருக்கடியார் பாலுள்ள அன்பை என்னவென்று சொல்வது.

புண்டரீகவரதன் வதியும் பதியை அடைந்தாள் சக்கு. சகல வினைகளையும் போக்கும் சந்திரபாகா நதியில் மூழ்கி விமலன் சன்னிதியை அடைந்து வெகு உருக்கமுடன் பிரார்த்தித்தாள். அவனுடைய அன்பைக் கண்டு களித்தாள். அவனுடைய கருணையை வியந்தாள். இவ்வாறிருக்கையில் சில தினங்களான பிறகு ஒரு நாள் சக்கு சர்வேஸ்வரன் சன்னிதியில் நின்று வணங்குங்கால் பக்திமேலிட்டு ஸ்தம்பமாய் நின்று விட்டாள். அவள் உயிர் சென்று அமலனடியை அடைந்தது. அங்கு கூடியிருந்த சாதுக்கள் சக்குவினுடைய உடலை எடுத்துப்போய் தகனம் செய்தார்கள்.

காதலனைவிட்டுப் பிரியாத திருமகளாய் ருக்குமணி தேவி அடியார்கள் கனவில் தோன்றி "சக்குவின் எலும்புகளை என் சன்னிதிக்கு எடுத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டாள். இதற்குள் சக்குவின் மரணத்தைப்பற்றி அவள் கணவனுக்கறிவிக்க ஒருவன் கரவீரபுரத்திற்குச் சென்றான். ருக்குமணி தேவியார் சக்குவை உயிர்ப்பித்து "நீ சென்று என்னுதனை விடுவிப்பாயாக. இன்னும் சிறிதுகாலம் நீ பொறுமையுடன் எங்களைப் பூஜித்திருந்து எங்களடிகளைச் சேர்வாயாக," என்று மொழிந்து சக்குவை அனுப்பினாள். ஊரை அடைந்த சக்கு குடத்தில் ஜலங்கொண்டு





மீளும் கண்ணனிடமிருந்து குடத்தை வாங்கிக் கொண்டாள். "கேவலம் என் போன்ற ஓர் கடையாளின் பொருட்டு இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்ட உனக்கு யான் மிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அம்மையுமப்பனுமாகிய நீ என்னை விரைவில் உன்னடி சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று இறைஞ்சிய சக்குவுக்கு அருள்புரிந்து, விரைவில் அவளை அழைத்துக் கொள்வதாகக் கூறி மறைந்தான் மாகடல்தனில் துயிலும் மாயோன்.

சக்குவின் மரணத்தைப்பற்றிய செய்தியை அறிந்த அவள் கணவன் "என்ன ஆச்சரியம், இப்பொழுது தானே சக்கு நீர்கொண்டுவரச் சென்றாள்" என்று வியப்புற்றான். சக்கு திரும்பி வந்தாள். நடந்ததையெல்லாம் விரிவாகக் கூறினாள். ஐயனின் அருள் விலாசத்தை யறிந்து அளவற்ற வியப்பை அடைந்தார்கள் சக்குவின் மாமனும் மாமியும். "அம்மா, பொறுமைக் கிருப்பிடமே, மங்கையர் மாணிக்கமே, மாதவனின் கருணைக்குப் பாத்திரமானவளே, உனக்கிழைத்த கொடுமைகளெல்லாம் பாராட்டாது எங்களை மன்னித்து எங்களுக்கும் அப்பனருள் சித்திக்கச் செய்வாயாக," என்று சக்குவை இறைஞ்சினார்கள். "அம்மா, உங்களை மன்னிப்பதற்கு நீங்கள் எனக்கு என்ன கெடுதி செய்தீர்கள்? நான் துன்பமடைய வேண்டுமென்று ஈசுவரனுடைய சித்தம் இருக்கையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? நான் உங்களுக்கு என்ன அபராதம் செய்திருந்தாலும் அதை யெல்லாம் மறந்து என்னை மன்னித்தருளவேண்டும்" என்று கூறினாள். என்ன அடக்கம்! என்ன விநயம். பக்தி பெருகப் பெருக அடக்கமும், விநயமும், பணிவும், அன்பும், இரக்கமும், உண்டாவது சகஜமே.

சக்குவும், மற்றவர்களெல்லாரும் பண்டரீபுரத்தை அடைந்தார்கள். அங்கேயே தங்கி, சக்குவுடன் யாவரும் பிரதி தினமும் பரமேச்வரனை வணங்கி வந்தார்கள். சக்குபாய், கண்ணனின் கல்யாண குணங்களைப் பாடி, அவனது செயல்களை எண்ணிக்களித்து, பரிபக்குவ நிலையை அடைந்து, எவருக்கு மெளிதாய சாயுச்சிய பதவியை அடைந்தாள்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவரன்ன வர்க்கே சரணங்களே.

# மதி விடு தூது.

## ஸ்ரீமதி அம்புலு

1. வெண்ணிலாத் தோணியிலே—இனிதாய்
வீசிடும் தென்றலிலே
பொல்லா இரவினிலே—மதியே
போவ தெங்கே சொல்வாய்?

2. நக்ஷத்திரக் கூட்டம்—கூட்டமாய் உன்
பேரொளி போற்றிவர
பிச்சைக் குணமுடைய—மேகமொன்று
பற்றி வழிமறிக்க

3. மந்திரம் பேசிடுவாய்—மதியே
மோகன வாய்திறந்தே
அஞ்சி நடந்திடுவாள்— மதியே உன்
சுந்தரப் புன்னகைக்கே!

4. நாற்புற முள்ள பல—நன்மை தீமை
நானில முற்ற தெல்லாம்
நாரணன் பானுரைப்பாய்—மதியே
மாந்தர் துயர் தீர்ப்பாய்!

5. நீலத்திரை விடுத்த—மதியே
சாளரத்துள் புகுந்தே
மஞ்சத்தின் மீதமர்ந்தாய்—மதியே
நெஞ்சுக் குறை கேளாய்!

6. மானிடச் சாதியிலே—உயர்ந்ததோர்
வேதியச் சார்பினிலே
பாதகியாள் பிறந்தேன்—இதை யொரு
பாக்கிய மெனநினைத்தேன்!

7. ஐந்து வயதினிலே அக்ஷரம்
அறியாத நாளினிலே
என்னை மணமுடித்தார்—மதியே
தந்தை மனமகிழ்ந்தார்!



8. யுத்தவய தடைந்தேன்—பாவிநான்
புத்தகம் போயடைந்தேன்.
என்ன துச்ச மனிதரடா—மதியே
இச்சகம் பெற்றதடா!

9. உச்சிக் குடுமியுடன்—மதியே
ஒற்றைப்பல் சொத்தையுடன்
நாகப்பழம் போலே—மதியே
நாயகன் வீற்றிருந்தார்!

10. கண்ணில் வெளிச்சமில்லை—மதியே
கல்வியைக் கண்டதில்லை
புன்னகை தோன்ற வில்லை—மதியே
பொய்யெனக் கொண்டனையோ?

11. அன்பை யுணர்ந்ததில்லை—மதியே
ஆனந்த மென்பதில்லை
காட்டில் மரம் போலே—மதியே
வீட்டினில் வாழ்ந்திருந்தார்!

12. மாடுகள் பார்த்திடவும்—மதியே
மக்களைப் பெற்றிடவும்,
ஆனதொரு அடிமை—எனவே
நாதன் நினைத்திருந்தார்.

13. நாத்தி யெனுமிருபேய்—மதியே
நாளெல்லாம் ஆட்டுதடா!
நேற்றுப் பெண்களல்லவோ—இவர்களும்
நேர்மை யிழந்த தென்ன?

14. மாமி எனப்படைத்தான்—மதியே
மாகாளி சூலி தன்னை
சாமிக்குத் தெண்டனடா—மதியே
ஜென்மமும் போதுமடா!

15. உண்ணச் சுதந்திரமோ—மதியே
உடுக்கச் சுதந்திரமோ
எண்ணச் சுதந்திரமோ—மதியே
ஏது மிங்கில்லையடா!

16. பூமியெனப் பொறுத்தேன்—புருஷனை
தெய்வ மெனப் பணிந்தேன்
திரேகம் பதறுதடா—மதியே
தினமும் பிறம்படியே!

17. ஒற்றைக் குடும்ப முறை—மதியே
ஒப்பில்லா அன்பு முறை
செத்து மடிந்ததடா—மதியே
சண்டை வளர்ந்ததடா!

18. நாட்டிற் சிறந்ததுவும்—மதியே
நானிலம் போற்றுவதும்
வீட்டுப் பழக்கமடா—மதியே
வீணில் சிதைத்தாரடா!

19. பெண்டெனக் கொள்வ தெல்லாம்—மதியே
தண்டிப்பதற் கெனவோ?
பெண்ணைப் பிறப்பதெல்லாம்—மதியே
பெண்டாக் கொள்வதற்கோ?

20. கிராமத்தில் பெண்களெல்லாம்—உகுத்திடும்
கண்ணீர் வெள்ள மன்றோ
நெல்வயல் பாயுதடா—மதியே
செந்நெல் செறியுதடா!

21. மற்றது கேட்டிடுவாய்—மதியே
மேகங் கவறு முன்னே!
பத்தடி சென்றிடுவாய்—மதியே
பரமனுக்கே யுரைப்பாய்!

22. பெண்ணைப் படைக்காதே—பிரும்மா நீ
பேரறிவைப் படைப்பாய்!
பெண்கள் பாதி எனும் உண்மையுணர்த்திப்பின்
பெண்ணைப் படைப்பா யென்றே.



"ராதா-கிருஷ்ணா"



ஜெர்மனியில் சிறுமியர் கழகத்தில் சேர்ந்து எல்லாச் சிறுமியர்களும் தேச சேவைக்குப் பழகுகிறார்கள். சிறுமியர் படையில் சேர்க்கப்படுமுன் அவர்களின் எடை, பலம், உயரம் முதலியன பரிசோதிக்கப்படும் காட்சி.



நெக்கார் நகர வசந்தகாலத் தோற்றம்.

# வேடனும் யோகியும்

## ஸ்ரீமதி டி. எஸ். ஜானகியம்மாள்

மரங்களடர்ந்த ஒரு காட்டின் நடுவில் முற்றும் துறந்த யோகி ஒருவர் விசாலமான கிளைகளையுடைய ஒரு மரத்தடியில் பகவானைத் தியானித்த வண்ணம் வெகு நேரம் நிஷ்டையிலிருந்தார். அச்சமயம் திடீரெனப் பறவை யொன்று அம்பாலடிக்கப்பட்டு, உயிரிழந்ததாய், மரத்திலிருந்து அவர் காலடியில் விழுந்தது. அச்சப்தத்தின் அதிர்ச்சியால், அந்த யோகி நிஷ்டை கலைந்ததும் கண்களைத் திறந்து பார்த்தார். அப்பொழுது தன் அம்பாலடிக்கப்பட்ட பறவையைத் தேடிக்கொண்டு வந்த வேடனொருவன், அது உயிரிழந்து யோகியின் காலடியில் விழுந்திருப்பதையும், அவர் தன்னை எரித்துவிடுபவர் போல் கோபத்துடன் நோக்குவதையும் கண்டு திகிலடைந்தவனாய் அவர் கால்களில் விழுந்து, "ஸ்வாமி! தங்களுடைய நிஷ்டையைக் கலைத்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும். நான் மிருகங்களைக் கொன்று ஜீவிக்கின்றவன். தங்களெதிரில் வரத்தகுந்தவனல்லன். இம்மரத்திலிருந்த பறவையைக் கொல்லுவதிலேயே நான் ஊக்கமாகயிருந்ததால், வேறொன்றும் என் கண்களுக்குப் புலப்படாமற் போயிற்று. ஆகவே இதைக் கொல்ல வேண்டியதாயிற்று. அது என் ஜாதி தர்மம். இத்திவ்ய பிரதேசத்தை அசுத்தமாக்கினதற்காகத் தாங்கள் என் மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. என்னை மன்னிக்க வேண்டும்," என்று அவரை மன்றாடினான்.

இப்படி அவன் வேண்டியதும் அந்த யோகி மிகுந்த கோபத்துடன் அவனை நோக்கி, "சமாதியிலிருந்து என்னை நீ கலைத்தாய்; உயிரற்ற ஜீவனொன்றை என் மேல் உன் கொடிய செயலால் வீழ்த்தினாய்; மேலும் இப்பிரதேசத்தை அசுத்தமாக்கினாய். இவற்றிற்காக நான் உன்னை சபிக்கக் கூடும்," என்றார்.

இதைக் கேட்ட வேடன், இடியுற்ற நாகம் போல் நடுங்கி "ஸ்வாமி, தாங்கள் அப்படிச் செய்யக்கூடாது," என்று மீண்டும் வேண்டினான். "நான் எங்கு சென்றாலும் தாங்கள் என்னைத் தொடரக் கூடுமென்பதை அறிவேன். ஆகையால் என் ஐயனே! ஏழை மீது கோபியாதிரும்; தங்கள் சக்தியின்முன் நான் ஒரு துரும்பல்லவோ. அறியாமற் செய்த இவ்வபராதத்திற்காகத் தாங்கள் என்னை எதைச் செய்யென்றாலும் அதை உடனே செய்வேன். என்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் என்னையன்றி நாதன் கிடையாது. அவர்களுக்காகவாவது தாங்கள் என்னை ரக்ஷிக்க வேண்டும். இனி நான் இவ்வழி ஒரு போதும் வரத்துணியேன்," என்று மேலுங் கெஞ்சினான்.

இதைக் கேட்டதும், அந்த யோகி வெகு கடுமையாகப் பார்த்து, "என் கட்டளை ஒன்றை நீ செய்து முடிப்பாயானால், நான் உன்னை மன்னிக்கக் கூடும். இக்காட்டினூடேபோ; என் சிறுவனொருவன் எவ்வளவு தூரம் நான் கூப்பிட்டும் என்னிடம் வரேனென்கிறான். அவனைக் கண்டு பிடித்து அழைத்துவா. அவனுக்காக, நான் எவ்வளவோ ஆவலாய்க் காத்திருந்தும் அவன் என்னிடம் வாராமல் சில சமயம் சமீபத்திலும் சில சமயம் தூரத்திலுமாக சஞ்சலபுத்தியுடைய

வனாய், எப்பொழுதும் திரிந்து கொண்டிருக்கிறான். போ, அவனைக்கண்டு பிடித்து என்னிடம் கொண்டுவா, அவன் பெயர் கிருஷ்ணன். இப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவையேல் அவன் உன்னிடம் வருவான். அப்பொழுதுதான் நீ உனக்கேற்பட்டிருக்கும் தண்டனை யினின்றும் விடுபட்டு மீண்டும் உன் வீடு போய்ச் சேருவாய்" என உத்தரவிட்டார்.

வேடன் "கிருஷ்ணா, கிருஷ்ணா," என மெதுவாய் இரு முறை கூறி "ஸ்வாமி அவன் உருவம் எத்தன்மையது? அதைத் தாங்கள் சொல்ல வேண்டும். இக்காட்டில் அவன் இருப்பானேயாகில், நான் இரவும் பகலுமாய் தேடி அழைத்து வருவேன்" என்று வணக்கத்துடன் கேட்டான்.

இதைக்கேட்ட யோகி மெதுவாய்ப் புன்னகையுடன் "அச்சிறுவன் மிருந்த அழகும், கம்பீரமும், பீதாம்பர உடையும், மேகவர்ணமும், சிக பிஞ்சுகமுங்கொண்டு விளங்குபவன்; கையில் புல்லாங்குழல் ஒன்றுண்டு. அவன் அதை வாசிக்கும் போது அதன் இனிமைக்கு, கல்லும் மரமும் எவையும் உருகிப்பரவசமாகும். இச் சிறுவனை நீ என்னிடம் அழைத்துவா. அவனைக் கண்டுபிடிக்கும் பாக்கியம் உன்னதானால் என் கோபம் தானே யொழியும். உன்னை என்றும் வாயார என் வாய் தானே வாழ்த்தும்" என்று திருவாய் மலர்ந்தார்.

இதைக் கேட்டவுடன், வேடன் மிருந்த ஆநந்தங் கொண்டவனாய் "கிருஷ்ணா கிருஷ்ணா" என்று கூவிக்கொண்டே அக் காட்டினுள் சென்றான். அந்த யோகியும், அதன் எதிரொலி வரவர மெதுவாய் அடங்குமட்டும், தன் உதடுகளில் புன்னகை தவழக்கேட்டுக் கொண்டேயிருந்தார். இவ்விதமாய் நான்கு நாட்களும் சென்றன. ஐந்தாநாட் காலையில், களைப்பும் வியசனமும் மேலிட்டவனாய் யோகியின் முன்பு தோன்றினான்.

"ஓ, தபோதனரே, நான் கிருஷ்ணா, கிருஷ்ணா என்று கூப்பிடுந்தோறும், அச் சிறுவன் ஒரு ஜோதிபோல் என் கண் முன் தோன்றி மீண்டும் மறைந்து போகிறான். எவ்வளவோ தடவை நான் கூப்பிடுவதற்குப் பதிலுரைப்பது போல வெகு தூரத்தில் அவனுடைய புல்லாங்குழலின் இனிய சங்கீதம் என் காதுகளிலும் விழுகின்றது. அது வருமிடம் நோக்கி நான் எப்பொழுது சென்றாலும் என்னையனே! அங்கு அவனைக்காண்கிறேனில்லை. வெகு தூரத்தில் மீண்டும் எனக்கு அச்சங்கீதம் கேட்கின்றது. மீண்டும் நான் அவ்வாபரண ஒளியைக் கேட்கின்றேன். ஆயினும் அவன், அந்தோ சிலசமயம் என் கண்ணிற்படாமலும் சில சமயம் நான் பிடிக்க முடியாமலும் ஓடிப்போய்விடுகிறான். ஒரு தடவை—ஒரே ஒரு தடவை—யோகியே—அவன் கண்களை நான் கண்டேன் ஆ! அதிசயிக்கத்தக்க விதமான கண்களாய் அவைகள் காணப்பட்டன. மீண்டுமொரு முறை அக்கண்ணொளியைக்காண நான் தொடரத்தான் வேண்டுமென எனக்குத் தோன்றியது. அதிசயிக்கத் தக்க அச் சிறுவனைக் காணாமல் தாம் வருந்துவதும் அவனைத் தம்முடன் வைத்துக்கொள்ள விரும்புவதும் ஆச்சர்யமல்ல. ஆனால் நான் மீண்டும் களைத்தவனாய்த் தம்மை மீண்டும் சரணமடைகிறேன். அச்சிறுவன் என்





னருகில் வரேனென்கிறான். இனி என்னால் அவனைத்தம் சமீபம் கொண்டு வர முடியாது யோகியே. தம்மை நான் வேண்டிக்கொள்ளுகிறேன். என் குழந்தைகளிடத்தில் என்னை போகவிடும். அவர்கள் என்னைக்காணாது மனமுடைந்து போயிருப்பார்கள்" என்று வேடன் மிகவும் பரிதாபத்துடன் வேண்டிக்கொண்டான்.

வேடன் தான் சிறுவனிடத்தில் கண்ட அதிசயங்களைக் கூறும்பொழுது யோகியும் வியப்புடன் அவனை நோக்கிக் கொண்டேயிருந்தார். "மீண்டும் போ; அச்சிறுவனை என்னிடம் எப்படியாவது அழைத்துவா. அவன் பெயரைச் சொல்லியழை. எங்கு சென்றாலும் இரவும் பகலும் அவனைப்பின் தொடர்ந்தே செல்வாய். அவனை அழைத்துவரும் வரையிலும் நான் உன்னை மன்னிக்க முடியாது. பயப்படவேண்டாம், போ" என்றார் முனி.

வேடன் மறுபடியும் "கிருஷ்ணா, கிருஷ்ணா" வென்று இடைவிடாமல் கூவிக்கொண்டே சென்றான். அவ்வொலி அவ்வனமுழுவதும் கேட்டது. அடர்ந்த புதர்களிலெல்லாம் கிருஷ்ணனைக் காணாமல் தேடி ஓடி யோடிக் கூவினான்; அலறினான்; கிருஷ்ணா, கிருஷ்ணா, என்று கதறினான். இரவும் பகலும் ஊன் உரக்கமில்லாமல் கிருஷ்ணனை அவன் தேடாத இடமில்லை. ஆயினும் அம்மாயச் சிறுவனை மட்டும் காணவில்லை. என்ன செய்வான்; மனந்துடித்தான்; அழுதான்; உள்ளம் பதறினான்; கண்ணால் நீர் வழிய உள்ளமழிந்தான். கைப்பொருளைப் போக்கித் தவிப்பவன் போல மனம் பதை பதைக்க மனமயர்ந்தான். இவ்வாறிவன் தேடும் பொழுது ஒவ்வொரு நாளுங்கடந்து இரவு தோன்றும்; இரவொழிந்து பகலுதிக்கும். இவ்வாறவை ஒன்றன் பின்னொன்று தோன்றல் போலவே வேடனும் தனது வேலையை விடாது காலகதியைப் போல ஓயாது, உள்ளஞ் சோராது நடத்திவந்தான். ஆயினும் அச்சிறுவனைப் பிடித்தபாடில்லை. புல்லாங்குழலின் இனிய கீதமாத்திரம் அவன் காதிலேயே குடிகொண்டிருந்தது. அவ்வினிய கீதவொலி வருமிடத்தை நோக்கி உத்ஸாகத்துடன் சிறுவனைப் பிடிப்பதிலேயே அவ்வேடன் நோக்கமாயிருந்தான். நாள்மேல் நாள் கடந்தன; மாதங்களுங் கடந்தன. ஆயினும் வேடனுடைய ஊக்கங் குறையவில்லை.

மீண்டுமவன் யோகியை அடைந்தான். ஆனால் இத்தடவை கொஞ்சமும் களைப்படைந்தவனாய்க் காணப்படவில்லை. பயந்தவனாயும் தோன்றவில்லை. ஆநந்தத்தால் கண்கள் ஜ்வலிக்க, சந்தோஷமாகவே "ஐயனே! நீர் தேடியவன் இதோ இருக்கிறான். எவ்வளவோ கஷ்டத்துடன் கண்டு பிடித்து விட்டேன். மூன்று நாட்கள் வரையில் அவன் உடையையும், ஆபரணங்களின் ஒலியையும் மாத்திரமே செல்லும் சப்தத்தையும், காற்றில் அசைந்தாடும் அவன் மயில் தோகையையும், இனிமையான புல்லாங்குழலின் கீதத்தையும் மட்டும் நான் பின்தொடர்ந்து சென்றேன். இங்குமங்கும் அவன் ஓடி மறைந்தான்; தன் கண்ணொளியில் என்னை மதிமயங்கச் செய்தான் யோகியரே! அவன் புன்னகையை என்னவென்று சொல்லுவேன்? அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டேன். மீண்டுமவன் என்னிடத்திருந்து

விடுபடத்திமிருகின்றான். ஆனால் அது ஒரு போதும் முடியாது. நான் இனி விடமாட்டேன். அந்தோ உன்னால் முடியாது—முடியாது. அவனன்றிவேறு உலகேது? அவனன்றி வீடேது? உறவேது? அவன் சங்கீதம் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கும்படி என்னைத் தூண்டுகிறதே. அவன் தம்முடையவனாயினும், ஓ யோகியே, அவன் என்னுடைய வனாகவுமிருக்கட்டும்; வேண்டிக்கொள்ளுகிறேன். நானும் தம்முடன் இவ்விடமே இருக்கிறேன்; தமக்கு பணிவிடை செய்துகொண்டு அச்சிறுவனருகிலேயே இருப்பேன்; எனக்கு ஆகாரம் வேண்டுவதில்லை. அவன் புன்னகையொன்றே யாவற்றையும் மறந்துவிடச் செய்கின்றது. என் மீது இரங்கவேண்டும்" என்று மன்றாடினான்.

ஏதோ வொன்றை விடாமற் பிடித்துக் கொள்வது போல் தவித்துக் கொண்டிருக்கும் வேடனைப் பயத்துடன் யோகி நோக்கினார். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் கூறுவதெல்லாம் உண்மையா?

"நீ கூறுவது எனக்கு விளங்கவில்லையே?" என்றார். அவர் அப்புறம் மெதுவாய் "உன்னுடன் ஒரு சிறுவனையும் காணோமே. நான் உன்னைத்தான் காண்கின்றேன்" என்றார்.

"சிறுவனில்லையா!" என்றான் வேடன் வியப்புடன். "கிருஷ்ணனைத் தாம் என்னுடன் காணவில்லையா? இதோ நான் அவனைப் பிடித்துக்கொண்டிருக்கிறேனே. சீக்கிரம் அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள். இல்லாவிடில் ஓடிவிடுவான்".

யோகி ஒன்றும் தோன்றாது வேடனை நோக்கினார். அவன் சமீபத்தில் ஏதோ ஒருபிரகாசமான வஸ்துதோன்றி மெள்ள அவர் கண்களுக்குப் புலப்பட்டு மறைந்து போயிற்று. உடனே யோகியுமெழுந்து வேடன் காலடியிற் விழுந்தார். "பெரியோய்! நீயே முற்றும் துறந்த யோகி. நான் ஒரு அற்பத் துரும்பு. என்னை ஒரு யோகியாகவும், உன்னை ஓர் அற்பனாகவும் அன்றோ நீ கருதினாய். உன்னைப் போல் எவன் யதிகளுக்கோர் யதியான அப்பரமாத்மாவைத் தேடிக் கண்டறிகின்றானோ, அவனைப்போல் எவன் அப்பாக்கியம் பெறுமலிருக்கின்றானோ அவன், ஒரு பிராமணனாயிருப்பினும், யோகப்பியாஸத்தில் தேர்ந்தவனாயிருப்பினும், யாவரினும் கடையனே; மிருகங்களைக் கொல்லுவதிலிருந்து உன் மனதை ஜகதீசனிடத்தில் திருப்பவேதான் கோபமுள்ளவன் போல் நடித்து நான் உன்னை பயமுறுத்தினேன். எப்பொழுது நீ என் தலை மேலிருக்கும் பறவையை மட்டும் கவனித்து கீழிருக்கும் என் தலையைக் கவனிக்கவில்லையோ, அப்பொழுதே, முன்சன்மத்தில் விடா முயற்சியும் மன ஊக்கமும் பெற்றவனென்று எனக்குத் தெரிந்துவிட்டது. ஏனெனில் எவ்வளவோ வருஷங்களாக நிஷ்டையிலுட்கார்ந்து நான் தேடிக்கொண்டிருந்ததை நீ உன் விடாமுயற்சியாலும் மன ஊக்கத்தாலும் அடைந்து விட்டாயன்றோ! நீ கண்டு கொண்டவன். ஆதாரமற்ற யாவற்றிற்கும் ஆதாரமாயுமுள்ளவன் ஆதியந்தமில்லாதவனும் எல்லோரையும் நேசிப்பவனும், யாவராலும் நேசிக்கப்பட்டவனுமான ஸ்ரீ கிருஷ்ணனே யாவன். அவனன்றி ஓர் அணுவும் அசையா.



# ஸெக்கோஸ்லவக்கியா

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

இது ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு அழகிய சுதந்திர குடியரசு நாடு. இத்தேசத்தைச் சுற்றி ஜர்மனி, போலந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி, ருமேனியா தேசங்களிருக்கின்றன. இந்த தேசம் கடந்த மஹாயுத்தத்துக்குப் பின்னர் தான் ஸ்தாபிக்கப்பட்டது. சமாதான உடன்படிக்கைகளின் ஷரத்துக்களின் ஒன்றின் பிரகாரம் ஸெக்கோஸ்லவக்கியா, ஒரு புதிய நாடாக நிர்மாணிக்கப்பட்டது. ஆதியில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த பொஹிமியா, மொரேவியா, சைலீஷியாவும், ஹங்கேரியின் மேல் பாகமாகிய ஸ்லோவக்கியா, கார்பாதியன் ருதேனியாவும் சேர்ந்து ஒன்றாக்கப்பட்டு ஒருபுதிய தேசமாக்கப்பட்டது. பின்னைய பிரதேசங்களுக்கு மாகாண சுய ஆட்சி, மத, கல்வி, நாகரிக சுதந்திரம் பரிபூரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஸ்தல சுய ஆட்சியின் சௌகர்யத்தை உத்தேசித்து இத்தேசத்தை 22 ஜில்லாக்களாகப் பிரித்திருக்கின்றனர். இதன் பரப்பளவு சுமார் 55,690 சதுரமைல்கள். மொத்த ஜனத்தொகை சுமார் 13,595,816 (21). இதில் ஸெக்கோஸ்லோவக்கியர்கள் 60% ஜெர்மானியர் 22%, மாகியர் 5.5%, 4% ருதேனியர், இதரர்கள் 1.5%. ஜனவிகிதம் ஒரு சதுரமைலுக்கு சுமார் 248 பேர்கள். இதன் நீளம் 700 மைல்கள். சில இடங்களில் 200 மைல் அகலமிருக்கிறது.

## அரசியல்

இது ஜனநாயகக் குடியரசு. இருசபைகளடங்கிய ஒரு ஜனப்பிரதிநிதிசபை சட்டங்களியற்றுவதற்காக இருந்து வருகிறது. ஒன்றின் பெயர் சேம்பர் ஆப் டெபுடீஸ் (Chamber of deputies). இதில் 300 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். உயர்தரசபைக்கு ஸெனட் என்று பெயர். இதில் 150 பிரதிநிதிகளிருக்கிறார்கள்.



இத்தேசத்துக் கன்னிகை தன்னை பலநிற அழகிய உடைகளால் அலங்கரித்துக் கொள்ளுகிறாள்.

உயர் சபைக்கு எட்டு வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும். ஜனப்பிரதிநிதிசபைக்கு ஆறு வருஷங்களுக்கு ஒரு தடவை தேர்தல் நடைபெறும். இரு சபைகளும் ஜனங்களால் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆண், பெண், ஜாதிமதகுல தொழில் வித்தியாச

மின்றி வயது வந்த எல்லாரும் ஓட்டுப்பதிவு செய்யலாம். ஒவ்வொரு ஓட்டரும் கட்டாயம் தங்கள் ஓட்டைப்பதிவு செய்யவேண்டும். ஓட்டுக்கொடுக்கத் தவறுபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். தேசத்தின் தலைவர் இருசபைகளும் ஒன்றாகக்கூடி தேர்ந்து எடுக்கப்படுகிறார். அவரது அதிகார காலம் ஏழு வருஷங்கள். ஆனால் ஸெக்கோஸ்லவக்கிய நாட்டை ஸ்தாபிக்கப்



ஸெகோஸ்லோவியா ஸ்திரீ ஜரிகை உடை அணிந்திருக்கிறார்.

பெரும்பாடு பட்டவரும் அதன் தந்தையுமான ப்ரெஸிடென்ட் மஸாரிக் மட்டும் முதன் முதலாக அவரது ஆயுள்பரியந்தம் தேசத்தின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே இக்குடியரசின் நாடி. மஸாரிக் தனது முதிர்ந்த வயதில் சென்ற வருடம் காலமானார். அவருக்குப் பின் டாக்டர் பீனிஷ் என்பவர் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார். பிரஸிடென்ட் தேசத்தின் தலைவர். இதர தேசங்களுடன் உடன்படிக்கைகள் செய்யவும், சட்டசபைகளைக் கூட்டவும், கலைக்கவும், மந்திரிகளை நியமிக்கவும், நீக்கவும், இதர உத்தியோகஸ்தர்கள், ஜட்ஜ்கள் முதலியவர்களை நியமிக்கவும் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது.

## படை

கட்டாயராணுவப் பயிற்சியும், ராணுவ சேவையும் அமுலில் இருந்து வருகிறது. தேசப்பாதுகாப்புக்கு சர்க்கார் விரும்பினால் வயது வந்த தேகவலிமையுள்ள எல்லா ஆடவர்களும் ராணுவசேவை செய்யக்கடமைப் பட்டுள்ளார்கள். சர்க்காரே பயிற்சியும் அளித்துப் பொதுக்கல்வியும் அளிக்கிறார்கள். நிரந்தப்படையின் பலம் 1,75,000.

## வியாபாரம், கைத்தொழில்

உலோகப் பொருள்கள் ஏதேஷ்டமாகக் கிடைக்கின்றன. தங்கம், வெள்ளி, ரேடியம், ஈயம், இரும்பு, நிலக்கரி, உப்பு, எண்ணைகள், காரீயம் முதலியன இந்நாட்டில் கிடைக்கின்றன. நீர்சக்தி (water power) ஏதேஷ்டமாகக் கிடைப்பதால் அதையே தொழில் முன்னேற்றத்துக்கு ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

விவசாயமே பிரதான தொழில். மேல் மாகாணங்களில் சர்க்கரை, பீர், சாராயம், மால்ட் தொழில்களுக்கான மூலப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கீழ்பிரதேசங்களில் பலதான்யங்களும் விளைகின்





றன. மொரேவிய மால்ட்டும், பொஹிமிய பீரும் உலகத்தில் பேர்போனவைகள். பொஹிமியாவின் கண்ணாடிச் சாமான்களும் மிகவும் சிலாக்கியமானவைகள் என்று சொல்லப்படுகிறது. தவிர உல்லாசப் பொருள்களும், விவசாயயந்திரங்களும், துணி நெய்தலும், தோல்வியாபாரமும் முக்கிய தொழில்களாகும். கோடிக்கணக்கான பவுன்களுக்கு இதரதேசங்களுடன் மேற் சொன்ன பொருள்களில் வியாபாரம் நடந்து வருகிறது.

## போக்குவரத்து

சுமார் 10,000 மைல் ரயில்வே இருக்கிறது. இதில் பெரும்பாகம் சர்க்காருக்குச் சொந்தமானது. எல்பி நதியும், அதன் கிளைநதி விடாவும் இந்நாட்டின் தலை நகராகிய பிரேகை ஹேம்பர்குடன் இணைக்கின்றன. டான்யூப் நதியும் போக்குவரத்துக்கு உபயோகப்படுகிறது. ப்ரேடிஸ்லேவா என்பது தான் ஸெக்கோஸ்லவக்கியாவின் முக்கிய துறைமுகம். போதிய தந்தி வசதிகளும், டெலிபோன் சௌகர்யங்களும் இருந்து வருகின்றன. சுமார் நாற்பது ஆயிரம் மைல்கள் நல்ல ரோடு இருக்கிறது. இன்னும் இந்த வசதிகளை பெருக்குவதில் ஏராளமான பொருள் செலவு செய்து வருகிறார்கள்.



ஸெகோஸ்லோவகிய ஸ்திரீ குழந்தையை வீட்டில் விட்டு வேலை செய்ய முடியாது. குழந்தையை வேலை செய்யுமிடத்தில் தாலாட்டும் காட்சி.

## முக்கிய நகரங்கள்

பிரேக் தான் தலை நகரம். ப்ருனோ, ப்ளிசென், ப்ரேடிஸ்லேவா, ஓலோமூக், கோஸிஸ், மாராஸ்கா, உஸ்தி, லிபெரக் முதலியவைகள் இதர முக்கிய நகரங்கள்.

## ஜனங்கள்

ஜனப்பிரிவுகளை செக்கர் அல்லது பொஹிமியர், மொரேவியர், ஸ்லோவக்கியர், ருதேனியர், ஜெர்மனியர், டியூட்டன்கள் என்று பிரிக்கலாம். மதம் கிறிஸ்தவ மதமே. செக்கர்கள் தீவிரதேச பக்தி படைத்தவர்கள்; புத்திசாலிகள், சுறு சுறுப்பு மிகுந்தவர்கள். பொதுவாக மதப்பற்று அதிகமானவர்கள் என்று சொல்லுவதற்கில்லை. "ஸொகோல்" என்ற ஒரு சங்கம் இருக்கிறது. அதில் ஆண் பெண் இருபாலாரும் அங்கத்தினராக இருக்கலாம். அதன் அங்கத்தினர்கள் ஒரேவித உடையும், தலை மீது இரு இராஜாளி இறகுகளையும் அணிகிறார்கள். இதன் அங்கத்தினர்களி

டத்தில் ஏற்றத்தாழ்வு கிடையாது. இதன் கொள்கை சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம். தைரியமும், பலமும் மிக்கவர்கள். ராணுவமுறையில் இருபாலரும் பயிற்சி பெறுகிறார்கள். பெண்களும் தேச பக்தி மிகுந்தவர்கள்.

## தேச பக்தி

தாய்நாட்டின் நன்மைக்காக எவ்வித தியாகத்தையும் செய்யத்தயாராய் இருக்கிறார்கள். இந்நாட்டு மக்கள் தங்கள் தேசக்கலை, சிற்பம், சங்கீதம், சித்திரம், முதலியவற்றைப் போற்றி வளர்த்து வருகிறார்கள். சங்கீதத்தில் அவர்களுக்கு அதிகப்பிரியம். முக்கிய நகரங்களில் மட்டுமின்றி கிராமங்களில் கூட எல்லோரும் சங்கீதத்தை சிரத்தையுடன் கற்றுக் கொள்ளுகிறார்கள். நடையுடைகளிலும் தங்கள் தேச புராதன முறைகளையே அனேகமாய் அனுசரித்து வருகிறார்கள். நாடகம், நடனம், பாட்டுக்கச்சேரிகள் முதலியவற்றை நடத்தி லீவு நாட்களைக் குதூகலமாகக்களிக்கிறார்கள். ருதேனியருக்குக் கொக்குகள் நற்சகுனப் பறவைகள். தங்களை இவர்கள் பலகலர் உடைகளால் அலங்கரித்துக் கொள்ளுகிறாகள். ஆனால் பலவிதமான செகப்பில்தான் இவர்களுக்கு ரொம்பப்ரீதி. பூ வேலைகள், ஜிகினுத்தையல்கள், சித்திரத்தையல்கள் உடைகளில் எதேஷ்டமாகச் செய்து கொள்ளுகிறார்கள். ருதேனியர் ஒரு வரை ஒருவர் புதிதாக சந்தித்தால் முதல்வர் "நீங்கள் ஆயிரம் வருஷங்கள் ஜீவித்திருப்பீர்களாக" என்று சொல்லுவார். மற்றவர் "என் சாமக்கிரியைக்கு நீங்கள் நிச்சயம் வரவேண்டும்" என்று பதில் சொல்லுவார்.

## கல்வி

தொழிற்கல்வி, பொதுக்கல்வி முதலியனவற்றை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டிய சௌகர்யங்களை சர்க்கார் செய்திருக்கிறார்கள். மக்களும் அவைகளின் வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டுகிறார்கள். கோயில்களைக் கண்டால் கிருஷிகர்கள் தங்கள் தலையிலுள்ள குல்லாய்களை எடுத்து தெய்வத்துக்கு மரியாதை செய்கிறார்கள். ஸ்லோவக் இனத்தார் ரொம்பவும் எளியவர்கள். கல்யாணத்துக்கு அழைத்தால் "உங்களுடைய தட்டு, கத்தி, கரண்டியுடன் வந்து சேரவும்" என்பது அவர்களின் வழக்கம்.

## பெண் கேட்டல்

ஸ்லோவக்கியரின் பெண் கேட்கும் வழக்கம் விநோதமானது. மாப்பிள்ளையும், மாப்பிள்ளைத் தோழனும் பெண் வீட்டுக்கு வந்து கதவைத்தட்டுவார்கள். பின்னர் தாங்கள் ஒரு நட்சத்திரத்தைத் தேடிவந்திருப்பதாகச் சொல்லுவார்கள். அவர்கள் உள்ளே வந்து சுற்று முற்றும் பார்ப்பார்கள். பெண் அவர்களைப்பார்த்த உடன் எழுந்து வீட்டுக்குள் வேறு எங்கேயாவது போய் ஒளிந்து கொள்ளுவாள். மாப்பிள்ளை "அது தான் நாங்கள் தேடி வந்த நட்சத்திரம். தேடிப்பிடித்துக் கொள்ளலாமா?" என்று கேட்பான். 'சரி' என்றவுடனே இருவரும் அவளைக் கண்டு பிடித்து, தோழன் கல்யாணம் என்பதைப்பற்றி ஒரு விரிவான பிரசங்கம் செய்வான். பின்னர் நிச்சயதார்த்தம் நடைபெறும்.





## ராணி லிபுசா

க்ரோக் என்ற மன்னன் மாண்டவுடன் அவனது மூன்று புத்திரிகளுள் ஒருவளாகிய லிபுசாவை தங்கள் ராணியாகவும் தலைவியாகவும் பொஹீமியர் தேர்ந்து எடுத்தார்கள். அவள் தூயகுணமும், நன்நடக்கையும், நீதி வழுவாமலும், எல்லோரிடத்தும் அன்பாகவும், திறமையாகவும் தன் பிரஜைகளை ஆண்டு வந்தாள். அவள் ஜனங்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றவளாகயிருந்தாள்.

## ஸ்திரீகள்

பெண்கள் தங்கள் வீட்டுவேலைகளை கவனிப்பது மன்னியில் குடிசைத் தொழில் பலவும் செய்து அப்பொருள்களை விற்பனை செய்வதற்காக சந்தை கூடும் நகரங்களுக்குத் தாங்களே போவார்கள். ஸ்திரீகள் வயல் வெளிகளிலும் விவசாய சம்பந்தமான காரியங்களில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். தங்களுடைகளை தங்கள் இஷ்டப்படி அழகான துணிகளில் நூதன விதமாகத்தைத்து அணிந்து கொள்ளுவதில் ஸ்திரீகள் வெகுநிபுணர்கள். கார்பாதியன் மலைப்பிரதேசத்தில் வசிக்கும் குடியானப் பெண்கள் மணமுடிப்பதற்குமுன் தலை வளர்த்திருப்பார்கள். தங்கள் கைக்குட்டைகளை கழுத்தில் கட்டிக்கொண்டிருப்பார்கள். மணமுடிந்தவுடன் தலையை கிராப் செய்துகொண்டு கைக்குட்டையை நர்ஸ்போல் தலையில் சுற்றிக் கொள்வார்கள்.

வக்கீல்:—(குற்றவாளியைப் பார்த்து) குற்றம் நடந்ததாகக் கூறப்படும் சமயத்தில் நீ வேறு இடத்தில் இருந்திருந்தால் அதை ஏன் சொல்லக் கூடாது. கோர்ட்டாருக்கு உன் மேலிருந்து வரும் சந்தேகம் நீங்குமே?

எதிரி:—நான் அன்றுடைப் அடிக்கும் பெண்ணுடன் போயிருந்தேன். கோர்ட்டில் என் மனைவி இருக்கிறாள். நான் சிறைக்குச் செல்லுவேனேயன்றி அந்தப் பெண்ணுடன் சென்றதை என் மனைவியறிய ஒப்புக்கொள்ள மாட்டேன்.

# திருக்கழுக்குன்றம்

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

நீர்வளம் நிலவளமிக்க நம் தென்னாட்டின்கண் விளங்காநின்ற அறிய புண்ணிய க்ஷேத்திரங்களுள் திருக்கழுக்குன்றமெனப்படும் பக்ஷி தீர்த்தமும் ஒன்றாகும். இவ்விடமானது சென்னை மாநகருக்கு சுமார் நாற்பத்தைந்து மைல் தூரத்தில் தென்மேற்குப் பாகத்தில் உள்ளது. இந்நகர் வங்காள விரிகுடாவிற்கு சுமார் ஒரு யோஜனை மேற்கேயும் அரை யோஜனை பாலாற்றிற்கு வடக்கேயும் இருப்பதாயும் ஸ்கந்தபுராணம் கூறுகின்றது. இங்கிருக்கும் குன்று கைலாயத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. இக்குன்றிலிருக்கும் கோயிலின் நான்கு சிகரங்கள் நான்கு வேதங்களாகக் கருதப்படுகின்றன. திருக்கழுக்குன்றத்திற்கு ஆதிநாராயணபுரம், ருத்ரகோடி, வேதகிரி எனப் பல பெயர்கள் உண்டு.

முன்காலத்தில் அநேக அரக்கர்கள் ஒன்றுகூடி அட்டகாசம் செய்து வந்தார்கள். அதைச் சகியாத தேவர்கள் பிரம்மாவிடம் முறையிட்டனர். பிரம்மா விஷ்ணுவிடம் முறையிடும்படி கட்டளையிட்டார். விஷ்ணு சிவனிடம் சென்றார். அண்ட சராசரங்களையும் தன்பால்கொண்டவனான எம்பிரான் சிவபிரானை யணுகி அரக்கரையழிக்க மார்க்கமுளதோ என, சிவபிரான், அரக்கர்கள் தனது அடியார்களாதலால் தான் ஒருவழியும் கூறவியலாதவராய் வருந்தினார். இதையறிந்த ஸ்ரீமந்நாராயணன் அரக்கர்கள் சிவபிரானை மறந்து விடும்படியாகச் செய்தார். தான் புத்தாவதாரமெடுத்து எல்லோருக்கும் தமது கொள்கையைப் போதித்தார். அரக்கர்கள் சிவபிரானை மறந்தனர். ஆகையால் தேவர்கள் ஜயித்தனர். ஆனாலும் விஷ்ணு சத்காரியம் செய்து தன்னைத் தொழும் அரக்கருக்கு அழிவு வரும்படி செய்ததால் சிவபிரான் கோபம் கொண்டார். விஷ்ணுவும் அதற்கு வருந்தி இவ்விடத்தில் தவம் செய்து தனது பாபத்தைப் போக்கிக் கொண்டார். அதனாற்றான் இன்னும் வைஷ்ணவர்களும் இங்கு வந்து வேதகிரீஸ்வரரைத் துதித்துச் செல்கிறார்கள்.

அதுவுமன்றி நானூறு வருடங்களுக்கு முன் மலையடிவாரத்தில் தென்மேற்குப் பாகத்தில் ஒரு விஷ்ணு ஆலயமிருந்ததென்றும் அது அழிந்து போய்விட்டதென்றும் கூறப்படுகிறது. அக்கோயில் இருந்த இடத்தில் இப்போது தேரடிக் குளம் உளது.

முன் ஒருகாலத்தில் ஜனங்களும் ரிஷிகளும் வேதங்களோதுவதை மறந்தனர். ஆகையால் சிவபிரான் வேதத்தை நான்காகப்பிரித்து (ருக், எஜுர், சாம, அதர்வணம்) இங்கிருக்கும் ரிஷிகளிடம் ஒப்புவித்து அதை இடைவிடாது கூறும்படி செய்தார். அதனாற்றான் இங்கிருக்கும் கடவுளுக்கு வேதகிரீஸ்வரர் எனப்பெயர் உண்டாயிற்று.

வேதகிரீஸ்வரர் தேவாலயம் கிராமத்தின் வடபாரிசத்திலுள்ளது. இக்குன்று அநேக விதமான மூலிகைகளையுடைத்தாயிருப்பதால் வசிப்பதற்கு மிகவும் சிலாக்கியமானது. அதற்காகவே அநேக இடங்களிலிருந்து வியாதியஸ்தர்கள் யாதொரு மருந்தின் உதவியின்றி தமது வியாதிகளை சொஸ்தப்படுத்திக்கொள்ள இங்கு வந்து தங்கிச் செல்கிறார்கள்.

குன்றை பிரதக்ஷிணமாகச் செல்ல சுமார் இரண்டேகால் மைல் தூரம் உளது. வலதுபாகத்திலிருந்து சிறிது தூரம் சென்றால் சுமார் 40 அடி நீளமும் 20 அடி அகலமுள்ள ஒரு தடாகமுள்ளது. இதற்குத்தான் பக்ஷி தீர்த்தம் என்று பெயர். ஒரு குகைபோன்ற மார்க்கத்தில் இது உள்ளது. இதன் ஜலம் பரிசுத்தமாயும் அநேக மருந்துகளின் குணங்களை ஒருங்கே படைத்ததாயும் உள்ளது. பரிகாரம் செய்ய முடியாத பெரும்வியாதியும் இந்த ஜலத்தை யருந்தினால் குணமாகி விடும் என்றால் இதன் மகத்துவம்தான் என்னே!

திரு (சிரேஷ்டம் பொருந்திய) கழு (கழுகுகள் வரும்படியான) குன்றம் (குன்று) மிகவும் புராதனமான இடம். இங்கு வசிக்கும் ஒரு பண்டாரம் பிரதிதினமும் சுமார் 12 மணிக்கு சக்கரைப் பொங்கலும் ஜலமும் குன்றின் ஒரு குறித்த இடத்தில் கொண்டுவந்து இருகழுகுகளுக்காகக் காத்திருக்கிறார். கழுகுகளும் வட்டாரமிட்டுக் கொண்டே இங்குவந்து அவ்வுணவை உண்டு, பாத்திரத்திலுள்ள ஜலத்தைக் குடித்துச் செல்லுகின்றன. இக்கழுகுகள் கங்கையில் ஸ்நானம் செய்து இராமேஸ்வரத்திலுள்ள ஸ்ரீ ராமரைத் துதித்து, இங்கு போஜனம் செய்து, சிதம்பரத்தில் உறங்குவதாய் கருதப்படுகிறது.

கிருதயுகத்தில் இக்கழுகுகள் சண்ட, பிரசண்டர் என்றும், திரேதாயுகத்தில் ஜடாயு, சம்பாதியாயும், துவாபரயுகத்தில் சாம்பகுப்த, மகாகுப்த என்றும் கூறப்பட்டிருக்கிறது. இக்கழுகுகள் மிகவும் பக்தர்களாய் யிருந்தன வென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

வேதகிரீஸ்வரர்கோயில் கிழக்கே நோக்கியுள்ளது. அதற்கு ஒரு பிரகாரம் உள்ளது. இங்குள்ள லிங்கம் ஸ்வயம்பு லிங்கம், அதாவது தானாகவே ஏற்பட்டது. இங்கு 12 வருஷங்களுக்கு ஒரு முறை இந்திரன் வந்து வேதகிரீஸ்வரரை தரிசித்துச் செல்வதாகக் கருதப்படுகின்றது. இந்திரன் வரும்போது இடிகளுடன் வருவதாகவும், சிலவருஷங்களுக்குமுன் இம்மாதிரி இடிவந்தது கவனிக்கப்பட்டதாயும் கூறப்படுகின்றன. கோயில் அருகில் திருமலை சொக்கம்மாள் கோயிலும், ஒருக்கால் மண்டபத்தில் ஒரு லிங்கமும் இருக்கின்றன. இம்மண்டபம் பல்லவ அரசன் முதல் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டதாக கட்டடத்தில் வரையப்பட்டிருக்கிறது. இவ்வரசனேதான் மகாபலிபுரத்திலுள்ள ரதங்களைக் கட்டுவித்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு அநேக சித்திர வேலைப்பாடுகள் அமைந்த இடங்கள் உள்ளன.

இங்கு விசுவாமித்திர தீர்த்தமெனப்படும் அண்டராஜன் குளமும் வருணதீர்த்தம், மெய்ஞான தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், எனப்படும் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. இவைகளில் மிகச் சிறந்ததும் பெரியதும் சங்கதீர்த்தம். இது பக்தவத்சல ஸ்வாமி கோயிலிலிருந்து கிழக்கே செல்லும் பாதையின் முனையிலுள்ளது. இங்கு இருக்கும் ஜலம் குன்றுகளின் பலபாகங்களிலிருந்து வரும் ஓடைகளினால் நிறப்பப்படுவதால் அதற்கு அநேக வியாதிகளைத் தடுக்கும் சக்திவாய்ந்திருக்கிறது.

பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை கங்கா, யமுனா, கோதாவரி, காவேரி முதலிய நதிகள் அபிமான தேவதைகள் இங்கு கூடுவதாய் கருதப்படுகிறது. அக்குளத்தில் அந்த நாள் ஸ்நானம் செய்தால் நம் பாபங்களழியும். சங்க தீர்த்தத்திற்கு இரண்டு பர்லாங்தென்கிழக்கே ருத்ரன் கோயிலும், ருத்ரகோடி தீர்த்தமும் உள்ளன. இது மிகவும் சிறிய கோயிலாயினும் பெரிய சித்திர வேலைப்பாடுகளுடன் கூடியது. திருக்கழுக்குன்றம் செல்வோர் மஹாபலிபுரம் மிகவும் அருகிலிருப்பதால் அங்கும் சென்று கடவுளை தரிசித்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட மேன்மையும், அழகும் பொருந்திய திவ்யக்ஷேத்திரமாகிய திருக்கழுக்குன்றத்தின் கோயில்களிலுள்ள திவ்விய மூர்த்திகளை யார் தரிசிக்கின்றனரோ அவர்களுக்கு கீர்த்தியும் மேன்மையும் மென்மேலும் அபிவிருத்தியாகுமென்பதற்கு யாதொரு தடையுமில்லை.

# செய்தித்திரட்டு

## ஸ்திரீ விரோதி

டப்ளின் நகரத்தைச் சார்ந்த சங்கீத ஆசிரியர் அந்தோனி ஸ்கூபியக் என்பவர் சேர்ந்தாப்போல் விடாது இருபத்தாறு மணி நேரங்கள் "ஸ்திரீகளின் சாகசம்" என்பது பற்றிப்பேசினாராம். முதல் நாள் சாயந்திரம் ஏழு மணிக்கு பேச ஆரம்பித்தவர் மறுநாள் இரவு ஒன்பது மணி வரை பேசியிருக்கிறார். மத்தியில் ஒரு சில நிமிஷங்கள் சிறிது பாலருந்தவும், முட்டை சாப்பிடவும் பேத்தலை நிறுத்தியிருந்தாராம். தான்தான் உலகத்திலேயே முதன்மையான ஸ்திரீ விரோதி என்று கூறிக் கொண்டாராம். இதைக்கேட்கவும் ஜனங்களிருக்கிறார்களே என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

... ... ...

## துப்பறியும் கட்டழகி

ஒரு ஜெர்மன் கட்டழகி சமயோஜிதம் போல் தன் பெயரையும் நடை உடை பாவனைகளையும் மாற்றிக்கொண்டு தன் தாய் நாட்டுக்காக வெளிநாடுகளில் உளவறிந்து வருகிறாள். இவள் துப்பறிவதில் மஹாசாமர்த்திய சாலி. தற்சமயம் இவள் பிரிட்டிஷ் ஆயுதப்பெருக்குத் திட்டத்தைப் பற்றிய மர்மங்களைக்கண்டு பிடிப்பதில் வெகு தீவிரமாக வேலை செய்து வருகிறாள். பிரிட்டிஷ் ரகசியப் போலீஸாரும் அவளைக் கண்டு பிடித்துக்கைது செய்ய பெரு முயற்சிகள் செய்து வருகிறார்களாம். யார் ஜெயிப்பாரோ?

## உலகில் விரைவாக நீந்தும் ஸ்திரீ

டென்மார்க் தேசத்தைச் சார்ந்த ராஹின் ஹில்ட் ஹேல்கர் என்ற பதினைந்து வயது யுவதியே தற்பொழுது உலகில் மிகவும் விரைவாக நீந்துபவள். அவள் சமீபத்தில் 880 கஜதூரத்தை 11 நிமிஷம் 16 வினாடியில் நீந்திப்புதிய உலக ரிகார்டை ஏற்படுத்தினாள். நமக்கு கௌரவம்தான்!

... ... ...

## ஸ்திரீ புருஷர்

தேக சாஸ்திரப்படி ஸ்திரீகளை விடப் புருஷர்கள் சாதாரணமாக அதிக வலுவுள்ளவர்கள் என்று சொல்லப்படுகிறது. புருஷர்களுடைய எடையில் 84% அவர்களுடைய பலம்; ஸ்திரீகளின் இடையில் அந்த விகிதாசாரம் 54% தான். புருஷர்களுடைய மூளை 3½ பவுண்டு இடையிருக்கும்; ஸ்திரீகளின் மூளையின் எடை 2 பவுண்டு 11 அவுன்ஸ்தானாம்.

... ... ...

## தந்தி

இன்று சர்வசாதாரணமாய் சமாசாரப் போக்கு வரத்துக்கு வெகு உதவியாக இருக்கும் தந்தியை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் லண்டன் மன்னர்கலாசாலையின் ஆசிரியர்கள் ஸர் சார்லஸ் வீட்ஸ்டன், ஸர் வில்லியம் குக் என்பவர்களே. இதை 1837-ம் வருஷம் தான் முதன் முதல் உபயோகப் படுத்தினார்கள். தந்தி பிறந்து 100 வருஷங்களாயின.



மேல்நாட்டில் குழந்தைகள் தேகப்பயிற்சி செய்யும் காட்சி.




வேணுகானலோலன்



## அன்னபக்ஷி

அன்னபக்ஷிகள் 100 வருஷங்களுக்கு மேல் ஜீவித்திருக்கின்றனவாம். கூண்டில் அடைபட்டுள்ள வானம்பாடிகள் கூட 40 வருஷங்கள் வரை ஜீவித்திருக்கின்றன.

... ... ...

## கொட்டாவி

சுவாசாசயங்களுக்குப் போதிய காற்று எட்டாததினாலேயே கொட்டாவி ஏற்படுகிறது.

... ... ...

## ஹிட்லர் காதலி

போலந்து தேசத்து சினிமா நடிகையான போலா நெக்ரி ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹெர் ஹிட்லருடன் ரொம்பவும் நெருங்கிப் பழகிவருகிறாளாம். அவளுக்கு நடக்கும் விருந்துகளிலெல்லாம் ஹிட்லர் ஆஜராய் விடுகிறாராம். போலா நெக்ரியையே அவர் மணந்து கொள்வார் என்று ஐரோப்பாவில் ஒரு பலத்த வதந்தி உலாவுகிறது.

... ... ...

## திருவாங்கூர் சட்டசபையில் ஸ்திரீ பிரதிநிதிகள்

திருவாங்கூர் சட்டசபைக்கு சமஸ்தான சர்க்கார் மூன்று ஸ்திரீகளை நியமித்திருக்கிறார்கள். ஜனப்பிரதிநிதி சபையாகிய சித்ரா ஸ்ரீமூலம் அசெம்பிளிக்கு ஸ்ரீமதி டி. நாராயணி அம்மாள் பி.ஏ., வையும், ஸ்ரீமதி கே. தேவகி அனிதார்ஜுனம் அவர்களையும் நியமித்திருக்கிறார்கள். முதல்வர் வேளாள வகுப்பைச் சார்ந்தவர். ஸ்ரீமதி தேவகி மலையாள பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். உயர்தர சபையாகிய ஸ்ரீ சித்ரா ஸ்டேட் கவுன்ஸிலுக்கு **மிஸ்** ஹெப்ஸிபா ஞானசிகாமணி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

... ... ...

## வாத்திய வகைகள்

உலகத்திலுள்ள பேர்போன சிறந்த வாத்தியக்கருவிகள் அனேகம் உடையவள் கோப்பன் ஹேகனிலுள்ள ஒரு மாதே. அவள் சுமார் 600 கருவிகளை ஒருங்கே சேர்த்து வைத்திருக்கிறாள். அவைகளில் சில வெகு நூதனமானதும் அபூர்வமானவைகள். விலையும் அதிகம். ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு கதை அவள் சொல்லுகிறாள். பலதேசத்து வாத்தியங்களும், பலகாலங்களில் உபயோகப் படுத்தப்பட்ட வாத்தியங்களும் அவளிடம் இருக்கின்றன.

... ... ...

## வின்சர்-சிம்ஸன் மணம்

மாஜிமன்னர் எட்வர்டுக்கும் ஸ்ரீமதி வாலிஸ் சிம்ஸனுக்கும் ஜூன் மாதம் 3வ ஷாத்யூ காண்டே என்ற ஊரில் திருமணம் நடைபெறும். மாங்க்ஸ் நகரின் மேயர் திரு. மொர்ஸியர் மணச்சடங்குகளை நடத்தி வைப்பார். சென்ற ஒரு சில மாதங்களாக வின்சர்பிரபுவுடனும், ஸ்ரீமதி சிம்ஸனுடனும் நெருங்கிப் பழகிய நண்பர்களுக்கு மட்டும்தான் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. கல்யாண வைபவத்தில் மன்னர் குடும்பத்தினர் யாரும் பிரசன்னமாயிருக்கமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## கோழிமுட்டை ஜோஸ்யம்

வர்ஜீனியாவில் ஒரு குடியானவன் வீட்டில் ஒரு கோழி இட்டிருக்கும் முட்டை ஓட்டின்மேல் சில நூதன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதன்பிரகாரம் இவ்வருஷம் ஜூன் மாதம் 20௳ உலகில் மஹாயுத்தம் ஆரம்பிக்குமாம். முட்டை வெளிப்பட்டபோது அந்த எழுத்துக்கள் அதன் மேல் இருந்தன.

... ... ...

## இஷ்டப்படி மூக்கு

நியூயார்க் நகரத்தில் டாக்டர் ஹோவார்ட் க்ரம் என்னும் டாக்டர் பெண் ஆண் இருவருடைய முகங்களிலுமுள்ள குறைபாடுகளையும், அங்கஹீனங்களையும் ஒட்டுவைத்திய முறையினால் (Plastic Surgery) நீக்கி விடுகிறார். சப்பை மூக்குள்ளவர்களுக்கு நல்ல அழகான மூக்குகள் உண்டாக்கிவிடுகிறார். அவைகளும் இயற்கையான அவயவங்கள் போலவே இருக்கின்றன. மூழிமூக்கர்களுக்கும், மூழி முகமுடையவர்களுக்கும் நல்ல யோகந்தான்!

... ... ...

## சிப்பாய் பிரசவித்தான்

வார்ஸாவில் ஒரு சிப்பாய் வேலையிலிருந்து விலகியபின் பெண்ணாக மாறி விட்டான். அது மட்டுமல்ல. பெண்ணாக மாறி ஒரு வருஷத்துக்குள்ளாகவே ஒன்பது பவுண்டு எடையுள்ள ஒரு குழந்தையையும் பெற்றான்.

## "மகன் கூப்பிட்டான்"

ஈஷர் பார்க் ஸ்குயரில் வசித்து வந்த மிஸஸ் கேத்லீன் அப்டன் என்ற 50 வயதுள்ள மாது தற்கொலை செய்து கொண்டாள். அதற்குக் காரணம் சில நாட்களுக்கு முன் இறந்து போன தன் அருமை மகன் அவளையும் தன்னிடம் வரும்படி அடிக்கடி கூப்பிடுவதாக அவளுக்குத் தோன்றினது தானாம்.

... ... ...

## 20 வருஷகாதல் கடிதப் போக்குவரத்து

இருபதுவருஷ காதல் கடிதப் போக்குவரத்துக்குப்பின் ஒரு ஆஸ்திரேலிய சிப்பாய்க்கும், ஒரு ஸ்காட்லந்து கன்னிகைக்கும் மணம் நடக்கப் போகிறது. இந்த இருபது வருடங்களில் ஒருவரை ஒருவர் பார்த்ததே இல்லை. அவன் பெயர் கேப்டன் பெர்கூஸன். அவள் பெயர் மிஸ். எம். ஹாமில்டன். மஹாயுத்த காலத்தில் மிஸ். ஹாமில்டன் சகோதரன் யுத்தகளத்தில் மாண்டு கிடந்தான். அவன் பையில் மிஸ் ஹாமில்டன் புகைப்படத்தை பெர்கூஸன் பார்த்ததிலிருந்து கடிதம் எழுத ஆரம்பித்தானாம்.

... ... ...

## நிறம் மாறும் மலர்

ஒரே நாளில் ஆறு விதவர்ணங்களை அடையக்கூடிய மலர் இனங்கள் மெக்ஸிகோவில் இருக்கின்றனவாம். அவைகள் காலையிலிருந்து மாலைக்குள், வெள்ளை, சிவப்பு, ரோஸ், சாம்பல் நிறம், ஊதா, நீலம் இத்தனை நிறங்களாக மாறுபடுகின்றன. இம்மாதிரி ஏற்படும் நிறமாறுதலின் காரணங்களை தாவரசாஸ்திர நிபுணர்களால் இன்னும் கண்டு பிடிக்கமுடியவில்லை. இவ்வகை புஷ்பங்கள் மெக்ஸிகோ நாட்டைத்தவிர வேறு ஒரு தேசத்திலும் காணப்படவில்லை.

... ... ...

## $\frac{1}{100}$ பென்னி வருஷ சம்பளம்

உலகத்திலேயே மிகுந்த குறைந்த சம்பளம் பெறும் தபால்காரன் யூகோஸ்லேவியாவிலுள்ள பஞ்சாலுகா நகரிலிருக்கும் மிலோஷ் ஷாஜின் என்பவன்தான். தினசரி ½ டன் முதல் 1 டன் நிறையுள்ள கடிதங்களை அவன் பஞ்சாலுகாவிலிருந்து டெர்வன்டுக்கு (சுமார் 60 மைல்கள்) கொண்டு சேர்க்கிறான். ஆனால் அவனுக்கு ஊதியம் வருஷத்துக்கு ஒரு பென்ஸில் நூறிலொருபங்குதான். போன வருஷத்துக்கு 400 பவுன் என்று டெண்டர் கொடுத்தான். இன்னொருவன் ½ பென்ஸ் போதும் என்றான். இவ்வருஷம் அது கிடைக்க ஒரு பாரா ($\frac{1}{100}$ பென்ஸ்) போதுமென்று சொல்லி வேலையை யெடுத்துக் கொண்டான். அவன் ஏமாந்தவனா? இல்லை. இதனால் பஸ் ஓட்டும் சுதந்திரம், பெட்ரோல், ரயில் சலுகைகள் சிலவும் அவனுக்குக்கிடைக்கின்றன.

... ... ...

## ஆண் பிரசவிக்கும் அதிசயம்

கடலில் வசிக்கும் நூதன பிராணி ஒன்றுக்கு "ஹிப்போகாம்பஸ்" அல்லது நீர்க்குதிரை என்று பெயர். அதற்கு குதிரையைப் போன்ற தலையும், வண்டைப் போன்ற முதுகு ஓடும் இருக்கின்றன. இதுவரையில் பிரசவிக்கும் பொறுப்பு, குட்டிபோடும் சக்தி, பெண் இனத்துக்கே உரியது என்று நினைக்கப்பட்டுவருகிறது. ஆனால் நீர்க்குதிரைகளில் ஆண்கள் தான் குட்டிபோடுகின்றனவாம்.

... ... ...

## தீப்பற்றா உடை

சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாக தீயுடன் போராட ஒரு நூதன உடையை ஒரு ஆங்கில எஞ்சினீயர் கண்டு பிடித்திருக்கிறார். அது கல்நாரால் (Asbestos) செய்யப்பட்டது. ஒரு சூட், ஹெல்மெட், கைமூடி (Gloves) இவைகளை அணிந்து கொண்டு எத்தனை மணிநேரம் வேண்டுமானாலும் நெருப்பு மத்தியில் ஜ்வாலைகளுக்கிடையில் இருந்து கொண்டு நிம்மதியாக வேலை செய்யலாம்.

... ... ...

## கண்ணாடியில் ஆணி அடி

கிளாஸ் சாமான்களில் ஆணியரைந்தால் உடைந்து போகும் என்ற பயம் இனி வேண்டியதில்லை. ரம்பம்கொண்டு சாதாரண மரப்பொருள்களை அறுப்பது போல் அறுக்கவும் செய்யலாம். கண்டபடி உடைந்து சிதறிவிடாது. அதற்கு ஒரு விதப் பொருள் ஐரோப்பியர்கள் கண்டு பிடித்து உபயோகிக்கிறார்கள்.

# சினிமா குறிப்புகள்

●

### மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்.

இக்கம்பெனியார் திரு. டி. ஆர். சுந்தரத்தின் டைரக்ஷனில் பத்மஜோதி என்ற படத்தை தயாரித்து வருகிறார்கள். இதில் அற்புதமான சில காட்சிகளிருக்கின்றன. முக்கிய நடிகர்கள் திரு. சங்கரனும், குமாரி பத்மாவும்.

### காளிதாஸ் பிலிம்ஸ், ஈரோடு.

இக்கம்பெனியார் கண்ணப்ப நாயனாரின் சரித்திரத்தை தமிழ் படமாக எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

### ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூடர்ஸ்.

'சிந்தாமணிக்கு' அடுத்தபடியாக இவர்கள் ஒரு சமூகப்படத்தை தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இப்படத்திற்குக் கதை வடுவூர். கே. துரைசாமி அய்யங்கார் எழுதி வருகிறாராம்.

### சங்கர் பிலிம்ஸ், சேலம்.

"அம்பிகாபதி அல்லது அரசிளங்குமாரி" என்ற கதையை இவர்கள் தமிழ்ப்படமாகத் தயாரிக்கப் போகிறார்கள். முக்கிய நடிகர் ஸ்ரீ. எம். கே. தியாகராஜபாகவதர். டைரக்டர் எல்லிஸ் ஆர். டங்கன்.

### சக்ஸஸ் பிக்சர்ஸ்

இப்பெயருள்ள புதிய கம்பெனியொன்று ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் "வேதாள உலகம்" என்னும் நாடகத்தை தங்கள் முதல் தமிழ் படமாகத் தயாரிப்பார்கள் என்று தெரிகிறது. தகுந்த நடிகர்களை பொறுக்கியிருக்கிறார்கள்.

### ஸ்டார் கம்பைன்ஸ்.

தெலுங்கு 'சாரங்கதாரா'வுக்குப் பிறகு இவர்கள் தமிழிலும், தெலுங்கிலும் ஒரு கதையை எடுக்க ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

### ஒலிம்பிக் பிக்சர்ஸ்.

இவர்கள் ராஜா சான்டோவை டைரக்டராக நியமித்து வடுவூர். துரைசாமி அய்யங்கார் எழுதிய ஒரு கதையை தமிழ்படமாக சென்னை நேஷனல் மூவிடோனில் எடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். மிஸ். கமலவேணி இதில் ஆக்ட் செய்வாராம்.

### சென்ட்ரல் ஸ்டுடியோஸ், கோயம்புத்தூர்.

'துக்காராம்' சரித்திரத்தைத் தமிழிலும் தெலுங்கிலும் படங்களாகத் தயாரிக்கிறார்கள். துக்காராமில் திரு. முசிரி சுப்ரமண்ய அய்யர் கதாநாயகனாக ஆக்ட் செய்கிறார்.

### பிரிமீயர் சினிடோன்.

இங்கு இவர்கள் "கந்தலீலா" என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்கள். இது முடிந்தவுடன் "கள்வர் தலைவன்" என்ற படம் எடுப்பார்கள்.

### வேல் பிக்சர்ஸ்

இவர்கள் தங்கள் புதிய ஸ்டுடியோவை கிண்டியில் சிறந்த முறையில் அமைத்து வருகிறார்கள். புதிய ஸ்டுடியோ அமைக்கப்படும் இடத்துக்கு 'வேல் நகர்' என்று பெயர். 'வல்லாள மகாராஜன்' துரிதமாகத் தயாராய் வருகிறது.

# ஆசிரியர் குறிப்புகள்

### மன்னர் மகுடாபிஷேகம்

மேமாதம் 12உ ஆறாவது ஜார்ஜ் மன்னர் லண்டன் மாநகரில் முடி புனைந்தார். அதனை யொட்டி அனேக வைபவங்களும், விழாக்களும் நடைபெற்றன. ஏகாதிபத்தியம் பூராவும் இவ்விழா ஒருவாறாகக் கொண்டாடப்பட்டது. மக்கள் மன்னரின் ஆளுகையை வரவேற்று மன்னர்பிரானை வாழ்த்தினார்கள்.

ஆறாவது ஜார்ஜ் வாலிபரே. இவர் 1895-ம் வருஷம் டிசம்பர் மாதம் 14உ ஸான்ட்ரிங்ஹாம் அரண்மனையில் பிறந்தார். இப்பொழுது இவருக்கு வயது 42 ஆகிறது. இவ்வளவு குறைந்த வயதில் மகத்தான பொறுப்பை இவர் திடீரென்று ஏற்கும்படி நேரிட்டது. அதை அவரும் நன்கு உணர்ந்து அதைப்பற்றி தான் மகுடாபிஷேகதினத்தன்று பேசிய பிரசங்கத்திலும் குறிப்பிட்டிருக்கிறார். "கிரீடம் ஏகாதிபத்தியத்தின் ஒற்றுமையைக் காட்டும் சின்னம்," என்று அவர் கூறியது வெகு உண்மை.

இன்று உலகத்தில் மன்னர் ஆட்சிகள் நீங்கி குடியரசுகளே மலிந்து கிடக்கும் போது இங்கிலாந்தில் மட்டும் முடியரசு கௌரவத்துடன் இருந்து வருவதற்குக் காரணம் ஏகாதிபத்யம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஜார்ஜ் மன்னரின் முந்திய வாழ்க்கை தேசத்தொண்டுக் கேற்றதாகவே இருந்து வந்திருக்கிறது. தன் நாட்டுக்காக 1914-ம் வருஷம் மஹாயுத்தகாலத்தில் சாதாரணப் போர் வீரர்களுடன் சரிசமானமாக நின்று போர் முனையில் சண்டை செய்திருக்கிறார். சமூக விஷயங்களில் இடையறா ஊக்கம் காட்டி வேலை செய்து வந்திருக்கிறார். இவரது மனைவி எலிஸபெத் ராணியாரும் மிகுந்த அன்பும், தங்கள் பிரஜைகளின் நன்மையைப் பெருக்குவதில் மிகுந்த ஆர்வமும் கொண்டவரே. இந்தியாவில் அதிருப்தி இருந்து வரும் இச்சமயத்தில் மன்னரும், ராணியும் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். இருதேசங்களும் பரஸ்பரம் நட்புடனும், நம்பிக்கையுடனும் வாழும் மார்க்கத்தை மன்னர்பிரான் பரந்தநோக்கத்துடன் துணிந்து செய்தால் இந்திய மக்கள் அவரிடத்து என்றும் மாறாத அன்புடன் இருப்பார்கள் என்பது திண்ணம். இந்தியா ஏகாதிபத்தியத்தில் ஓர் ஒப்பிலா மாணிக்கம். மன்னர் அதற்கு உண்மைப் பிரகாசத்தையும் ஜோதியையும் அளிப்பாரென்று நம்புகிறோம்.

... ... ...

### பர்தா

அல்பானியா ஒரு சிறிய தேசம். இதன் ஜனத்தொகையில் 70% முஸ்லீம்கள். இதை ஆள்பவர் ஸாக் மன்னர். இவர் சமீபத்தில் தன் நாட்டில் ஸ்திரீகள் பர்தாமுறையை அனுஷ்டிக்கக் கூடாதென ஒரு உத்தரவு போட்டு அமுலுக்கும் கொண்டு வந்து விட்டார். முக மூடியணிந்து மூச்சுத் திணறின நங்கையர் விடுதலை பெற்றனர். மதம் போய் விடவில்லை. கண்ணியம் குறைந்துவிடவில்லை. கடவுள் கோபமடைந்து அத்தேச மக்களை சபித்துவிடவில்லை. பர்தாமுறை ஸ்திரீகளின் அடிமைத்தனத்தைக் காட்டும் ஓர் அர்த்தமற்ற சின்னமாகும். அது எதற்காக எப்பொழுது வந்திருந்தாலும் இப்பொழுது அதைக்கையாள யாதொரு காரணமுமில்லை. அது ஸ்திரீகளின் கௌரவத்துக்கு மட்டும் ஹானியாயிருப்பது மன்னியில் அவர்களின் தேகசௌக்கியத்துக்கும் கெடுதலாக இருக்கிறது. தூயகாற்றும், தூயவெளிச்சமும் நம் சகோதரிகளுக்கு ஆகாதா? அவ்விருவஸ்துக்களும் இயற்கையன்னையின் வரப்பிரசாதங்களல்லவா?

பர்தா முறையை நம் நாட்டிலும் அநேக ஹிந்து, முஸ்லீம்கள் அனுஷ்டித்து வருகின்றனர். ஏதோ பழயகாலவழக்கம் என்ற எண்ணமே இன்னும் அவர்களை இத்தீயவழக்கத்தைக் கைவிட முடியாதபடி வைத்திருக்கிறது. மாதர்களின் முன்னேற்றத்தை விரும்பும் ஒவ்வொரு ஆடவரும், ஸ்திரீயும் இம்முறை ஒழியுமாறு செய்ய வேண்டும். ஆண்டவன் ஒருக்காலும் தன் மக்களில் ஒரு பகுதி கூண்டுக்குள் அடைபட்டுக்கிடக்கவேண்டும் என்று நினைக்க வில்லை. இது விஷயத்தில் நம் சகோதரிகள் தான் துணிந்து வேலை செய்ய முன்வரவேண்டும்.

... ... ...

## ஸ்திரீகளே கவனித்துக் கொள்வரா?

சமீபத்தில் செட்டி நாட்டில் செய்த ஒரு சொற்பொழிவில் "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் ஸ்திரீகள் சம்பந்தமாகப் பேசும்பொழுது "தங்களுடைய தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ள முயலுகிறார்கள். இது நியாயமானது. விதவாவிவாஹம் செய்து கொள்ள விரும்பும் பெண்கள் அவர்களே முன் வந்து மணஞ்செய்து கொள்ளட்டும். இதற்காக ஆண்கள் முன்வந்து விதவா விவாஹம் என்று வேலை செய்வது அர்த்தமற்றது. பெண்கள் விதவா விவாஹம் செய்து கொள்ளவேண்டு மென்றால் அவர்கள் மகாநாடுகள் கூடித்தீர்மானஞ் செய்து கொள்ளட்டும். ஆண்கள் அதைப்பற்றி யாதுஞ்செய்ய வேண்டா" என்று கூறி இருப்பதாகப் பத்திரிகையில் கண்டோம்.

திரு. வி. க. சிறந்த சீர்திருத்தவாதி. பெண்களைப் போற்றுவதில் கவிச்சக்கிரவர்த்தி பாரதியும் திரு. வி. க. அவர்களும் ஒன்றெனலும் பொருந்தும். பெண்களின் விடுதலையின் அவசியத்தை வெகுகாலமாக திரு. முதலியார் வற்புறுத்தி எழுதியும் பேசியும் வந்திருக்கிறார்கள். "பெண்தெய்வங்கள்" என்பது அவருடையவாக்கு.

ஆனால் ஸ்திரீகள் அவர்களுக்குத் தேவையானவைகளைத் தாங்களே பார்த்துக் கொள்ளுவார்கள். ஆடவர்கள் அதில் தலையிடவேண்டாம் என்று கூறுவது எம் போன்றவர்களுக்கு ஆச்சர்யத்தை விளைவிக்கின்றது. இப்பொழுது ஸ்திரீகளிடை அறியாமை அதிகம். பெரும்பான்மையோர் தங்கள் குறைகள் என்னவென்பதையே அறியாமலிருக்கிறார்கள். அடிமைத் தளையின்பயனாய் நன்மையெது, தீமை எது என உணரும் சக்தியே அனேகரிடம் இல்லை. அவர்கள் கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் மதவிஷயங்களில் ரொம்பவும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள். தாங்களே தங்கள் தேவைகளையுணர்ந்து அவைகளையடையக் கூடிய சக்தி அவர்களிடம் இன்னும் ஏற்படவில்லை என்ற உண்மையை எவ்வளவு தீவிர சீர் திருத்தவாதியும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த நிலையில் அவர்களே தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுதல் முன்னேற்ற வேகத்துக்குத் தடை நடை முறையில் ஏற்படும். மேலும் இருபாலாரும் இசைந்து சீர்திருத்த மார்க்கத்தில் இறங்கினால் தான் காரியசித்தி பல அம்சங்களில் ஏற்படும். 'விதவா விவாஹம் தாங்களே விரும்பியவர்கள் முன் வந்து செய்து கொள்ளட்டும்' என்றால் ஆண்களும் முன் வந்து நின்றால் தானே மறுமணம் நடைபெறும். எனவே இன்றிருக்கும் நிலையில் ஆடவர்களின் உதவியை ஸ்திரீகள் நாடுவதிலும், ஆடவர்கள் ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்காக மனமுவந்து முன் வந்து வேலை செய்வதாலும் மாதர்களுக்கு நன்மையே தவிர யாதொரு தீமையும் விளையாது என்று நாம் கூறுகிறோம். அதே பிரசங்கத்தில் அவ்வளவு ஆவேசத்துடன் பேசியபோதும் "அதற்காக, ஆண்கள் பெண்களைப் பற்றியே கவலை கொள்ளக்கூடாதென்கிறதாக எண்ணாதீர்கள்" என்றும் திரு. முதலியாரே கூறியிருப்பது ஸ்திரீ புருஷர்கள் இருவரும் கவனிக்கற்பாலது.



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937௵ ஜூன்௴ ஈசுவர௵ வைகாசி - ஆனி௴<br>திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 19 | செவ் | ஸப் 43-28, அவி 19-14, ரா 5-34. |
| 2 | 20 | புத | அஷ் 41-29, சத 19-43, ரா 3-34. |
| 3 | 21 | வியா | நவ 37-47, பூட் 18-26, ரா 9-28. |
| 4 | 22 | வெ | தச 32-32, உட் 15-34, ரா 11-34, தசமிதிதி. |
| 5 | 23 | சனி | ஏகா 25-48, ரே 11-13, திதிதுவயம், ஸர்வைகாதசி. |
| 6 | வைகாசி௴ 24 | ஞாய | துவா 17-57, அசு 5-40, உப 53-38, சே 0-36. |
| 7 | 25 | திங் | திர 9-18, உப 50-16, * 52-23, தி 25-51, சிவரா. |
| 8 | 26 | செவ் | ● 51-14, ரோ 45-22, தி 27-48. |
| 9 | 27 | புத | பிர 42-27, மிரு 38-37, சே 1-47, ஜ்யேஷ்டசுத்தம். |
| 10 | 28 | வியா | துவி 34-24, ஆரு 32-30, சே 1-29, ஸத்தியஸந்தர். |
| 11 | 29 | வெ | திரி 27-21, புந 27-33, தி 0-1, ரா 14-29. |
| 12 | 30 | சனி | சது 21-54, பூச 24-4, ரா 23-13, திதிதுவயம், நமிநந்தி. |
| 13 | 31 | ஞாய | பஞ் 18-11, ஆயி 22-17, ரா 20-27, ஷஷ்டி திதி. |
| ஜூன்௴ 14 | 1 | திங் | ஷஷ் 16-17, மக 22-25, ரா 11-12, மிதுனரவி 17-25. |
| 15 | 2 | செவ் | ஸப் 19-24, பூர 24-30, ரா 11-43, சீவரம் கருடன். |
| 16 | 3 | புத | அஷ் 17-8, உத் 28-17, ரா 19-17, நவமி திதி. |
| 17 | 4 | வியா | நவ 21-44, ஹஸ் 33-45, ரா 24-4, அதிதி. |
| 18 | 5 | வெ | தச 26-50, சித் 40-28, தசமிதிதி, பாபஹரதசமி. |
| 19 | 6 | சனி | ஏகா 32-46, ஸ்வா 47-57, சே 0-13, கரிநாள். |
| 20 | 7 | ஞாய | துவா 39-6, விசா 55-41, தி 3-45, ஸ்ரீ முஷ்ணம், ஜ்யேஷ்டாபிஷேகம், கூர்ம ஜயந்தி. |
| 21 | 8 | திங் | திர 45-25, அநு 60-0 தி 5-58, கடகாயனம் 50-8. |
| 22 | ஆனி௴ 9 | செவ் | சசி 51-21, அநு 3-20, தி 19-2, ஜ்யேஷ்டாபிஷேகம். |
| 23 | 10 | புத | ○ 56-38, கேட் 10-36, ரா 0-51. |
| 24 | 11 | வியா | பிர 60-0, மூல 17-10, தி 12-44, ரா 11-29. |
| 25 | 12 | வெ | பிர 1-4, பூரா 22-48, ரா 12-26, ஸத்திரபூர்ணர், திருவல்லிக்கேணி ரதம், திருவள்ளுவர். |
| 26 | 13 | சனி | துவி 4-38, உரா 27-31, ரா 6-11, ரகுவரியர். |
| 27 | 14 | ஞாய | திரி 6-41, ஸ்ரீவ 30-59, ரா 9-27, சதுர்த்தி திதி. |
| 28 | 15 | திங் | சது 7-49, அவி 33-16, ரா 19-40, பஞ்சமி திதி. |
| 29 | 16 | செவ் | பஞ் 7-38, சத 34-19, ரா 18-21, ஷஷ்டி திதி. |
| 30 | 17 | புத | ஷஷ் 6-9, பூட் 34-8, ஸப்தமி திதி. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்க்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரிமீ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்மீ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. K. N. Kesari at the Lodhra Press, Egmore, Madras.


## பிரகாசம் ரோல்ட் கோல்ட் நகைகள்




பத்து வருஷம் உத்தரவாதம்

மலிவானது! நீடித்துழைப்பது!!

நிறம் மாறாது!!!

நீங்கள் மலிவாக பேரம்செய்து பணம் சேமிக்க விரும்புகிறீர்களா?

"அணிவதற்கு அழகு, மங்கையரையும், மதலைகளையும் மாண்புறச் செய்வது."

சிகப்பு, பச்சை, நீலம், வானவில் கலர் சின்தெடிக் கற்கள் இழைக்கப்பட்ட பிரகாசம் கல் சங்கிலியை வாங்குங்கள். ஒரு கலர் அல்லது இரு கலர் அல்லது பல கலர் கற்கள் பதித்த சங்கிலிகள் உங்கள் தேவைக்குத் தகுந்தபடி செய்து தருகிறோம்.

எங்களிடம் பலரக வளையல்கள் கழுத்துச் சங்கிலிகள், ஒட்டியாணம் முதலியன கிடைக்கும்.

(1937-ம் வருஷத்திய கேடலாக் இனம்.)

**ஆர். எஸ். பிரகாசம் & கோ.,**
அலாய் கோல்ட் நகை வியாபாரிகள்,
187, சைனா பஜார் ரோட், மதராஸ்.

## சௌந்தரிய அபிவிருத்திக்கு

### குந்தலகாந்தி தைலம்

ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்த நிறமுடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத்தைலத்தை தினத்திற் கொருமுறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகு தரும்.

புட்டி 1க்கு விலை அணா 12.

### கேஸரி போமேட்

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும், அழகாகவும் இருக்கும். இந்துதேச போர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது. வாசனை யுள்ளதும், வாசனை யில்லாததுமாக இரண்டு விதங்களில் கிடைக்கும்.

புட்டி 1க்கு விலை அணா 4.

கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.

## அழகான அச்சுவேலைகளே

**லாபகரமான தீவிர விற்பனைக்கு காரணமாகும்**

எல்லா விதமான அச்சுவேலைகளையும் அவரவர்கள் அவசரத்திற்கு தக்கபடி நேர்த்தியாக செய்து கொடுப்போமென்று உங்கள்

**அனுபவத்திலேயே தெரிந்துக்கொள்ளுங்கள்**

## லோத்ரா பிரஸ் - மதராஸ்

Trade Mark

Regd. No. 1983

விலை தோடு சைஸ்
கமலம் ஒன்றுக்கு
அணு எட்டு

விலை பேசரி சைஸ்
கமலம் ஒன்றுக்கு
அணு ஆறு

ஒரிஜினல்

## கல்ச்சர் வைரங்கள்

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனம்!

சொ. அருணசலம் செட்டி,
மு. ராமசாமி செட்டி,
ஷுருப்பு வியாபாரம், திருச்சினுப்பள்ளி.

## வாஜீகர

(REGD.)

**ஓர் வரப்பிரஸாதம்**

ஆச்சரியமாக சீக்கிரத்தில்
யௌவனம் தரும்.

இதற்கு நிகர்வேறொன்றில்லை.

பெரியபுட்டி ரூ 5. சிறியபுட்டி ரூ 2-8.

மலபார் ஆயுர்வேதிக்
ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை.







**சுவை மிகுந்த**

**உண்டிகள் — பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—
உல்லாசமான இடம்—நல்ல காற்றோட்டம்
முதல் தரமான வசதி.

## சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**



# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்



**ஏன் நீங்களும் இன்றிருந்தே இதைக் கையாண்டு இதன் அபார மான பலனை அடையக்கூடாது?**

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# தேஸாயின் பற் பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை பளிங்குபோல் வெண்மைப் படுத்தி, அழகு செய்வது மன்னியில் பற்களுக்கு வசீகரத்தையும், ப்ரகாசத்தையும், மதுரத்தையும், அரிய பலத்தையும், தேகத்திற்கு சுகத்தையும் தருகிறது.

விலை டியூப் 1-க்கு அணா 8

REGD. No. M-3660 JUNE 1937


# KING OF TONICS




அமிருதா நரம்புகளுக்கு வலு வளிக்கும் மருந்து.